157

குண்டூசி

மார்ச்.............எட்டு அணா



OFFICE OF THE REGISTRAR ...
15 APR 1950
MADRAS

ஜூபிடரின்

விஜயகுமாரி

மார்ச் 18உ முதல் தமிழ்
நாடெங்கும் ஆரம்பம்

JUPITER PICTURES CIRCUIT

பிரதிபாவின

ஸ்ரீலக்ஷ்மம்மா கதை

தயாரிப்பு, டைரெக்ஷன் :

ஜி. பலராமய்யா

ஆந்திரா, ஸீடட், நிஜாமுக்கு :
பூர்ணா வெளியீடு

மைசூருக்கு :
தள்ளம் வெளியீடு

அஞ்சலி தேவி, நாகேஸ்வர ராவ்
சிவராவ், பிரபாகர், காடேபள்ளி
ஜி. வரலக்ஷ்மி, சூர்யபிரபா,
சேஷமாம்பா நடித்தது

உங்களுக்குத் தேவையான எல்லாவித ஜவுளி
களுக்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்

MEERANS

மீரான்ஸ்

பக்கிங்காம் கர்னட்டிக் மில் ஜவுளிகள், மேட்டூர் மில்
ஜவுளிகள், பம்பாய், அஹமதாபாத் மில் ஜவுளிகள்

இவைகளுக்கு வினியோகஸ்தர்கள்

மற்றும் ட்வீட்கள், உல்லன், வெளி நாட்டு ஜவுளிகள்
முதலிய எல்லாம் கைவசமுள்ளன.

எஸ். மீரா சாகிப்
.....அண்ட் பிரதர்ஸ்....
38, ஈவ்னிங் பஸார் ரோடு & 19. கிடங்கு தெரு, சென்னை.

ஸ்தாபிதம் 1920

தந்தி: நஸ்யம்
மதருஸ்

P. V. RAJAN'S SUPERIOR MADRAS SNUFF

TRADE MARK

உலகமெங்கும்
புகழ் பெற்றது.
பல எக்ஸிபிஷன்
களில் மெடல்கள்
பரிசு பெற்றது.

நெ. 1 எக்ஸ்ட்ரு
ஸ்பெஷல்
பட்டணம் பொடி
ஒரு தோலா டின்க
ளிலும் கிடைக்கும்.

பி. வி. ராஜன் & கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி
& R. S. சுகந்த மூக்குத்தூள் பாக்டரி
அரக்கோணம் & மதருஸ்.

(மற்ற பொடி தினுசுகளுக்கும், விவரங்களுக்கும் எழுதவும்.)

1950-51ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1950-51ற்குள் ஏற்படக் கூடிய நன்மை தீமைகளை முன் கூட்டி அறிய விரும்பினால், ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. *1—4—0* (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

SHREE SATNARAIN JYOTISH ASHRAM, (G.M.) Nakodar. (Punjab)

ரூ. 1000 பரிசு!

அற்புத சக்தி வாய்ந்த

மாய மோதிரம்

இந்த மோதிரம் மந்திர சக்தி, வசிய சக்தி இவைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இதன் சக்தி அற்புதமானது. இதை அணிபவர்களுக்கு கஷ்டமான காரியங்களும் சித்தியாகும். ஆபத்துகளிலிருந்தும், வியாதிகளிலிருந்தும் உங்களைக் காக்கும். கிரகங்களின் கெட்ட பலன்களை தடுக்கும். இதை அணிந்து கொண்டால், எப்பேற்பட்ட கல்நெஞ்சுடைய ஆண் பெண்களையும் உங்கள் சொல்படி நடக்கும்படிச் செய்துவிடலாம். காதல் விஷயங்களிலும்; வழக்குகளிலும், உத்தியோகத் துறையிலும் நீங்கள் வெற்றிபெற்று தனவந்தராகலாம். சுருங்கச் சொல்ல வேண்டுமானால், இம்மோதிரம் உங்களுக்கு மெய்க் காப்பாளனாய் விளங்கும். இதை அணிந்த முதல் நாள் இரவே அதன் சக்தியைப் பரீக்ஷித்துப் பாருங்கள்.

விலை ரூ. **1-8-0.** தபால் செலவு தனி. வெளிநாடு : 5 ஷில்லிங் B.P.O.
மூன்று மோதிரங்களுக்கு ரூ. **3-8-0**தான்.
தபால் செலவு தனி. வெளிநாடு : 8 ஷில்லிங் B.P.O.

பலன் இல்லையென்று நிரூபித்தால் பணம் வாபீஸ்

Prop: **BENGAL MESMERISM HOUSE,** *(G.M.) Nakodar. (Pb).*





வெகு நேர்த்தியான எபினேட் ப்ளாக் பௌண்டன் பேனு விலை ரூ. 1—10—0. மார்பிள் சிகப்புப் பேனு ரூ. 2—4—0. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும். தபாலில் பெற, முன் பணம் அனுப்பவும்

அப்பர் பௌண்டன் பேனு

3, ரத்தின முதலி தெரு,

(சிவஞானம் பார்க்குக்கு அருகில்)

கொண்டித்தோப்பு,

ஜி. டி. சென்னை

குண்டூசி

மார்ச் 1950

இந்த ஊசியில்

திட்டம் அவசியம்
—தலையங்கம் 5

பரஸ்பரம் 7

காந்திஜி ஸ்தூபி நிதி 8

பி. கே. சரஸ்வதி
— வாழ்க்கை வர்ணனை ... 10

பி. கே. சரஸ்வதி
—மூவர்ணப் படம் 17

லக்ஷ்மி பிரபா
—ஆர்ட் படம் 18

சந்துருவின் சஞ்சலம் (சிறுகதை)
—பத்மபாரதி 19

குண்டூசியைக் கேளுங்கள் ... 23

செய்திப் படங்கள் 31

நுனிப்புல்
—'வெட்டுக்கிளி' 39

நக்ஷத்திரக் காதல் (சிறுகதை)
—"கோகுலன்" 44

நடனம் ஆடினர்
—"நந்தி" 46

கலியுக பீமன் கேசவன்
—வெ. நாராயணன் 48

ஜுபிடர் "விஜயகுமாரி"
—பட அநுபந்தம் 55

இது செய்தி 59

பிரம்மலோகம் 64

குண்டூசி டைரி 68

வருஷ சந்தா

இந்தியா, இலங்கை ... ... ரூ. 6
வெளிநாடுகள் ... ... ரூ. 9

தனிப் பிரதி

இந்தியா: 8 அணு. வெளிநாடு 12 அணு.
இலங்கை : 50 சதம்.

குறிப்பு :—"குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகள், விகடத்துணுக்குகள் முதலியவைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

“நான் பிரஸிடெண்ட் வெஜிடேபிள் ஹேர் ஆயிலை உபயோகித்திருக்கிறேன். அது கேசத்திற்கு ஆரோக்கியம் அளிக்கும் ஒரு சிறந்த கூந்தல் தைலம். என் அனுபவத்தில் கண்டேன். நல்ல கூந்தல் வளர்ச்சிக்கு அது உதவுவதுடன் தேகத்திற்குக் குளுமையையும் அளிக்கிறது.”

8-3-50

PRESIDENT *VEGETABLE* **HAIR OIL**

RATHOD TRADING CO., SOWCARPET. MADRAS. I.

வேண்டுகோள்

எனது புதல்வன் நாராயணசாமி (10-3-50) வெள்ளி முதல் காணவில்லை. அவனை யாராகிலும் கண்டால் அடியில் கண்ட விலாஸத்திற்குக் கொண்டுவந்து சேர்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அவனுடைய அடையாளம்: வயது 5, மாநிறம், தலைமயிர் இன்னும் வாங்காமல் அப்படியே இருக்கும். முன்பல் இரண்டு இருக்காது. இந்த அடையாளத்துடன் கண்டால் தயவு செய்து கீழ்க் கண்டவரிடம் கொண்டுவந்து சேர்த்தால் தகுந்த வெகுமதி அளிக்கப்படும்.

இப்படிக்கு:
கிருஷ்ணசாமி,
நெ. 5, டெலிகிராப்
அப்பாய் நாயுடு லேயன்,
கொண்டித் தோப்பு.
சென்னை.

லைன்
ஆப்டோன் & கலர்
பிளாக்குகள்
சுத்தமாக செய்யுமிடம்
அசோகா பிராசஸ்
11. மக்ளீன் தெரு
சென்னை. 1.

குண்டூசி

பட்டை-3 மார்ச்சு

ஊசி-6 ஆசிரியர்: பி. ஆர். எஸ். கோபால் 1950

நிகரற்ற விநியோகமுள்ள சினிமா மாத வெளியீடு

திட்டம் அவசியம்

"*வீட்டைக் கட்டிப்பார்; கலியாணத்தைப் பண்ணிப் பார்*" என்று சொல்லுவார்கள். இதோடு, "படத்தைப் பிடித்துப் பார்" என்றும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென நம் பட முதலாளிகள் கேட்கக்கூடும்.

ஆனால், இதெல்லாம் தவறான எண்ணமாகும். இந்தக் காலத்தில் சாதாரண வீடுகளை மட்டுமல்ல; பிரம்மாண்டமான மாளிகைகளைக் கூடக் கட்டுவதற்கு எவ்வளவு செலவு ஆகும் என்று என்ஜினியர்கள் முன் கூட்டியே மதிப்புப் போட்டுச் சொல்லி விடுகிறார்கள். அதன்படியே கட்டியுங் காட்டுகிறார்கள். கலியாணங்களைக்கூட தாராளமாய் திட்டம் போட்டுக் கொண்டு கையிலுள்ள ரூபாய்க்குள்ளாகச் செய்ய முடியாதென்பதில்லை. சினிமாப் படத்தையும்கூட இதேபோல குறிப்பிட்ட தொகையில், திட்டப்படி தயாரித்து விடலாம் என்பதை 'ஜெமினி' எஸ். எஸ். வாஸன் தம் "சந்திரலேகா" மூலம் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

"சந்திரலேகா" படத்தை ஸ்ரீ. வாஸன் ஒரு பிரம்மாண்டமான படமாகத் தயாரிப்பதென்று தீர்மானித்தார். அதற்கு எவ்வளவு பணம் செலவு செய்வது, எந்தெந்த மாதிரியில் செலவு செய்வது, என்பதை முன்னடியே புள்ளி போட்டுக் கொண்டார் தமிழ் "சந்திரலேகா" மூலம் எவ்வளவு வசூல் ஆகும், ஹிந்தி "சந்திரலேகா" மூலம் எவ்வளவு வசூல் ஆகும் என்பதையெல்லாம் சரியானபடி கணக்குத் தயாரித்துக் கொண்டு, தைரியமாக 43 லக்ஷ ரூபாயை மூலதனமாகப் போட்டார். அவர் போட்ட திட்டப்படியே படமும் வெற்றி பெற்று, அவர் எதிர்பார்த்ததைவிட அதிக லாபத்தை அளித்திருக்கிறது.

"சந்திரலேகா"வை யாரும் "குருட்டுத்தனமான வெற்றி" என்று சந்தேகிப்பதற்கில்லை. குருட்டுத்தனமானமுறையில் இவ்வளவு பெரிய தொகையை எந்தப் படமுதலாளியும் செலவழிக்கத் துணியமாட்டார். அதுவும், கணக்கு வழக்குடன் காரியங்களைச் செய்து முடிப்பதில் பிரசித்தமான ஸ்ரீ. வாஸனா அந்த மாதிரிச் செய்யக் கூடியவர்?

"சந்திரலேகா" படத்திற்கு ஸ்ரீ. வாஸன் எந்த மாதிரியில் திட்டம் போட்டுச் செலவு செய்திருக்கிறார், எவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது, என்பதையெல்லாம் ரஸிகர்கள்—ஏன், பட முதலாளிகள் கூட—அறிய விரும்புவார்கள். இந்த விவரங்கள் ரஸமானதாய் இருப்பதோடு, இந்திய சினிமாத் தொழிலுக்கே கண் விழிப்பை ஏற்படுத்தக் கூடியதாய் இருப்பதால் அந்த விவரங்களைக் கீழே தருகிறோம்:

தமிழ், ஹிந்தி "சந்திரலேகா" படங்களின் புள்ளி விவரங்கள் (31-12-49-முடிய)

227 காப்பிகள் உள்பட படத் தயாரிப்புச் செலவுகள்	... ரூ. 30,83,200
ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, ஹிந்தி, அஸாமீஸ், குஜராத்தி, மாராத்தி, ஒரியா, வங்காளி, உருது ஸிந்தி குருமுகி பாஷைப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தது	... ரூ. 5,74,500
பானர்கள், போஸ்டர்கள் போன்ற இதர விளம்பரச் செலவுகள்	... ரூ. 6,42,300
ஆக மொத்தம்	ரூ. 43,00,000

இனி, தயாரிப்புச் செலவை ஸ்ரீ. வாஸன் எப்படிச் செய்திருக்கிறார் என்பதைக் கவனிப்போம் :—

இப்படத்தில், பிரதம நடிகர்கள் 22, உப நடிகர்கள் 28, நடனம் ஆடுபவர்கள் 768. 'எக்ஸ்ட்ரா'க்கள் 1737, டெக்னிஷ்யன்கள் 193. தொழிலாளர்கள் 446, சங்கீத கோஷ்டி 63, சிருஷ்டிகர்த்தர்கள் 38, நிர்வாகிகள் 64, எதிர்பாராத ஊழியர்கள், (டாக்டர்கள், நர்ஸ்கள் முதலியோர்) 22. ஆகமொத்தம் 3381 பேர்கள்.

3381 பேர்களுக்கு சம்பளம்	... ரூ.	6,87,500
ஸெட்டிங்ஸ்	... ரூ.	3,27,600
ஆடையாபரணங்கள்	... ரூ.	1,22,300
காட்சி சாமான்கள்	... ரூ.	62,400
ஸர்க்கஸ், கவர்னர்ஸ் பாடிகார்டு (குதிரைகள்) மலபார் ரிஸர்வ் போலீஸ்	ரூ.	1,74,300
ஆகமொத்தம்	ரூ.	13,74,100

[தயாரிப்புச் செலவினத்தில் பாக்கியுள்ள தொகை வெத்து பில்ம்களுக்கான கிரயம் என்று தெரிகிறது.]

தமிழ் "சந்திரலேகா" படம் 9-4-1948-ந் தேதியன்றும், ஹிந்தி "சந்திரலேகா" படம் 24-12-1948-ந் தேதியன்றும் வெளிவந்தன. 31-12-49 முடிய இவ்விரு பாஷைப் படங்களும் மொத்தம் 1090 தியேட்டர்களில் காண்பிக்கப்பட்டுள்ளன. இத்தியேட்டர்களின் 28,340 ஊழியர்கள் இதன் மூலம் ஊதியம் பெற்றுள்ளனர். இவ்விரு படங்களையும் இந்தியா பூராவிலும், 1,19,08,144 நகர வாசிகளும், 1,84,56,626 கிராம வாசிகளும், ஆகமொத்தம் 3,03,64,770 பேர்கள் (31-12-49 முடிய) பார்த்திருக்கிறார்களாம். இதிலிருந்து இப்படத்தைப் பார்த்த மொத்தப் பேர்களில் கிராம வாசிகள் 60 சத விகிதமாகின்றனர்,

"சந்திரலேகா" படத்தின் வசூல் விஷயம் மேலும் சுவாரஸ்யமாயிருக்கும். அதையும் கீழே தருகிறோம் :—

31-12-49 முடிய படத்திற்கு வசூலானது	... ரூ.	1,55,05,817
இதில் தமாஷா வரியாகக் கொடுத்தது	... ரூ.	32,90,501
31-12-49 முடிய நிகர வசூல்	... ரூ.	1,22,15,316
இதில் படமுதலாளிகளின் பங்குக்குக் கிடைத்தது	... ரூ.	73,94,519

31-12-49-வரை இப்படம் ரூபாய்க்குப் பத்தணா பாகம் தான் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. இனி இரண்டாந்தர மூன்றாந்தர வெளியிடுகள் மூலமும் வருமானம் வரவிருக்கிறது.

"சந்திரலேகா" இந்திய சினிமா சரித்திரத்திலேயே ஈடு இணையில்லாத புரட்சியை உண்டுபண்ணிவிட்டது. வட இந்திய சினிமா ஜாம்பவான் (பட முதலாளி)களெல்லாம் ஸ்ரீ. வாஸனின் வெற்றியைக் கண்டு ஆச்சரியத்தில் திறந்த வாயை மூடாமலிருக்கின்றனர்.

"சந்திரலேகா"வின் புள்ளி விவரங்கள் இந்தியப் பட முதலாளிகளுக்கு ஒரு முக்கியமான பாடத்தைக் கற்பிக்கிறது. "தொழில் விஷயங்களை நன்கு பரிசீலனை செய்து, சரியான திட்டம் வகுத்துக் கொண்டு படத்தைத் தயாரித்தால் மட்டுமே படம் நிச்சயமான வெற்றி பெறும்" என்பதற்கு இப்படத்தின் ஒரு உதாரணமே போதுமானது.

நம் தமிழ்ப் பட முதலாளிகளும் ஏதோ ஒரு மாதிரியான திட்டத்தைப் போடுகிறார்கள். ஆனால் அத்திட்டங்கள் தவறான முறையில் வகுக்கப் படுவதால், மூன்று லக்ஷ ரூபாய்க்குப் பதில் முப்பது லக்ஷ ரூபாய் செலவாகி, முழுத் தோல்வியாகவும் முடிகிறது. 43 லக்ஷ ரூபாய் படமான "சந்திரலேகா"விற்கு மொத்த செலவில் ஆறில் ஒரு பங்கு (6¾ லக்ஷம்) தான் (நக்ஷத்திரங்கள் உள்பட) சம்பளமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் விளம்பரத்திற்கோ நாலில் ஒரு பங்கிற்கும் அதிகமாகவும் (12-1/6 லக்ஷம்) செலவழிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், நம் பட முதலாளிகளின் வழக்கமெல்லாம் தலைகீழ்ப் பாடம். படச்செலவில் ஆறில் ஒரு பங்கையோ, அல்லது ஐந்தில் ஒரு பங்கையோ ஒரே ஒரு நக்ஷத்திர நடிகைக்கு மட்டுமே கொடுத்து விடுகிறார்கள். பிறகு, படத்தை வெளியிட வேண்டிய காலத்தில் பட முதலாளியின் பணக் கஷ்டம் எல்லை மீறிப் போவதால், தங்கள் படங்களை சொற்ப விளம்பரத்துடனோ, அல்லது விளம்பரமே இல்லாமலோ வெளியிட்டு வருகிறார்கள். இந்த ஒரு விஷயத்திலிருந்தே, நம் தமிழ்ப் பட முதலாளிகளில் பெரும்பாலோர், "எந்த இனத்தில் அதிகமாகச் செலவழிக்க வேண்டும்; எந்த இனத்தில் செலவைக் குறைக்க வேண்டும்" என்பது தெரியாமல் தவிக்கிறார்கள் என்பது தெரிகிறதல்லவா?

ஸ்ரீ. வாஸன் தம் அபார அறிவினால் படத்தயாரிப்பை ஒரு கணக்காக மாற்றிக் காட்டியிருக்கிறார். "ஸ்ரீ. வாஸனைப் போல தாமும் ஆகிவிட வேண்டும்" என்று கனவு காணும் பட முதலாளிகள் வெறுமனே கனவு காண்பதை விட்டு, வாஸனின் திட்டம் வகுக்கும் திறமையைச் சரியாகப் புரிந்து கொண்டு, அவரைப் பின்பற்றினால், நிஜமாகவே அவர்களும் "வாஸன்களாக" மாற முடியும். நம் படத் தொழிலும் நசித்துப் போகாமல் நல்ல வளர்ச்சி பெறும்.

பரஸ்பரம்

சென்ற மாத ''ஊசி''யில், ''காந்திஜி ஸ்தூபி நிதி'' போன்ற விஷயங்களெல்லாம் நம் சினிமா நக்ஷத்திரங்களின் மனதில் தாமதமாகத்தான் பதியும். அவர்கள் சீக்கிரமே மனம் வைக்கவேண்டும்'' என்று எழுதியிருந்தேன். பத்திரிகை வெளிவந்த சில தினங்களிலேயே, பிரபல ஹாஸ்ய நடிகர் டி. ஆர். ராமச்சந்திரனிடமிருந்து பின்கண்ட கடிதம் எனக்குக் கிடைத்ததும், ''நம் சினிமா நக்ஷத்திரங்கள் மனம் வைக்கத் தீர்மானித்து விட்டார்கள்'' என்று சந்தோஷிக்க ஆரம்பித்தேன் :—

''குண்டூசி'' ஆசிரியர் அவர்களுக்கு,

''நமஸ்காரம். தாங்கள் 'காந்திஜி ஸ்தூபி நிதிக்காக சினிமா உலகினரிடம் பண வசூல் செய்து தர முன்வந்ததற்கு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

''காந்திஜியின் ஞாபகார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த நல்ல காரியத்தில சினிமா, நாடக நடிக, நடிகைகள் எல்லோரும் தம்மாலான அளவு உதவ வேண்டியது கடமை என்று நம்புகிறேன்.

''நம் இந்தியப் பிதாவுக்கு அடிபணிந்து, என் காணிக்கையாக ரூ. 501க்கு இத்துடன் ஒரு 'செக்'கை அனுப்பியிருக்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

(ஒப்பம்) டி. ஆர். ராமச்சந்திரன்

நெ. 9 கோட்ஸ் ரோடு,
தி. நகர், சென்னை.''

நான் இந்தக் கடிதத்தைப் படித்ததும் இரட்டிப்புச் சந்தோஷம் அடைந்தேன். மளமளவென புகழ் அதிகரித்து வரும் டி. ஆர். ராமச்சந்திரன் இந்த முதல் காணிக்கையை அளித்துள்ளதால் இந்த நிதியும் மளமளவென்று வளரும் என்பது ஒன்று. அவர் பெரிய தொகையாக அளித்து மற்றவர்களுக்கு வழி காட்டியிருப்பது மற்றொன்று.

ராமச்சந்திரன் காட்டிய வழியை உடனடியாக பின்பற்றியுள்ள நடிகை எம். லக்ஷ்மி பிரபா ஆவார். அவர் இந்த நிதிக்கு ரூ. 101 காணிக்கையாக அளித்திருக்கிறார்.

நடனத்திலும், சங்கீதத்திலும் தேர்ச்சி பெற்றவரான லக்ஷ்மி பிரபாவை நீங்கள் ''கீதகாந்தி'', ''அபூர்வ சகோதரர்கள்'' ''கிருஷ்ண விஜயம்'' ஆகிய மூன்று படங்களில் பார்த்திருப்பீர்கள், ''அபூர்வ சகோதரர்கள்'' படத்தில் ஜமீன்தாரின் மனைவியாக பாராட்டத் தக்கபடி நடித்திருப்பவர் இவர்தான். இவரை மாடர்ன் தியேட்டர்ஸார் தங்கள் ''திகம்பர சாமியார்'' படத்திற்காக ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். விரைவில் முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் லக்ஷ்மி பிரபா காந்திஜி நிதிக்கு காணிக்கை அளிப்பதிலும் முன்னணியில் வந்து நின்றது மிகப் பொருத்தமே அல்லவா?

டி. ஆர். ராமச்சந்திரன்

குட்டி நடன நக்ஷத்திரம் சாருபாலா நிதிக்கு ரூ. 51 அனுப்பியிருக்கிறாள். அடுத்த மாதம் கும்பகோணத்தில் ஒரு கச்சேரி செய்து, வசூல் தொகையை நம்மிடம் அளிக்கவும் போகிறார்.

மற்றும் அநேக சினிமா நக்ஷத்திரங்களை இந்த மாதம் நிதி சம்பந்தமாக சந்தித்தேன். அவர்கள் எல்லோரும் காணிக்கை அளிப்பதாக வாக்களித்திருக்கிறார்கள்.

நாம் நிதி வசூலிப்பில் எவ்வளவு உத்ஸாகம் காட்டுகிறோமோ அது போலவே டிரைவர் ஆறுமுகத்திற்கும் அளவு கடந்த உத்ஸாகம். ஒவ்வொரு நக்ஷத்திரத்தையும் பார்த்துவிட்டு வந்தவுடன் ''எவ்வளவு ரூபாய், ஸார்?'' என்று கேட்பார். அப்பொழுது அவருடைய ஆவலைப் பார்க்கவேண்டுமே!

காந்திஜி நிதிக்கு இம்மாதம் காணிக்கை அளித்தவர்களுக்கும், அளிப்பதாக வாக்களித்துள்ளவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அடுத்த மாதம் நக்ஷத்திரங்களின் காணிக்கை நிறைய இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

காந்திஜி ஸ்தூபி நிதி

"குண்டூசி" மூலம் இம்மாதம் வசூலிக்கப்பட்டது

ரூ. 794—4—6

காமெடியன் டி. ஆர். ராமச்சந்திரன், சென்னை	501	0	0
எம். லக்ஷ்மி பிரபா, சினிமா நடிகை, தியாகராயநகர், சென்னை ...	101	0	0
நடனம் பேபி சாருபாலா, கும்பகோணம் ...	51	0	0
பி. சிவகுரு, "குண்டூசி" ஏஜண்டு, கோலாலம்பூர்	50	0	0
என்.எஸ் மணியம்&ஸன்ஸ். "குண்டூசி" ஏஜண்டு, சென்னை ...	11	0	0
அ. ர. கிருஷ்ணமூர்த்தி, சென்னை ...	10	0	0
பி. ஏ. பெரியநாயகி, சினிமா நடிகை, சென்னை ...	10	0	0
பேபி ராஜாமணி, நாட்டிய நக்ஷத்திரம், சென்னை ...	5	0	0
எஸ். சுவாமிநாதன், சென்னை ...	5	0	0
கே. நிஸார் அஹமத் கே. ஏ. எஸ். & பிரதர்ஸ், கோவை ...	2	0	0
கோ. பரசுராமன், தெலுக்கான்ஜான், மலாயா	2	0	0
டி. மஹாலிங்கம், தெலுக்கான்ஜான், மலாயா	2	0	0
பர்னிச்சர் பீபிள், 'வெலிங்டன் டாக்கீஸ்' சமீபம், சென்னை ...	2	0	0
ஸி. ஜி. வைத்திலிங்கம், "குண்டூசி" ஏஜண்டு, உதயமார்த்தாண்டபுரம் ...	1	0	0
தமிழ் மணி வாலிபர் சங்கம், சிங்கலாண்டபுரம் ...	1	0	0
டி. ஏ. பாலகிருஷ்ணன், I பாரம், டவுன் ஹைஸ்கூல், கும்பகோணம் ...	1	0	0
கே. அழகுராஜ், "குண்டூசி" ஏஜண்டு, சத்திரப்பட்டி ...	1	0	0
வி. எம். தர்மராஜன், "குண்டூசி" ஏஜண்டு, அருப்புக்கோட்டை ...	1	6	0
கே. ஆர். ராஜகோபாலன், கோயமுத்தூர் ...	0	8	0
பி. எம். எதிராஜு, போஸ்ட்மேன், சென்னை ...	0	4	0
"குண்டூசி"யிடம் கேள்வி கேட்டவர்களின் காணிக்கை	4	2	6
ஆக ரூ.	762	4	6

ஸ்ரீ. ஏ. ஆர். கிருஷ்ணமூர்த்தி மூலம் வசூலிக்கப்பட்டவை

எம். சோமசுந்திரம்செட்டியார், சென்னை ...	2	0	0
S. F. H. AKBARI, சென்னை	2	0	0
எஸ். ஆர். ஸ்ரீனிவாஸ ராவ், துர்கா விலாஸ், ஹோட்டல் சென்னை ...	2	0	0
வி. ஸ்ரீநிவாஸன், ரீஜனல் டிரான்ஸ்போர்ட், கோயமுத்தூர் ...	2	0	0
ஸி. ராகவாச்சாரியார், சென்னை ...	1	0	0
கே. ஸ்ரீநிவாஸாச்சாரியார், சென்னை ...	1	0	0
எஸ். ரங்கஸ்வாமி, சென்னை ...	1	0	0
ஆக ரூ.	11	0	0

மதருஸ் ஸர்க்கிள் பைப் டீலர்ஸ் அஸோஸியேஷன்

(ஸ்ரீ. ஏ. ஆர். கிருஷ்ணமூர்த்தியால் வசூலிக்கப்பட்டவை)

வி. கோபால், (கார்டிங் கன்டிராக்டர்) ...	5	0	0
கே. எம். துரைசாமி ...	2	0	0
கே. ஸ்ரீநிவாஸன் ...	2	0	0
எஸ். ராமாநுஜம், ஸ்டோர்கீப்பர் ...	1	0	0
கே. எஸ். நாராயணசாமி ...	1	0	0
எஸ் பார்த்தசாரதி ...	1	0	0
பி. வி. கிருஷ்ணமூர்த்தி ...	1	0	0
டி. ஆர். ஸ்ரீநிவாஸன் ...	1	0	0
கே. ஸி. துரைசாமி ...	1	0	0
கே. ஸி. ராஜாபாதர் ...	1	0	0
வி. எஸ். கிருஷ்ணன், ...	1	0	0
எம். சிங்காரவேலு ...	1	0	0
எஸ். ராஜு ...	0	8	0
என் பிச்சைக்கண்ணு ...	0	8	0
ஏ, உத்திர்சாமி ...	0	8	0
கே. பி. பழனி ...	0	8	0
எம். முனிசாமி ...	0	8	0
கிருஷ்ணன் நாயர் ...	0	8	0
ஆக ரூ.	21	0	0

பிரிய சகோதரிகளே !

நான் ஓர் நர்ஸ் அல்ல. டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானே உங்களைப்போல் ஓர் குடித்தனப்பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப்பின் துர்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் எனக்கு ஏற்பட்டு விட்டது. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொர்ப்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டே வந்தது. முகம் வெளுத்துவிட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறு கிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டுவிட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒருநாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சைபோட வெளியில் வந்ததும், அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சுபோன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு, ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்துவிட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2-14-0 [ரூபாய் இரண்டு அணா பதினைன்கு]. தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையாலேயே மருந்து தயாரித்து, வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத் தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதவேண்டாம்.

*

BIBI CHARAN PIARI

Sant Nagar (G.M.), Jullundur City.

வர்ணனை

1. ஜூபிடரின் ''விஜயகுமாரி'' யில்

2. சரஸ்வதியின் அசல் தோற்றம்

3. ''இன்பவல்லி'' படத்தில் சரஸ்வதி

கிண்டூசி

''திண்ணைக்குதேள்கொட்ட, தென்னை மரத்திற்கு நெறி கட்டியதாம்''— என்று ஒரு பழமொழி உண்டு. ஒன்றுக்கும் இன்னொன்றுக்கும் துளியும் சம்பந்தமில்லாத இரு சம்பவங்களைக் குறிப்பிடுவதற்கு இப்படிச் சொல்லுவது வழக்கம். என்னைப் பொருத்தவரையில், திண்ணைக்குத் தேள் கொட்டி, தென்னை மரத்திற்கு நெறி கட்டினால்கூட நான் அச்சரியப்படவே மாட்டேன். ஏனென்ருல். இதைவிட அச்சரியமான எவ்வளவோ சம்பவங்கள் நம் சினிமா நக்ஷத்திரங்களின் வாழ்க்கையில் நிகழ்ந்திருப்பதை நான் அறிவேன். பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த பி. கே. சரஸ்வதி படிப்பை நிறுத்திவிட்டு, நாட்

பீ.கே.சரஸ்வதி

டியம் கற்றுக் கொண்டு, பம்பாய்க்கு நடனம் ஆடப்போய், ஒரு சினிமா நடிகையாக சென்னைக்குத் திரும்பி வந்தது இதற்கு ஒரு உதாரணமாகும்.

பிரபல வட இந்திய நடன-சினிமா நக்ஷத்திரமான சாதனு போஸைப் பற்றி நம் வாசகர்கள் கேள்விப்பட்டிருப்பார்கள். பலர் அவர் நடித்துள்ள **பைகாம், சங்கர் பார்வதி, ராஜ் நர்த்தகி** ஆகிய நடனப் படங்களைப் பார்த்திருப்பார்கள். மற்றும் பல சென்னை வாசிகள் அவரது நடனத்தை நேரிலேயே கண்டு களித்துமிருப்பார்கள். சாதனு போஸ் கோஷ்டியில் மாதவ மேனன் என்பவர் கதகளி நடனம் போதிப்பதிலும் ஆடுவதிலும் ஈடுபட்டிருந்தார். ஸ்ரீ. மேனன் மேற்சொன்ன படங்களில் ஸ்ரீமதி போஸுடன் தோன்றியுமிருக்கிறார்.

ஸ்ரீ.மேனன் ராஜ் நர்த்தகியில் ஆடிய பிறகு தம் சொந்த ஊராகிய (கொச்சி சமஸ்தானத்திலுள்ள) திருப்புணித்துறுவுக்குத் திரும்பி, "நர்த்தன கலா கேந்திரம்" என்ற பெயரில் ஒரு நடனப் பள்ளியை ஆரம்பித்தார். இப் பள்ளியில் இலவசமாகவே நடனப் பயிற்சி அளிக்கப் போவதாக அவர் அறிவித்தார். பல சிறுவர், சிறுமியர் இந்தப் பள்ளியில் சேர்ந்து நடனம் பயில ஆரம்பித்தனர்.

ஒருநாள் இப்பள்ளி மாணவிகளில் ஒருத்தி தன் சிநேகிதையான இன்னொரு புதுப் பெண்ணை தன்னுடன் அழைத்து வந்தாள். அங்கு தம் போன்ற சிறு பெண்கள் பலர் நடனம் கற்றுக் கொண்டு ஆடியதை அப்புதுப் பெண் ஆவலுடன் கவனித்தாள். இந்த ஆவல் கவனித்ததோடு தீர்ந்து விடவில்லை. தாமும் அவர்க



ளைப் போலவே நடனம் ஆடவேண்டும் என்ற எண்ணத்தை அப்பெண்ணின் மனதில் ஆழப் பதிய வைத்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தப் பெண் மெதுவாக நடன ஆசிரியர் மேனனை அணுகி, தான் நடனம் கற்றுக்கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தாள். அந்தப் பெண்ணிடம் காணப்பட்ட ஆவலைக் கண்டு சந்தோஷம் அடைந்த மேனன், "பெற்றோர்கள் சம்மதம் தெரிவித்தால் சேர்த்துக் கொள்ளுகிறேன்" என்று பெண்ணிடம் சொன்னார். இந்தச் சம்மதம் பெறுவ தொன்றும் கஷ்டமான விஷயமில்லை என்று நினைத்த அந்தப் பெண் ஓடோடியும் வீட்டை அடைந்தாள். அந்தப் பெண் தான் தற்போது பல படங்களில் நடனம் ஆடி, நடித்து வரும் பி. கே. சரஸ்வதி என்று நான் சொல்லவும் வேண்டுமோ?

அந்த சமயம் சரஸ்வதிக்கு வயது ஏழுதானிருக்கும்; மூன்றுவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். கொச்சி சமஸ்தானப் பட்டாளத்தில் வேலை பாாத்துவந்த—அவரது தகப்பனார் குமாரன் நாயர் இறந்துவிடவே சரஸ்வதியையும், அவரது தமக்கை இருவரையும், தம்பிகளான பாலகிருஷ்ணன், கிருஷ்ணன் ஆகியோரையும் பாதுகாக்கும் பொறுப்பு பூராவும் அவர்களது தாயாரான நாராயணி அம்மாளிடமே இருந்து வந்தது.

மேனனின் நடனப் பள்ளியிலிருந்து வீடு திரும்பிய சரஸ்வதி, தாம் நடனம் பயில விரும்புவதாக தாயாரிடம் தெரிவித்தார். அம்

4. "வேலைக்காரி"யில்
5. "இனபவல்லி"யில்
6. "வேலைக்காரி"யில் சுந்தர கோஷ்!

7. "பிழைக்கும் வழி" படத்தில்
8. "போஜனி"ல் எஸ். வரலக்ஷ்மியுடன்
9. "போஜனி"ல்

மாவிடம் சம்மதம் பெறுவது மிக சுலபம்'' என்று தாம் நினைத்தது தவறு என்பதை சரஸ்வதி அப்பொழுதுதான் தெரிந்து கொண்டார். சரஸ்வதியை நிறையப் படிக்கவைக்க வேண்டுமென்பதே நாராயணி அம்மாளின் விருப்பம். நடனம் பயில ஆரம்பித்தால் படிப்புக்குத் தடை ஏற்பட்டுவிடும் என்று கருதியதால், சரஸ்வதியின் விருப்பத்திற்கு அவர் இணங்க மறுத்துவிட்டார்.

தாயார் எவ்வளவு தீவிரமாக அநுமதி மறுத்தாரோ அதைவிடத் தீவிரமாய் விடாது பிடிவாதம் செய்தார் சரஸ்வதி. பெண்ணின் பரிதாப நிலையைக் காணச் சகியாமல் தாயார் விட்டுக் கொடுத்தார். சரஸ்வதிக்கு மட்டும் அநுமதி கொடுத்தார். சரஸ்வதிக்கு மட்டும் அனுமதி கொடுத்தால் சும்மாயிருப்பாரா தமக்கை கமலா? தாமும் நடனம் கற்றுக் கொள்ளவேண்டுமென்று கூறினர். முதலில் ஒரு பெண்ணுக்கு அநுமதிதர மறுத்த நாராயணி அம்மாள் முடிவில் இரண்டு பெண்களுக்கு அநுமதியளிக்க வேண்டியதாகி விட்டது. கமலா, சரஸ்வதி இருவரும் மேனனின் நடனப் பள்ளியில் சேர்ந்தனர். அதில் சேர்ந்ததும் அவர்கள் படிப்பை நிறுத்தவேண்டியதாகிவிட்டது. மேனனின் நடனப் பள்ளியில் சரஸ்வதி, கமலா இருவரும் பிரதானமாக கதகளி நடனத்தைப் பயின்றனர். அத்துடன் இதர நடனங்களையும் கொஞ்சம் கற்றனர். சிக்ஷை ஓரளவு முடிந்ததும் மேனன் தம் சிஷ்யர்களுடன் கேரள பிரதேசத்தில் பல ஊர்களில் நடனக் கச்சேரி நடத்தத் தீர்மானித்தார். கொச்சி சமஸ்தானத்தில் திவான் பேஷ்காராயிருந்த கோமாட்டில் அச்சுத மேனன் என்பவர், சரஸ்வதி சகோதரிகள் உள்ளிட்ட மாதவ மேனன் கோஷ்டியாரின் முதல் நடனக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்தார். இக் கச்சேரி திருச்சூரில் ஒரு தியேட்டரில் நடைபெற்றது. இதன் பிறகு மேனன் கோஷ்டியாரின் நடனக் கச்சேரிகள் கேரள தேசத்தில் பல ஊர்களில் நடைபெற்றன. அந்த சமயத்தில் தான் ஒரு எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது.

இந்த கோஷ்டியாரின் ஒரு நடனக் கச்சேரியைப் பற்றியும், மாதவ மேனன் கதகளி நடனக் கலைக்குச்

செய்து வந்த அரும் தொண்டைப் பற்றியும், குறிப்பாக சரஸ்வதி சகோதரிகளின் நாட்டியச் சிறப்பைப் பற்றியும் பம்பாய் பத்திரிகையொன்று புகழ்ந்து எழுதியிருந்தது. இந்த விமர்சனம், பம்பாயிலுள்ள "ஸெவன் ஆர்ட் ஸென்டர்" என்ற கலைக் கழகத்தின் நிர்வாகியினது கவனத்தைக் கவர்ந்தது, அவர் தம் கழகத்தில் கதகளி நடனப் பகுதியை சிறப்புறச் செய்ய வேண்டுமென்று அதற்கு முன்பே எண்ணிக் கொண்டிருந்தார். எனவே இச் செய்தியைப் பார்த்துமே,

10. "திருமழிசை ஆழ்வார்"
11. "கல்பனா"
12. "திருமழிசை ஆழ்வார்"
13. "ஆயிரம் தலை வாங்கி அபூர்வ சிந்தாமணி"
14. "மாரியம்மன்"

ஸ்ரீ. மாதவ மேனனை சந்திப்பதற்காக கேரளாவுக்குப் புறப்பட்டு விட்டார்.

அவர் திருப்புணித்துருவில் மேனனைச் சந்தித்தார். சரஸ்வதி சகோதரிகளை தம் கலைக் கழகத்தில் சேர்த்துக் கொள்ள விரும்புவதாக அவரிடம் தெரிவித்தார். ஸ்ரீ. மேனன் இதற்குச் சம்மதித்து சிபாரசு செய்யவே தாயாரும் சம்மதித்தார். சரஸ்வதி சகோதரிகளிருவரும் பம்பாய்க்குச் சென்று "ஸெவன் ஆர்ட் ஸென்டரி"ல்சேர்ந்து கொண்டனா. அப்பொழுது சரஸ்வதிக்கு ஒன்பது வயதும் கமலாவுக்கு பதினேரு வயதுமே ஆகியிருந்தது.

"ஸெவன் ஆர்ட் ஸென்டரி"ல் இவர்கள் சேர்ந்ததும், அவர்கள் தம் கோஷ்டியுடன் வட இந்தியாவில் பிரயாணம் தொடங்கினர். கல்கத்தா, லக்ஷ்மணபுரி, லாகூர், ஜபல்பூர், நாகபுரி, காசி, ஆஜ்மீர், பாட்னு போன்ற பல முக்கிய நகரங்களில் இவர்களது கச்சேரிகள் நடைபெற்றன. கமலா, சரஸ்வதி இருவரும் ரஸிகர்களின் பாராட்டுதல்களைப் பெற்றனர்.

போர் பந்தர் என்ற நகரில் "ஸெவன் ஆர்ட் ஸென்டர்" கழகத்தினர் நடனக் கச்சேரிகளை நடத்தி வந்த போது கமலா சரஸ்வதி இவர்களின் வாழ்க்கையில் இன்னெரு எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. அதன் மூலம்தான் அவ்விருவரும் சினிமா நக்ஷத்திரங்களாக மாறினர்கள்.

போர்பந்தர் கச்சேரி ஒன்றிற்கு பிரபல உதயசங்கர் விஜயம் செய்தார். அப்பொழுது உதயசங்கர் தம் கல்பனு படத்தைத் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார். சினிமாவில் நடிப்பதற்கேற்ற நடன ஆண் பெண்கள் எங்கெங்கு இருக்கிறர்கள் என்று அவர் ஆராய்ந்து வந்தார். இந்த நோக்கத்துடன் பார்த்துவந்த உதயசங்கரின் மனதைக் கமலா, சரஸ்வதி இவர்களின் நடனம் கவர்ந்தது. அவர்கள்

'பரவேலி' சகோதரிகளான கமலா, சரஸ்வதியும், அவர்களது நடன ஆசிரியர் மாதவ மேனனும்

அழகாக ஆடியதோடு, சினிமாவுக்கு அவசியமான முக அழகையும் பெற்றிருந்ததை உதயசங்கர் கவனித்தார். எனவே, 'தாமதமன்னியில், அவர்கள் இருவரையும் தமது கல்பனு படத்திற்கு ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்பினர்.

அந்த சமயத்தில் இந்த சகோதரிகள் "ஸெவன் ஆர்ட் ஸென்டரு"டன் செய்து கொண்டிருந்த இரண்டு வருஷ ஒப்பந்தம் முடிவுற்றது. உதய சங்கர் போன்ற ஒரு கலா நிபுணரால் சரஸ்வதி சகோதரிகளின் நடனம் பாராட்டப் பெற்றது சாதாரண விஷயமா என்ன? மேலும், உலகம் பூராவிலும் காட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்ட கல்பனுவில் ஒருவருக்குப் பங்கு கிடைப்பதே பெரும் பாக்கியம் அல்லவா?—இப்படியெல்லாம் எண்ணிய சகோதரிகள உதய சங்கரின் அழைப்பை மறுபேச்சில்லாமல் ஒப்புக்கொண்டு விட்டனர். அப்படத்தில் நடிப்பதற்காக அவர்கள் பம்பாயை விட்டு சென்னைக்கு வந்து சேர்ந்தனர்.

சரஸ்வதி சகோதரியரைப்போலவே லலிதா — பத்மினி சகோதரிகளும் முதன் முதலில் கல்பனு படத்தின் மூலம்தான் சினிமாப் பிரவேசம் செய்தனர் என்பது சுவனிக்சுத் தக்கது. இப்படத்தில் லலிதா—பத்மினி இவர்களுடன் சரஸ்வதி சேர்ந்து சில காட்சிகளில் நடனம் ஆடியிருக்கிருர்.

[தொடர்ச்சி 65-ம் பக்கத்தில்]

சந்துருவின் சஞ்சலம்

பத்மபாரதி

“சந்துரு நீ எழுதியிருந்ததை எல்லாம் படித்தேன். ஆனால் உன்னுடைய வேண்டுகோளுக்கு நேரடியாக பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது” என்றாள் லக்ஷ்மி அம்மாள்.

கிராமத்து வீட்டு விசாலமான முற்றத்தில் தாயும் மகனும் அமர்ந்திருந்தனர். வானத்தே இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிதறிக் கிடந்த மேகத் திரள்கள் அன்றைய இரவின் சொரூபத்தை அதிகரிப்பது போலத் தோன்றின. வெளியே நிலவிய இருளைக் காட்டிலும் சந்துருவின் உள்ளம் அடைந்திருந்த அந்தகாரம் அளவிட முடியாததைப் போலத் தோன்றியது.

இவ்வளவு வருஷ காலமாக தன் போக்கின்படி நடக்க விட்டிருந்த ஓரு பிள்ளையை இன்று அவனுடைய தாய் திடீரென முன் செல்ல முடியாதபடி தடுத்தது அவனுக்கே மிகுந்த வியப்பைத் தந்தது.

சுமதி அவனோடு காலேஜில் படித்து வந்தாள். அவளைப் பற்றி பக்கம் பக்கமாகப் புகழ்ந்து கிராமத்திலிருந்த தன் அம்மாவுக்கு எவ்வளவோ கடிதங்கள் எழுதியிருக்கிறான் சந்துரு. பார்ப்பதற்கு எவ்வளவுக்கெவ்வளவு கண்கவர் மோகனாங்கியாக சுமதி விளங்கினாளோ அவ்வளவுக்கவ்வளவு சங்கீதம், நாட்டியம் முதலியவற்றிலும் சிறப்புற்று விளங்குகிறாள் என்றுகூட ஒரு முறை அம்மாவிற்கு எழுதியிருக்கிறான் அவன்.

அம்மாவென்றால் உயிர் சந்துருவுக்கு. பள்ளிப் படிப்பை முடித்து மேம்படிப்புக்காக அவன் சென்னைக்குச் செல்ல வேண்டி வந்தபோது அம்மாவையும் தன்னோடு சென்னைக்கே வந்து விடும்படி எவ்வளவோ வற்புறுத்தியும் அவள் சம்மதிக்கவில்லை.

லக்ஷ்மி அம்மாளுக்கும் எப்படியாவது தன் மகன் படித்துப் பட்டம் பெற வேண்டுமென அவா. காலேஜில் சந்துரு சுமதி என்னும் பெண்ணோடு நெருங்கிய நட்புக் கொண்டிருப்பதாக எழுதியதைக் கூட அவள் பொருட்படுத்தவில்லை. கடைசியாக அவனிடமிருந்து வந்த கடிதத்தில் தான் சுமதியை மணக்க விரும்புவதாகவும் அவள் இன்னார் வீட்டுப் பெண் என்ற விபரங்களையும் எழுதியிருந்தபோது தான் லக்ஷ்மி அம்மாளுக்கு இடி விழுந்ததைப் போலாயிற்று. சுமதியின் விவகாரம் இந்த விதமாக முற்றி விபரீதமாகிவிடும் என்று அவள் கனவில் கூட நினைக்கவில்லை.

“அம்மா, நான் மறுபடியும் சொல்கிறேன். சுமதியைப் போன்ற தங்கமான பெண்ணை நான் கண்டதேயில்லை. அவளுடைய அப்பா ஒரு பிரபல சினிமாக் கம்பெனி முதலாளியாக இருப்பினும் அவளிடம் அது சம்பந்தமான ஜம்பமோ ஆடம்பரமோ கிடையவே கிடையாது” என்று அடுக்கிக் கொண்டே போனான் சந்துரு.

லக்ஷ்மி அம்மாள் தூணில் சாய்ந்தவாறே பெருமூச்செறிந்தாள். அவளுடைய முகம் வெளிறிப் போயிருந்ததை ‘ஹரிகேன்’ விளக்கொளியில் கண்டபோது சந்துருவுக்கு என்னவோ போலிருந்தது. அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

“சந்துரு உன்னை நேரில் இங்கு தருவித்து இந்த விதமான பதிலைச் சொல்கிறேனே என வருத்தப்படாதே. உன்னுடைய நன்மைக்காகத்தான் சொல்கிறேன். நீ சுமதியை மணக்கக் கூடாது. அவளை நீ மணக்கவும் முடியாது” என்று மீண்டும் சொன்னாள் லக்ஷ்மி அம்மாள். அவளுடைய குரல் கம்மிக் கரகரத்தது.

'' அமமா நீ தவறாக நினைத்து விட்டாய். அவர்கள் நம்மை விடப் பணக்காரர்கள். அதனால் நமக்கு அந்த இடம் உதவாது என்று நினைக்கிறாய போலும். சுமதியன் அப்பா ஜனார்த்தனமே என்னிடம நேரில் கூறினார். அந்த நிமிஷமே நான் ஒத்துக் கொண்டிருப்பேன். என் விருபபத்திற்கு எதிராகவா நீ நிற்கப போகிறாய. என்றாலும் உன்னை ஒரு பேச்சுக் கேட்டு வைக்க எழுதினேன். நீயானால் இபபடிச் சொல்கிறாய்'' என்று வருத்தம தோய்ந்த குரலில் பேசினான சந்துரு.

'' வேண்டாம் சந்துரு. சுமதி, ஜனார்த்தனத்தின் மகள் என்பதற்காகவே அவர்களுடைய சம்பந்தம நமக்குக் கூடாதென்கிறேன். ஜனார்த்தனம் எப்படிப் பட்டவர் என்பது உனக்குத் தெரியாது'' என்று கண்டிப்பாகக் கூறினாள் லக்ஷ்மி அம்மாள்.

'' ஆமாம்; சினிமாவுலகில் சம்பந்தப்பட்ட எவரைத்தான் இந்த உலகம் தூற்றாமலிருக்கிறது. ஜனார்த்தனம் எப்படிப் பட்டவரானால் என்ன. நமக்கு வேண்டியவள் சுமதிதானே'' என்று ஆவேசத்துடன் மொழிந்தான் சந்துரு.

ஆனால் மறுகணமே சந்துருவுக்குத் தான ஏன் அப்படிப் பேசினோம் என்றாகி விட்டது. தாங்கமுடியாத ஏதோ ஒரு துக்கத்தினால் பாதைப்படுவதைப் போன்று தாயாரின் விழிகளில் கண்ணீர் பெருகுவதைக் கண்டு சந்துரு திடுக்கிட்டுப் போனான்.

'' அம்மா, நீ ஏன் அழுகிறாய்? எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே'' எனப் புலம்பினான சந்துரு.

லக்ஷ்மி அம்மாள் மெல்ல தன்னை ஆசவாசப்படுத்திக் கொண்டு சொல்லலானாள்.

'' சந்துரு, உன்னைவிட அதிகமாக சுமதியின் அப்பாவைப் பற்றி எங்களுக்கெலலாம் தெரியும். இன்னும் சில நாட்கள் நீ இந்த கிராமத்தில் தங்கியிருந்தால் உனக்கே விளங்கிப் போகும். உன் படிப்பின் நிமித்தம் நானும் பட்டண வாசத்திலேயே தங்கி விட்டேன். சுமதியின் அப்பா இந்த ஊரிலேயே ஒரு கௌரவமான குடும்பத்துப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டவர் என்பதைக் கேட்க உனக்கு ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? அவர் உன்னுடைய குலம் கோத்திரம் எதுவும் விசாரிக்காமல் போனதும் ஒரு விதத்தில் நல்லதுதான்.''

'' அவ்வளவு தூரம் தெரிந்தவர் வீட்டுப் பெண்ணையா வேண்டாமென்கிறாய் அம்மா?'' என்று ஆவலுடன் கேட்டான் சந்துரு.

'' ஆமாம் அவரைப்பற்றி இன்னும் சொன்னால் உனக்கு வருத்தமே உண்டாகும். 'நீ யார், என்ன ஊர், குலம் கோத்திரம் எதுவுமே அவர் கேட்கவில்லையா?'' என்றாள் தாயார்.

மீண்டும் சந்துருவின் முகத்தில் ஒரு பிரகாசம் உண்டாகியது. ''நீ என்னமோ அவரைப் பற்றித் தவறாக நினைக்கிறாய் அம்மா. 'சுமதியின் இஷ்டத்திற்கு விரோதமாக நான் எப்பொழுதுமே பேசியது கிடையாது. அதிலும் அவள் கலியாண விஷயத்தில் அவளுடைய மனத்திற்குப் பிடித்தமான பிள்ளையைத் தேர்ந்தெடுக்க சுமதிக்கு பூரண சுதந்திரமும் நான் கொடுத்திருக்கிறேன்' என்று ஜனார்த்தனமே சொன்னாரம்மா'' என்றான் சந்துரு.



லக்ஷ்மி அம்மாள் உதட்டைக் கடித்துக்கொண்டாள். “ஏன் சொல்லமாட்டார்? தன்னுடைய காதல் கலியாண விஷயத்தில் தோற்றுப் போனவராயிற்றே அவர். தன் பெண்ணுக்கும் அப்படியே ஆகிவிடக் கூடாதே என்றுதான் அவள் இஷ்டப்படி கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதித்துவிட்டார் போலும். பாவம்! அப்பாவி மனிதனுக்கு இந்த விஷயத்திலும் தோல்விதான் என்பது அவருக்கு எப்படித் தெரியப் போகிறது.”

சந்துருவால் அதற்கு மேலும் பொறுக்க முடியவில்லை. “அம்மா, எல்லாவற்றையும் விபரமாகத்தான் சொல்லேன்” என்றான்.

லக்ஷ்மி அம்மாள் ஒரு பெருமூச்சுடன் ஆரம்பித்தாள்.

“ஜனார்த்தனம் இருபது வருடங்களுக்கு முன்பு இந்த ஊருக்கு வந்திருந்தார். அப்பொழுது காலேஜ் விடுமுறை நாட்கள். அவருடைய நண்பன் ஒருவனோடு லீவு நாட்களை ‘ஹாயாக’ கிராமத்தில் கழிக்க வந்தவருக்கு மனத்தில் சஞ்சலத்தை உண்டாக்கினாள் லக்ஷ்மி. ஜனார்த்தனத்தின் பாடு திண்டாட்டமாகிவிட்டது. அந்தப் பெண்ணோ அவர் தங்கியிருந்த வீட்டுப் பையனுடைய மாமாவின் மகள். முறைப்படி அவனுடைய மனைவியாக வேண்டியவள். அதுவுமல்லாமல் தன் அத்தானுடன் தாராளமாகப் பேசி கும்மாளமடிக்கும் லக்ஷ்மி ஜனார்த்தனத்தின் எதிரில் மாத்திரம் ரொம்பவும் சாதுவாக மாறிவிடுவாள். என்றாலும் ஜனார்த்தனத்திற்கு அந்தப் பெண்ணைத் தன் மனைவியாக அடைந்தாலல்லாது தன் ஜன்மம் சாபல்யமடையாது போல் தோன்றியது.

“அவருடைய எண்ணமும் கூடிய சீக்கிரமே நிறைவேறியது. தன் பெற்றோர்களிடம் தன் ஆசையை வாய்விட்டுக் கூறி அவர்கள் முயற்சியால் அதே லக்ஷ்மியை சில மாதங்களில் தன் மனைவியாகவும் அடைந்தார். தன் அத்தானுடன் அன்னியோன்யமாகப் பழகி வந்த பெண்ணை அவனிடமிருந்து பறித்துவிட்ட விஷயம் ஜனார்த்தனத்தின் மனத்தை அடிக்கடி உறுத்திக் கொண்டிருந்தது போலும்.

“சில மாதங்களுக்கெல்லாம் கிராமத்தில் லக்ஷ்மியின் அப்பா திடீரென காலமாகிவிட்டார். ஜனார்த்தனம் தன் மனைவியுடன் கிராமத்திற்கு வரவேண்டியதாயிற்று. ஜனார்த்தனத்தின் நண்பனும் வந்திருந்தான். என்னதான் தன் மாமாவின் மகளானாலும் அவள் ஜனார்த்தனத்தின் மனைவியான பின் அவளோடு முன்னைப் போலெல்லாம் பேச முடியவில்லை நண்பனுக்கு. தன் மனைவியின் அத்தானுக்கும் லக்ஷ்மியின் வீட்டிற்கும் இருக்கும் தொடர்பைப் பற்றிய வரலாறோ ஜனார்த்தனத்திற்குத் தெரியாது. சிநேகிதன் என்ற ஹோதாவில் அத்தானோடு கிராமத்திற்கு வந்து அவனுடைய முறைப் பெண்ணையே அடித்துக் கொண்டு போய் விட்டோமே என்றதனாலோ என்னவோ தன் நண்பனைப் பற்றிய பேச்செடுப்பதற்கே அவருக்கு சங்கோசமாயிருந்திருக்க வேண்டும்.

“அன்று மாலை ஜனார்த்தனமும் அவன் மனைவியும் பட்டணத்திற்குப் புறப்படுவதாக இருந்தது. இதற்கிடையில் அந்த அசட்டு அத்தான் ஒரு மடத்தனமான காரியத்தைச் செய்துவைத்தான். அடுத்த தெருவிலிருந்த படியே ஜனார்த்தனத்தின் மனைவி லக்ஷ்மிக்கு ‘நீ ஊருக்குப் போகு

முன் உன்னிடம் இரண்டோரு வார்த்தை கணேத் தனியாகப் பேச வேண்டும். எப்பொழுது சந்திக்கலாம்?' என்று கேட்டு ஒரு சீட்டு எழுதி அனுப்பி வைத்தான். சர்வ சாதாரணமாகத் தெரிந்தே வந்து பேசியிருக்கக்கூடிய அத்தானுடைய சங்கோசம் ஒரு பாவமும் அறியாத லக்ஷ்மியின் வாழ்க்கையையே பாழடித்துவிட்டது.

''பொல்லாத வேளை என்பது எப்படிப் பட்டது என்பது லக்ஷ்மியின் விஷயத்தில் பலித்து விட்டது. தற்செயலாக அத்தான் அனுப்பிய சீட்டு ஜனார்த்தனத்தின் கையில் சிக்கியது. ஏற்கெனவே தன் மனைவியையும் அவளுடைய அத்தானேயும் பற்றி விபரீதமாகக் கற்பனை பண்ணிப் பார்த்துக் கொண்டிருந்த ஜனார்த்தனத்தின் சந்தேகத்தை அந்த சீட்டு ஊர்ஜிதம் செய்தது போலாயிற்று.

மனைவியைத் தாறுமாருகக் கடிந்து பேசி தான் மாத்திரம் தனியாகப் பட்டணத்திற்குப் புறப்பட்டுச் சென்று விட்டார் ஜனார்த்தனம். அதற்குப் பிறகு அவர் இந்த ஊர் பக்கமே திரும்பவில்லை. தன் மனைவியையும் அத்தானேடு சேர்ந்து கெட்டுப் போனவள் என்பதாகக் கூறித் தள்ளி வைத்து விட்டார்.''

சந்துருவுக்கு தன் காதலியின் தகப்பனாரைப் பற்றிய இந்த வரலாறு அவ்வளவு சுவாரஸ்யமாகப்படவில்லை. ஜனார்த்தனத்தைப் பற்றி தன்னுடைய அம்மாவைப் போல தப்பபிப்பிராயம் கொள்ளவும் இவன் மனம் துணியவில்லை.

''ஏன் அம்மா, ஜனார்த்தனம் அந்த விதமாகத் தன் மனைவியைத் தள்ளி வைத்ததில் ஏதாவது உண்மை இருந்திருக்கத்தான் செய்யும்'' என்ருன்.

''எது உண்மை? ரொம்பவும் தெரிந்தவன் போலப் பேசுகிருயே. அந்த அத்தான் சிறுவனுக இருக்கும் போதே தாய் தகப்பனை இழந்து போனுன். அவனுக்கிருந்த இரண்டு ஏகரா நிலத்தையும் மேலபார்லவ பார்த்துக்கொண்டு அவனேயும் வளர்த்து வந்தார் அவனுடைய மாமா. குழந்தை முதல் ஒன்ருக வளர்ந்து வந்ததால் தன் அத்தானுடன் சகஜமாகப் பேசிப் பழகி வந்த ஒரு பெணணேப் பிற்காலத்திலும் தவறுதலாக நினைத்துவிட்ட ஜனார்த்தனமும் ஒரு மனிதர்தானு? அப்பொழுது தன் மனைவி லக்ஷ்மி ஏழுமாத கர்ப்பிணி என்பதைக் கூடப் பாராமல் சென்ற......''

லக்ஷ்மி அம்மாள் தடாலெனக் கீழே சாய்ந்து மூர்ச்சையானுள். சந்துருவுக்கு எல்லாம் ஒரே புதிராக இருந்தது. சில கண நேரங்களுக்கு அவனுடைய அம்மா பேச்சு மூச்சற்றுக் கிடந்தபோது ஓரேயடியாகப் பயந்து போனுன்.

ஒருவாருக சந்துருவின் சைத்தியோபசாரங்கள் லக்ஷ்மி அம்மாளுக்கு மீண்டும் சுயநினைவு வரச் செய்தன. தன் அம்மாவை இவ்வளவு தூரம் பாதிக்கும் இந்தக் கலியாணம் வேண்டாம் என தனக்குத் தானே தீர்மானித்துக் கொண்டான் சந்துரு.

* * *

மறுநாள் சுமதியிடமிருந்து சந்துருவுக்குவந்த கடிதம் அவனுடைய குழப்பத்தைப் போக்கக் கூடியதாயிருந்தது.

''அப்பா நேற்று உங்களைப் பற்றிய விபரங்களை எல்லாம் விசாரித்தார். நான் உங்களைப் பற்றியும், உங்கள் தாயாரைப் பற்றியும் சொல்லி வநதபோது 'ஆ' வென்றலறி மூர்ச்சையானுர். சிறிது நேரத்திற்குப் பிறகுதான் உண்மைவெளியாகியது. நீங்கள் என்னுடைய அண்ணுவாமே. உங்கள் தாயார் லக்ஷ்மி அம்மாள்தான் அவருடைய முதல் மனைவியாம். அவசரப் பட்டு வீண் சந்தேகம் கொண்டு உங்கள் தாயாரைத் தள்ளி வைத்து வேறு விவாகம் செய்து கொண்டு விட்டாராம். பிற்காலத்தில் உண்மை உணர்ந்தபோது மீண்டும் உங்கள் அம்மாவை வரவழைத்துக் கொள்ளப் போதிய தைரியம் உண்டாகவில்லையாம் அவருக்கு. நேற்றுத்தான் இதையெல்லாம் ஒரு கதைபோல எங்களிடம் கூறினுர் அப்பா. சகோதர பாசத்தைத் தவறுதலாக எண்ணிக் கொண்ட நம்மை ஆண்டவன் தக்க சமயத்தில் காப்பாற்றினுன்.

நடந்ததைக் குறித்து அப்பா ரொம்பவும் பச்சாத்தாபப்படுகிருர். உடனே அம்மாவை அழைத்துக் கொண்டு இங்கு வரவும்.

சகோதரி சுமதி.''

* * *

கடிதத்தைப் படித்து முடித்த சந்துரு திகைத்துப் போனுன். அடுத்த கணம் உள்ளே பாய்ந்து சென்று ''அம்மா நான் சுமதியை மணக்க முடியாதுதான். அவள் என் தங்கையாமே. இதோ அவளுடைய கடிதம் வந்திருக்கிறது. நாம் இன்றே பட்டணத்திற்குப் போக வேண்டும்'' என்ருன்.

சுமதியின் கடிதத்தைப் படித்து முடித்தபோது லக்ஷ்மி அம்மாளின் கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகியது.

கிண்டேசியைக் கேளுங்கள்

நாம் சென்ற மாதம் வெளியிட்டிருந்த அறிக்கைக் கிணங்க, பின் கண்ட (*அடையாளமிட்ட) பதினைந்து வாசகர்கள் கேள்வி ஒன்றுக்கு நான்கணா வீதம் காந்திஜி ஸ்தூபி நிதிக்குக் காணிக்கை அனுப்பியிருக்கிறார்கள்.

***என். ஸ்ரீநிவாஸன் (சேலம்)**

நடன நக்ஷத்திரங்களான லலிதா–பத்மினி இவர்களின் புதிய விலாஸம் என்ன?

'எட்வர்டு எலியட்ஸ் ரோடு, மைலாப்பூர். சென்னை' என்று அவர்களுடைய பெயர்களுடன் சேர்த்துக் கொள்ளும்.

* * *

தற்சமயம் லலிதா-பத்மினி பாத்திரமேற்று நடித்துவரும் மதுவிது மலையாளப் படம் அவர்களுடைய சொந்தப் படமா?

இல்லை; இப்படம் பக்ஷிராஜா பில்மின் படம் என்று நினைக்கிறேன்.

***இராஜாமணி (திருச்சூர்)**

மிஸ் மாலினி படத்தை டைரெக்ட் செய்தவர் யார்? அவரது விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

அப்படத்தில் சம்பத்தாக நடித்துள்ள கொத்தமங்கலம் சுப்புவால் டைரெக்ட் செய்யப்பட்டது இது. விலாஸம்:— 14 அப்பர் ஸ்வாமி கோயில் தெரு, மைலாப்பூர், சென்னை.

***கே. தங்கவேல் (அரூர்)**

மங்கம்மா புகழ் வஸுந்தராவின் மகள் வைஜயந்திமாலாவின் தகப்பனார் யார்? வாழ்க்கை படத்தில், "கார் ஓட்டியும் பயனில்லை; காலேஜ் படித்தும் பயனில்லை" என்று வைஜயந்தி பாடுவது தம் சொந்தக் குரலிலா, இரவல் குரலிலா?

வைஜயந்தியின் தகப்பனார் ('வஸுந்தராவின் கணவர்' என்று சொல்வது உமக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது!) எம். டி. ராமன் என்பவர். நீர் குறிப்பிடும் பாட்டு இரவல் குரலில் பாடியதுதான்.

***வானுராதா ராமய்யா (வாலாஜாபேட்டை)**

டி. ஆர். மஹாலிங்கத்தின் விலாஸம் என்ன?

"129 ராயப்பேட்டை ஹைரோடு, மைலாப்பூர், சென்னை." அவ்வீட்டின் வாயிலில் "நாய்கள் ஜாக்கிரதை" என்ற போர்டைப் பார்த்துவிட்டு, நான் ஏதோ தவறான விலாஸத்தைக் கொடுத்து விட்டதாக நீர் நினைத்துவிடப் போகிறீர்! ஜாக்கிரதை!

***எஸ். சுப்பையா (புதுக்கோட்டை)**

படம் என்று எடுக்கவேண்டும்; பணப்பெட்டி நிரம்ப வேண்டும்—இதுதான் நம் பட முதலாளிகளின் நோக்கமா? நாடும், மக்களும் முன்னேறுவதற்கான நூதன கருத்துகள் அமைந்த படங்களை அவர்கள் தயாரிக்க மாட்டார்களா?

ஒன்று சர்க்காரே இத்தொழிலை மேற்கொண்டு நடத்த வேண்டும் அல்லது கடுமையான சட்ட திட்டங்கள் மூலம் கட்டுப்படுத்தி, சினிமாவை அறிவு வளர்ச்சிக்கான ஒரு சாதனமாய் மாற்ற வேண்டும். பணம் குவிப்பதை விட்டு விட்டு, பட முதலாளிகள் நீர் எதிர்பார்ப்பது போன்ற—வசூல் பாதிக்கப் படக்கூடிய—படங்களைத் தயாரிக்க

தமிழ் நாடெங்கும் ஜெயக்கொடி நாட்டிவரும் ''வாழ்க்கை'' படத்தில், அழகிய பெண்கள் சிலர் இந்தியாவின் வெற்றிக்கொடி ஏந்தி, ஆடும் இந்த நூதன தேசிய நடனத்தைக் காணலாம்.

வேண்டுமென்று எதிர்பார்ப்பது வீண் கனவுதான்!

*வி. கோவிந்தராஜுலு (திருக்கோயிலூர்)

டி. ஆர். ராமச்சந்திரன், சாரங்கபாணி, துரைராஜ், சுவாமிநாதன், காளி என். ரத்தினம், எம். ஈ. மாதவன் ஆகியோருள் ஹாஸ்ய நடிப்பில் யாருக்கு முதல் ஸ்தானத்தை அளிக்கலாம்?

சாரங்கபாணிக்கும், அடுத்தபடி ராமச்சந்திரனுக்கும் முதல் ஸ்தானங்களை அளிக்கலாம்.

*ரங்கநாதன் (திருப்பூர்)

எம்.கே. தியாகராஜ பாகவதர் இதுவரை எந்தெந்தப் படங்களில் நடித்திருக்கிறார்? அவருக்கு விவாஹம் ஆகிவிட்டதா? குழந்தைகள் உண்டா? இப்பொழுது எந்தப் படத்தில் நடித்து வருகிறார்?

பாகவதருக்கு சினிமாவுக்கு வரும் முன்பே விவாஹம் ஆகிவிட்டது. அவருக்கு இரு பெண்களும், ஒரு ஆணும் பிறந்துள்ளனர். பாகவதர் தற்போது '' அமர கவி '' படத்தில் நடித்து வருகிறார். ஜெமினியிலும் சில படங்களில் நடிக்கப் போகிறார். இதற்கு முன்பாக அவர், '' பவளக்கொடி, நவீன சாரங்கதரா, சத்தியசீலன், சிந்தாமணி, அம்பிகாபதி; திருநீலகண்டர், அசோக் குமார், சிவகவி, ஹரிதாஸ், ராஜமுக்தி'' ஆகிய பத்துப் படங்களில் நடித்திருக்கிறார்.

*ந. சு. ஜமால் முஹம்மது (பண்டாரவாடை)

வைஜயந்திமாலாவுக்கு இப்பொழுது என்ன வயதாகிறது? அவரது விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

வைஜயந்திக்கு இப்பொழுது 17-வது வயது நடந்து வருகிறது. விலாஸம்:— 53-B, லாயிட்ஸ் கார்னர், ராயப்பேட்டை, சென்னை.

*மாரிப்படையாச்சி (உளுந்தூர்பேட்டை)

லலிதா பத்மினி சகோதரிகளில் லலிதாவை டி. ஆர். மஹாலிங்கம் ரிஜிஸ்டர் கலியாணம் செய்துகொண்

டாரா? மஹாலிங்கத்தின் மீது லலிதா ஏதேனும் வழக்குத் தொடர்ந்திருக்கிறாரா?

"மஹாலிங்கத்தின் திருவிளையாடல்கள்" பற்றி சினிமா வட்டாரங்களில் இன்னும் எத்தனையோ வதந்திகள் உலவுகின்றன. இவைகளுக்கெல்லாம் ஆதாரம் கண்டு பிடிப்பதும், நம்புவதும்தான் முடியாத காரியம்.

***வி. நாகராஜ ராவ் (காளஹஸ்தி)**

கல்கத்தா மெயில் விபத்தில் அஞ்சலி தேவி ரயிலிலிருந்து விழுந்து அடிபட்டதாகக் கேள்விப்படுகிறேன். அவர் குணமடைந்து வருகிறாரா?

அஞ்சலி அந்த விபத்தில் சிக்கியதாக நான் கேள்விப்படவில்லை. தெலுங்கு ஹாஸ்ய நடிகர் சிவராவ் இவ்விபத்திலிருந்து தெய்வாதீனமாய் தப்பியது மட்டும் எனக்குத் தெரியும்.

***பி. ஆர். சாமி (மின்னப்பாளையம்)**

பொன்முடியில் நடிக்கும் தனலக்ஷ்மியும், விநோதினியில் நடித்த தனலக்ஷ்மியும் ஒருவரேதானா?

ஒருவர் போலவே தோன்றுகிறது.

***எஸ். பி. மாரியப்பன் (மின்னப்பாளையம்)**

கே. ஆர். ராமசாமிக்கு விவாஹம் ஆகிவிட்டதா? முதன் முதலில் நடித்த படம் எது? இதுவரை எந்தெந்தப் படங்களில் நடித்திருக்கிறார். தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்? அவரது நாடகக் கம்பெனி என்னவாயிற்று?

ராமசாமிக்கு விவாஹம் ஆகிவிட்டது. இதுவரையில் அவர் "குமாஸ்தாவின் பெண்", "பூம்பாவை", "முபாரக் பில்ஹணு", "கிருஷ்ண பக்தி", "வேலைக்காரி", "விஜயகுமாரி", ஆகிய படங்களில் நடித்திருக்கிறார். தற்போது அவர் "ஓர் இரவு" படத்தில் நடித்து வருகிறார். அவர் தம் நாடகக் கம்பெனியைக் கலைத்து விட்டார்.

***எம். எஸ். பழனி (கல்லிடைக்குறிச்சி)**

"கல்கி"யின் 'சிவகாமியின் சபதம்' என்ற கதையை ஜெமினி படம் பிடிக்கப் போவதாகவும், அதில் எம். எஸ். சுப்புலக்ஷ்மி நடிக்கப் போவதாயும் என் நண்பர் கூறுகிறார். இது உண்மையா?

ஒரு கேள்விக்கு நாலணா

'குண்டூசி'யிடம் நிச்சயம் பதில் பெறுவதற்கு நல்ல சந்தர்ப்பம்

அத்துடன்

காந்திஜி ஸ்தூபி நிதிக்கு

உதவியளிப்பதாயிருக்கும்

மே 31உ வரையில்

கேள்வி கேட்கும் நேயர்கள், ஒவ்வொரு கேள்வியுடனும் நாலணா ஸ்டாம்ப் வைத்தனுப்ப வேண்டும். சினிமாக் கேள்விகளுக்கு மட்டும் தான் பதில் அளிக்கப்படும். இவ்வாறு நமக்குக் கிடைக்கும் ஸ்டாம்புகளின் கிரயம் பூராவையும் 'காந்திஜி ஸ்தூபி நிதி'க்காக 'கல்கி' ஆசிரியரிடம் அளித்துவிடப்படும். இந்த ஏற்பாடு 1-6-50 வரையில் அமுலில் இருக்கும். ஒருவரே எத்தனை கேள்விகள் வேண்டுமானாலும் கேட்கலாம்.

1—3—50க்கு முன்பே வந்துள்ள கேள்விகளுக்கு மட்டும் கட்டணம் இன்றியே பதிலளிக்கப்படும்.

ஆபாசமான கேள்விகளுக்கு கண்டிப்பாய் பதிலளிக்கப்பட மாட்டாது.

நல்ல கேள்விகளை உடனே கேளுங்கள்.



ஆந்திர தேசத்தில் அதி வெற்றிகரமாய் ஓடிக்கொண்டிருக்கும் பிரதிபாவின் ''ஸ்ரீ லக்ஷ்மம்மா கதா'' தெலுங்குப் படம் சிக்கிரமே சென்னையிலும் வெளிவரப் போகிறதாம். அப்படத்தில் இது ஒரு முக்கிய கட்டம்.

இதை உண்மை என்று கூறுவதற்கு ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை.

***எஸ். தியாகராஜன் (திருபட்டணம்)**

பொன்முடியில் நடிக்கும் மாதுரி தேவியும், நரசிம்ம பாரதியும் சட்ட விவாஹம் செய்து கொண்டிருக்கிறார்களா?

இல்லை; யார் சொன்னது அப்படி?

***வி. தன்யாசி நாடார் (மின்னப்பாளையம்)**

எம். ஆர். சுவாமிநாதன் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? வயது என்ன? சொந்த ஊர் எது? கல்யாணம் ஆகிவிட்டதா? குழந்தைகள் எத்தனை? விலாஸம் என்ன?

வேளாளர் ஜாதியைச் சேர்ந்த சுவாமிநாதனுக்கு இப்போது 46 வயது ஆகிறது. அவருக்குக் கலியாணமாகி விட்டது. நிறைய குழந்தைகளும் இருக்கின்றன. விலாஸம்:—சுப்ரமண்ய முதலிதெரு, புரசைவாக்கம், சென்னை.

டி. எஸ். மூர்த்தி (வேலூர்)

''இளைத்த வாலிபர்'' **மிச்சிலின் மணி** என்ற புதிய நடிகர் **ரத்ன குமார், லைலா மஜ்னு** ஆகிய படங்களில் எந்தக் கட்டங்களில் நடிக்கிறார்?

என்னய்யா, மிச்சிலின் மணியையே உம்மால் கண்டுபிடிக்க முடியவில்லையென்றால், எம். ஈ. மாதவனை எங்கே நீர் கண்டு பிடிக்கப் போகிறீர்!

எச். வி. கோவிந்தசாமி (ஹாஸன்)

சில தமிழ்ப் படங்களில் நடிகர்கள் ஏக காலத்தில் இரண்டு மூன்று வேஷங்களை ஏற்றுக் கொண்டு நடிக்கிறார்களே. காரணம் என்ன? போதுமான நடிகர்கள் இல்லாத காரணமா?

இல்லை யில்லை. போதுமான நடிப்பு (நம் நடிகர்களிடம்) இல்லாததால், இரண்டு மூன்று பாத்திரங்களை ஏக காலத்தில் நடித்தாவது குறையைப் போக்கிக்கொள்ள முயலுகிறார்களோ என்று வேண்டுமானால் நினைக்கலாம்.

ஏ. காளிமுத்து (அறந்தாங்கி)

திருச்சி லோகநாதனும், எம். எம். மாரியப்பாவும் சகோதரர்களா?

ஆம்; சகோதரர்கள்தான்.

பி. கோபால் (பொள்ளாச்சி)

அபூர்வ சகோதரர்கள் படத்தில் விஜயன் படும் அடி விக்ரமனையும் தாக்குகிறது. எனவே விக்ரமன் சுடப்பட்டதும் விஜயனும் இறப்பது தானே நியாயம்? ஏன் இறக்க வில்லை?

கதைப்படி பார்த்தால் அதுதான் நியாயமாய்த் தோன்றுகிறது.

பி. செல்லையா (கோலாலம்பூர்)

தவமணி தேவியின் புகழ் பிரகாசிக்காததன் காரணம் என்ன?

அவர் உடல் 'பிரகாசிக்க'ப் பாடுபட்டாரே தவிர, புகழ் பிரகாசிக்க எங்கே பாடுபட்டார்?

பூபதி ராஜம் (கடலாடி)

மாதுரிதேவிக்கு குழந்தைகள் இருக்கின்றனவா? அவரது விலாஸம் என்ன?

குழந்தைகள் கிடையாது. விலாஸம்: c/o ஜூபிடர் பிக்சர்ஸ், கோயமுத்தூர்.

வி. பொன்னுசாமி (வேதாரண்யம்)

எம். எஸ். சரோஜினி நடித்த முதல் படம் எது?

பிரதம பாகத்தில் நடித்தது "ஆர்ய மாலா"வில்தான். எனினும், அதற்கு முன்பே அவர் ஓரிரண்டு படங்களில் தலைகாட்டியிருக்கிறார்.

வி. மயிலையன் (திருக்கண்ணமங்கை)

இன்பவல்லியில் நடிக்கும் எஸ். மேனகா வேறு எந்தப் படங்களில் நடிக்கிறார்?

அவர் தற்போது டெஸ்டி பிலிம்ஸாரின் "உண்மையின் வெற்றி" படத்திலும், லாவண்யா பிலிம்ஸாரின் "பாரிஜாத" த்திலும் நடித்து வருகிறார்.

எஸ். முத்தம்மாள் (தாழக்குடி)

நான் முன்பு தங்கள் பத்திரிகைக்கு நான்கைந்து நல்ல கேள்விகளை அனுப்பியிருந்தேன். ஆனால் அவற்றில் ஒன்றிற்குக்கூட நீங்கள் பதில் அளிக்காததேன்?

பதில் வராததிலிருந்தே அவை நல்ல கேள்விகள் அல்ல வென்று நீங்களே தெரிந்து கொண்டிருக்கலாமே.

ஆர். எஸ். சுந்தரராஜ ராவ் (மாயனூர்)

டி. எஸ். பாலையா, டி. எஸ். துரைராஜ் இவர்களிடம் சென்று பிழைக்கும் வழிக்காக அண்டினால் தம்மிடம் வைத்துக்கொண்டு ஆதரிப்பார்களா?

இதுமாதிரி முன்பின் தெரியாதவர்களையெல்லாம் சேர்த்து வைத்துக்கொண்டு ஆதரிப்பது பிழைக்கும் வழிகளில் ஒன்றல்ல என்பது அவர்களுக்குத் தெரியாமலா இருக்கும்!

ஸி. குட்டி கிருஷ்ணன் (ஸ்வெட்டன்ஹாம் துறைமுகம்)

இந்திய சினிமா நக்ஷத்திரங்களுடன் நான் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ள விரும்புகிறேன். இது சாத்தியமா?

இந்திய சினிமா நக்ஷத்திரங்கள் மேல் நாட்டு நக்ஷத்திரங்களவ்வளவு நாகரீகத்தில் முற்றிவிடவில்லை. உபகாரம் செய்பவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டுமென்ற சாதாரண மரியாதை கூட அவர்களுக்குத் தெரியாது. அப்படியிருக்க அவர்கள் எங்கே கடிதம் எழுதப் போகிறார்கள்? மேலும், அநேகருக்கு கையெழுத்துப் போட மட்டுமே தெரியும். மற்றவர்களுக்கோ ஒரு கடிதம் எழுத நாலு நாள் பிடிக்கும்! சொற்பப் பேர்களுக்கே சொற்ப தமிழ்ப் படிப்பு உண்டு. பத்திரிகைகளில் சில நடிக, நடிகைகளின் பெயர்களில் வரும் கட்டுரைகளைப் பார்த்து நீர் மலைத்து விட்டீர் போலிருக்கிறது!

குணசீலன் (கள்ளிக்குடி)

நாம் இருவர் படத்திற்குப் பின் மஹாலிங்கம் நடிக்கும் படங்களெல்லாம் மோசமாகவே போய்க்கொண்டிருப்பதன் காரணம் என்ன?

அந்தக் காரணத்தைக் கண்டு பிடிப்பதற்காகத்தான் போலும், அவர் தற்போது சொந்தத்திலேயே ஒரு படத்தைத் தயாரிக்கிறார்!

கே. வெங்கடராமன் (திருச்சி)

"நான் இந்த நடிகையை காதலிக்கிறேன்", "அந்த நடிகையை மணக்க முடியுமா?" என்றெல்லாம் சில ரஸிகர்கள் உங்களுக்கு எழுதுகிறார்களே, காரணம் என்ன?

மாடர்ன் தியேட்டர்ஸாரின் வெளியீடான ''பொன்முடி'' தமிழ்ப் படத்தில் தனலக்ஷ்மியும், பாலசுப்ரமண்யமும்.

வியாதிக்கு ஊசி போடுவது சகஜமான விஷயமாயிற்றே! அது போல சினிமா மூலம் ஏற்படும் ''வியாதி''யை 'குண்டூசி' குணப்படுத்தும் என்ற நம்பிக்கை தான்!

கே. கே. மாணிக்கம் (கீழச்செருவாய்)

பி. எஸ். கோவிந்தன் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? சொந்த ஊர் எது?

மதுரை சமீபமுள்ள பூச்சிரம்பட்டியைச் சேர்ந்த கோவிந்தன் நாயுடு ஜாதியைச் சேர்ந்தவர்.

எஸ். வி. ஸ்ரீநிவாஸன் (நாகூர்)

வஸந்த குமாரி, பி. ஏ. பெரியநாயகி, குமாரி ரத்னம், எஸ். வரலக்ஷ்மி ஆகியோரில் பாட்டிலும், அழகிலும் சிறந்தவர் யார்?

அழகிற்கு வரலக்ஷ்மியையும், பாட்டிற்கு வஸந்த குமாரியையும் குறிப்பிடலாம்.

கே. எஸ். ஈசய்யா (வால்பாறை)

எம். ஜி. ராமச்சந்திரன் இதுவரை மொத்தம் எத்தனை படங்களில் நடித்திருக்கிறார். இப்பொழுது எந்தப் படத்தில் நடித்து வருகிறார்? சொந்த ஊர் எது? கலியாணம ஆகிவிட்டதா?

நவம்பர் மாத ''குண்டூசி''யில் வெளிவந்த ராமச்சந்திரனின் வாழ்க்கை வர்ணனையை நீர் படிக்கவில்லை என்பது நன்கு தெரிகிறது. ராமச்சந்திரன் 16 படங்களில் நடித்து விட்டு இப்பொழுது ஜூபிடர் தயாரித்து வரும் ''கரிகாலன்'' படத்தில் நடித்து வருகிறார். கொல்லங்கோட்டை அடுத்த வடவனூரைச் சேர்ந்த அவர் விவாஹமானவர்தான்.

கா. ஆ. ராபட் மனுவேல் ராஜ் (பச்சைமலை)

குண்டூசியாரே! நீர் நடிக நடிகைகளை இகழ்ந்து எழுதும் போது அவர்கள் உம்மை சும்மா விட்டு விடுகிறார்களா?

இல்லை; முன்பொரு முறை என்னைக் கத்தியால் குத்தி ரத்தத்தைப் பார்த்தார்கள். இந்த ''அடங்காப் பிடாரித்தனம்'' என் ரத்தத்திலேயே ஊறிப் போயிருக்கிற தென்பதை உணர்ந்து.

அவர்கள் இப்பொழுதெல்லாம் சும்மா இருந்து விடுகிருர்கள்!

வேங்கை மார்பன் (சேலம்)

'ஆர். ஸி. ஏ. ஸௌண்ட் ஸிஸ்டம்' என்ருல் என்ன?

ஒலிப்பதிவு இயந்திரங்கள் பல விதங்களில் உள்ளன. அவற்றில் ஆர். ஸி. ஏ. கம்பெனியாரின் ஒலிப்பதிவு இயந்திரம் ஒரு விதத்தைச் சேர்ந்தது.

என். கே. சஞ்சீவி (அம்பத்தூர்)

பரஸனி லைலா மஜ்னு தமிழ்ப் படத்தில் பள்ளிக்கூட காட்சியில் லைலாவும் கயஸும், முறையே கயஸு, லைலா என்று ஸ்லேட்டில் எழுதிப் படிக்கிருர்கள். இது தெலுங்கில் எழுதப் பட்டிருப்பது சரியா?

சரியில்லைதான். இப்படத்தை மொழி பெயர்த்தவர்கள் இக்காட்சியைப் புதிதாகத் தயாரிக்கத் தவறிவிட்டனர்.

ஏ. அப்துல் ரஹீம் (தஞ்சை)

ஏவி. எம். ஸ்டுடியோவின் விலாஸத்தை தயவு செய்து தெரிவிக்கவும்.

ஏவி. எம். ஸ்டுடியோ, வடபழனி, கோடம்பாக்கம், சென்னை.

ஆர். டி. என். விஜயன் (கிள்ளான்)

குண்டூசியாரே! நீர் பதிலளிக்கும் தொழிலை ஆரம்பிப்பதற்கு முன்னர் என்ன செய்து கொண்டிருந்தீர்?

ஒரு தினசரிப் பத்திரிகையில் உதவி ஆசிரியராய் இருந்தேன். அதற்குமுன் பல பத்திரிகைகளுக்கு சிறுகதைகள் எழுதி வந்தேன். அதற்கும் முன் பள்ளியில் மாணவனு யிருந்தேன். அதற்கும் முன்னுல் சிறு குழந்தையாயிருந்தேன். அதற்கும் முன்னுல்...!......?

''அண்டப் புளுகன்'' (குருநாக்கல்)

நான் 15ம் வகுப்பில் தேர்ச்சி பெற்று அறுபது ராகங்களைக் கரைத்துக் குடித்திருக்கிறேன். பள்ளியில் எனக்கு ''பாகவதர்'' என்ற பட்டம் கூட உண்டு. நீர் என்னை சினிமாவில் சேர்த்துவிட முடியுமா?

அண்டப் புளுகரே! நீர் சொல்லுவதை நான் பூரணமாக நம்புகிறேன்! ஏதோ பாக்கியுள்ள ராகங்களையாவது மற்றவர்களின் உபயோகத்திற்காக கரைத்துக் குடித்து விடாமல் விட்டிருக்கிறீரே! சந்தோஷம். ஆனுல் படத் தொழிலில் வசனங்களை விழுங்குபவர்க

ஜுபிடரின் '' கிருஷ்ண விஜயம் '' தமிழ்ப் படம் தென்னுட்டில் பல ஊர்களில் இப்பொழுது காண்பிக்கப்பட்டு வருகிறது. அதில் இந்தக் காட்சியை காணலாம்.

ளும், பாட்டைக் கரைத்துக் குடிப்பவர்களும் முன்பே ஏராளமாய் இருக்கின்றனரே! நீரும் எதற்காக சேர வேண்டும்?

தண்டபாணி (உளுந்தூர்பேட்டை)

குமாரி கமலாவுக்கு விவாஹம் ஆகி விட்டதா? தாய் தந்தையர் இருக்கின்றனரா? அவருக்கு வயதென்ன ஆகிறது? தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

பதினாறே வயதாகும் கமலாவுக்கு இன்னமும் விவாஹம் ஆகவில்லை. பெற்றோர் இருக்கின்றனர். இம்மாதம் வெளி வந்துள்ள ஜூபிடரின் ''விஜயகுமாரி'' யில் நீங்கள் அவரைச் சந்திக்கலாம். ஈஸ்டர்ன் ஆர்ட் பிக்சர்ஸார் அவரை கதா நாயகியாகவே நடிக்கச் செய்து ''லாவண்யா'' என்ற தமிழ்ப் படத்தைத் தயாரித்து வருகின்றனர்.

எம். வேலாயுதம் (நாவலபிட்டிய)

டி. கே. பட்டம்மாள் எவ்வளவோ படங்களில் இனிமையாய் பின்னணி கீதம் பாடியிருக்கிறாரே. அவர் நேரில் ஏன் படங்களில் நடிக்கவில்லை?

எல்லோருமே படங்களில் நடிக்க விரும்புவர் என்றோ, எல்லோருக்குமே சினிமாவிற்கு ஏற்றதான முக அழகும், உடலமைப்பும் இருக்கும் என்றோ நீர் நினைப்பது தவறு.

வி. கே. கார்த்திகேயன் (அயோத்தியா பட்டணம்)

பிற பாஷைப் படங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பது சரியா? உங்கள் அபிப்பிராயம் என்ன?

சரியென்று தான் எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அது அரைகுறை முயற்சியாய் இருக்கக் கூடாது. படங்களை மொழி பெயர்ப்பதால் படமுதலாளிகளின் வருமானம் அதிகரிக்கும். மேலும் அதிகப் பணத்தைச் செலவழித்து, இந்தியா பூராவிலும் காட்டக் கூடிய சிறந்த படங்களைத் தயாரிப்பதற்கு இது உதவியாக இருக்கும்.

எஸ். ஏ. முருகேசன் (மலாயா)

டி. எஸ், பாலய்யாவை சிறுவர் முதல் பெரியோர் வரை யாவரும் கேவலமாகப் பேசுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன?

சதா வில்லனாய் தோன்றும் அவரை சகலரும் வெறுப்பதில் ஆச்சரியம் என்ன?

ச. ராஜாமணி (பம்பாய்)

மாயாவதி படத்தில் கூடு விட்டுக் கூடு பாயும் வித்தையை இரண்டே நிமிஷத்தில் கற்றுக் கொடுக்கிறார்களே. இது அவ்வளவு சுலபமானதா?

சுலபமானதாய் இல்லா விட்டால் இப்படி மஹாலிங்கம் அடிக்கடி 'கூடு விட்டுக்கூடுபாய்வாரா?'—என்று விஷயம் தெரிந்த ஒரு நண்பர் கேட்கிறார்!

ஜி. சம்பந்தம் (ஆமதாபாத்)

கே. டி. ருக்மணி முதலில் நடித்த படம் எது? தற்போது அவர் நடிக்கும் படம் எது?

முதன் முதலில் கே. டி. ருக்மணி நடித்த படம் இம்பீரியல் பிலிம் கம்பெனியாரின் ''பாரிஜாத புஷ்ப ஹாரணம்.'' தற்போது அவர் எந்தப் படத்திலுமே நடிக்கவில்லை.

பி. எல். பெரியண்ணன் (சின்னபாலம் பாக்கம்)

ஞான சௌந்தரியில் 'அருள் தாரும் தேவ மாதா' என்ற பாட்டும், வேலைக்காரியில் 'உலகம் பலவிதம்' என்ற பாட்டும் எம். வி. ராஜம்மாவால் பாடப்பட்டவையா, இல்லையா?

இரண்டும் அவரால் பாடப்பட்டவை அல்ல. ராஜம்மா பாடுவதை நிறுத்தி பல வருஷங்கள் ஆகி விட்டன.

ஏ. எப். அஜீஸ் (பாலக்காடு)

காதல், சோகம், ஹாஸ்யம் இம்மூன்று ரஸபாவங்களையும் நடிப்பதில் ராஜம்மாவை விட பானுமதி தேர்ந்தவர் என்று கருதுகிறேன். நீர் என்ன சொல்லுகிறீர்?

நான் புதிதாகசொல்லுவதற்குஒன்றும் இல்லை. நீர் சொல்லுவதை அப்படியே ஆமோதிக்கிறேன்.

ச. அகிலாண்டேஸ்வரி (சிங்கப்பூர்)

சில பத்திரிகைகளில், சினிமாவில் நடிக்கும் பெண்களைப் பற்றி, ''அவள் நடத்தை இப்படி, இவள் நடத்தை அப்படி'' என்றெல்லாம் எழுதுகிறார்களே; இது சரியா?

இதை சரியல்ல வென்று நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் சினிமாவில் நடிக்கும் பெண்களிடம் தூய நடத்தை குதிரைக் கொம்பாய் இருக்கிற தென்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளுகிறீர்களா?

விஜயாவின் ''சாவுகார்'' என்ற தெலுங்குப் படத்தில் வண்ணாத்தி ராயியாக நடிக்கும் கனகம்.

பிரதிபாவின் "ஸ்ரீ லக்ஷ்மம்மா கதா" என்ற தெலுங்குப் படத்தில் அஞ்சலிதேவி தர்மபத்னியாக நடிக்கிறார்.

பிரதிபாவின் "ஸ்ரீ லக்ஷ்மம்மா கதா" தெலுங்குப் படத்தில் சூர்யப்பிரபா தாஸியாகத் தோன்றுகிறார்.

லாவண்யா பிக்சர்ஸார் மிகுந்த பண
செலவில் தயாரித்துவரும் "பாரி
ஜாதம்" தமிழ்ப் படத்தில் மஹா
லிங்கம் கிருஷ்ணனாக நடிக்கிருர்.

லாவண்யாவின் "பாரிஜாதம்" தமிழ்ப் படத்தில் ருக்மணியாக நடிக்கும் எம். வி. ராஜம்மாவும், தோழியாக நடிக்கும் பார்வதியும்.

''திருகுபாடு'' தெலுங்குப் படத்தில் ஒரு ஆனந்தக் கட்டம். (வி. எச். நாராயண ராவ், சாந்த குமாரி.)

ஜுபிடரின் "விஜய குமாரி"யில்
புது நக்ஷத்திரம் வைஜயந்தி மாலா
நடனம் ஆடியிருக்கிருர்.

விஜயா புரொடக்ஷன்ஸார்
தயாரித்துவரும் "சாவுகார்"
தெலுங்குப் படத்தில் நடிக்கும்
என்.டி.ராமாராவும், ஜானகியும்.

லண்டனில் ஒரு சமயம் ஷேக்ஸ்பியரின் நாடகமொன்று நடந்தது. ஒரு காட்சியில், கதாநாயகன் ஆத்திரத்தில் ஒருவனைக் கொலை செய்துவிடுகிறான். அடுத்த நிமிஷமே அதை உணர்ந்து வருந்துகிறான். அந்தக் கட்டத்தில், அவன் ரத்தம் படிந்த தன் கைகளைப் பார்த்துக்கொண்டு, ''இந்தப் பாபச் சின்னத்தை நான் எப்படி போக்குவேன்'' என்று பிரலாபிக்கிறான். உடனே நாடகம்பார்க்க வந்திருந்தவர்களில் ஒரு ரஸிகன், "பியர்ஸ் ஸோப் மூலம் கழுவுகிறதுதானே!'' என்று சொன்னானாம்.

மறுநாள், 'பியர்ஸ் ஸோப்' கம்பெனி நிர்வாகி, முதல் நாள் நாடகத்தில் தமது கம்பெனி சோப்பை சிபார்சு செய்த அந்த ஆசாமியைத் தேடிப் பிடித்து ஆயிரம் பவுனுக்கு ஒரு 'செக்'கை கொடுத்தாராம். ஏன்? அவ்வளவு பெரிய கூட்டத்தில், அந்த ஆசாமி சரியான சந்தர்ப்பத்தில் தம் சோப்பை விளம்பரப் படுத்தியதற்காகத்தான்!

* * *

இந்த சம்பவத்தை ஏன் சொன்னேன் என்றால் விளம்பரத்திற்கு உள்ள சக்தியைக் குறிக்கத்தான். ஆயிரக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்து விளம்பரம் செய்தால் மட்டும் போதாது. அது நூதனமாக, நுண்ணறிவுடன் செய்யப்பட வேண்டும். மிஸ். மாலினி படத்தில் கொத்தமங்கலம் சுப்பு கூறுவதுபோல, "இது விளம்பர யுகம்.'' விளம்பரம் இல்லாவிட்டால் நல்ல சரக்குகூட விற்பனை ஆகாது.

தம்பிடி பீடி முதல் ஆயிரக் கணக்கான ரூபாய்கள் பெறுமானமுள்ள 'ப்யூக்' கார்வரை எல்லாவற்றிற்கும் விளம்பரம் செய்யப்படுகிறது. விளம்பரத்தின் அளவைப் பொறுத்தேயிருக்கிறது அவைகளின் வியாபாரம். "பூக்கடைக்கு விளம்பரம் எதற்கு?'' என்று நீங்கள் கேட்கலாம்? ஆனால் வாசனை யில்லாத—வாடாமல்லிகை—கனகாம்பரம் போன்ற— பூக்களும் இருக்கின்றனவே! அவைகளுக்கு விளம்பரம் அவசியந்தானே!

* * *

மற்ற வியாபாரங்கள் எப்படியிருந்தாலும், சினிமா என்னவோ முழுக்க முழுக்க விளம்பரத்தைத்தான் நம்பியிருக்கிறது. 'எக்ஸ்ட்ரா' ஒரு உப நடிகை ஆகவும், சாதாரண நடிகை ஒரு நக்ஷத்திரம் ஆகவும்—வேறு பலரின் தயவை எதிர்பார்ப்பது ஒருபுறமிருக்க—விளம்பரத்தின் கிருபையைத்தான் அதிகமாக நாடவேண்டியிருக்கிறது. மட்ட ரகமான படங்களைத் தயாரித்தவர்கள் தங்கள் படம் வெற்றிகரமாக ஓட விளம்பரத்தையே கருவியாகக் கொள்ளுகின்றனர். சிறந்த படங்களைத் தயாரித்தவர்களோ, மட்ட ரகமான படங்களுக்கு நடுவில் தங்களது படம் ஜொலிக்க வேண்டுமே என்பதற்காக விளம்பர சக்தியை பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

* * *

இந்த சந்தர்ப்பத்தில் படத் தொழிலில் விளம்பரம் சம்பந்தப்பட்ட சில சம்பவங்கள் எனக்கு நினைவுக்கு வரு

கின்றன. மேல் நாட்டு நடிகை கிரேட்டா கார்போ விளம்பரத்தையே விரும்பாத நடிகையாம். வடநாட்டு நடிகை சாந்தா ஆப்தேகூட இதுபோலத் தான் கூறிக் கொண்டிருந்தார். "விளம்பரம் வேண்டாத நடிகைகூட உண்டா என்ன?" என்று எல்லோரும் அதிசயிக்கட்டுமே. அதுவே ஒரு பெரிய விளம்பரம்தானே என்று நினைத்துத்தான் மேற்படி நடிகைகள் இப்படிக் கூறியிருக்க வேண்டும். "விளம்பரம் வேண்டாம்" என்று சொன்னதினுல்தான் இன்று சாந்தா ஆப்தே இருக்கும் இடம் தெரியாமல் இருக்கிருர் போலும்!

* * *

மேற்குறித்த, 'விளம்பரம் வேண்டாதவர்கள்' ஜாப்தாவில் சேர்ந்த மற்ருெருவர், செய்திப்பட ஸ்தாபனத்தின் மாஜி ஊழியர் ஒருவர். "......... பத்திரிகையின் ஆசிரியர் எனக்கு மிகவும் வேண்டியவர். என்னைப் பற்றி எழுதாதீர்கள்என்று அவரைக் கேட்டுக் கொண்டேன். அப்படி இருந்தும் எழுதிவிட்டார்" என்று பெருமையாகப் பேசுவார். ஆனல் அந்தக் குறிப்பிட்ட பத்திரிகையின் ஆசிரியரை நேருக்கு நேராக சந்திக்கும் போதோ, "என்னைப்பற்றி எழுதியிருந்த இதழின் ஒரு பிரதியை எனக்கு அனுப்புவதுடன் முக்கியமான ஆசாமிகளுக்கெல்லாம் அனுப்புங்கள்" என்று கேட்டுக் கொள்வார். சுய விளம்பரத்தில் இது ஒரு ரகம்!

* * *

எனக்குத் தெரிந்தவரையில் விளம்பரத்தை விரும்பாத தமிழ் நடிகைகளே கிடையாது. சிலர் தாங்களாகவே விளம்பரம் செய்து கொள்ளுகிருர்கள். சிலர் விளம்பரம் செய்யப்படுகிருர்கள். ரஜனி என்ற நடிகைக்கு விளம்பரம் செய்து கொள்வதில் தனி மோகம். பல்பொடி முதல் ரேடியோ வரை எந்த விளம்பரத்திற்கும் தம் புகைப் படத்தைக் கொடுத்து உதவ அவர் தயங்குவதில்லை. அந்தப் பொருள்களுக்காக, அவர்கள் செய்யும் விளம்பரங்களிலெல்லாம் நடிகையின் படம் இருக்கும். இப்படிக் கிடைக்கும் விளம்பரம் சாதாரணமாகக் கிடைக்கக் கூடியதா?

* * •

ஆயிரம் பிரதிகளுக்குள் விநியோகமுள்ள ஒரு சினிமாப் பத்திரிகையின் ஆசிரியர், பல ஆயிரம் பிரதிகள் விநியோகமுள்ள மற்ருெரு பிரபல சினிமாப் பத்திரிகையின் ஆசிரியரைத்தாக்கி ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். குறைந்த விநியோகமுள்ள அந்தப் பத்திரிகையின் ஆசிரியரை நான் சந்தித்தபோது, "அந்தப் பிரபல பத்திரிகாசிரியரை நீங்கள் எதற்காகத் தாக்கி எழுதினீர்கள்?" என்று கேட்டேன். அதற்கு அவர் கூறிய பதிலைக் கேட்டு நான் திகைத்துப் போனேன்! அவர், "அந்தப் பிரபல ஆசிரியர் தம் பத்திரிகையில் என் கட்டுரைக்கு பதில் எழுதுவார். அதன் மூலம் எனக்கும் என்னுடைய பத்திரிகைக்கும் நல்ல விளம்பரம் ஏற்படும். அதற்காகத்தான் இந்த தந்திரம்" என்ருர். ஆனல் அவரது தந்திரம் பலிக்கவில்லை. அந்தப் பிரபல பத்திரிகாசிரியர் இவருடைய கட்டுரையை லக்ஷியமே செய்யாமல் சும்மா இருந்துவிட்டார்!

• • •

நம் படங்களில் ஒன்றிரண்டுக்கு செய்யப்பட்ட நூதன விளம்பரங்களைப் பற்றி இங்கு கூறலாம். காமதேனு என்ற ஒரு படம் வெளிவந்தது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அந்தப் படத்திற்காகச் செய்யப்பட்ட விளம்பரங்கள் சினிமா உலகில் ஒரு பரபரப்பை உண்டு பண்ணின. ஒரு விளம்பரத்தில், கதாநாயகியின் இரு கண்களை மட்டும் போட்டு, "பேசும் இக் கண்களைக் காணுங்கள்" என்று குறிப்பிட்டனர். பிறகு உதடுகளை மட்டும் போட்ட, "கவர்ந்திழுக்கும் உதடுகள்" என்ற விளம்பரம் வெளிவந்தது. இப்படியாக கதாநாயகியை ஒவ்

• •

டெஸ்பி பில்ம்ஸாரின் "உண்மையின் வெற்றி" தமிழ்ப் படம் துரிதமாய் தயாராகி வருகிறது. அதில் டி. ஏ. ஜெயலக்ஷ்மியும், மேனகாவும் முக்கிய பாகங்களில் தோன்றும் ஒரு காட்சி இது.

வொரு அவயவமாக விளம்பரப்படுத்திய நூதன முறை ரஸிகர்களிடையே பேச்சைக் கிளபபி விட்டது.

* * *

அசோகா பில்ம்ஸின் அலிபாபாவும் நாற்பது திருடர்களும் என்ற படத்திற்கு புது மாதிரியானதோர் விளம்பரத்தைக் செய்தார்கள். அப் படத்தில் நடித்த டி. ஏ. மதுரத்தின் போட்டோ ஒன்றை "ஆனந்த விகடன்" தீபாவளி மலரில் பிரசுரித்து, "இந்த நடிகை யாரென்று கண்டு பிடித்துக் கூறுகிறவர்களுக்குப் பரிசு" என்பதாக வெளியிட்டார்கள்.

• • •

ஜெமினி நந்தனர் சந்தேகமில்லாமல் ஒரு சிறந்த படம்தான். அதன் (வசூல்) வெற்றியைக் குறித்து சந்தேகம் ஏற்பட்டதோ என்னவோ, படமுதலாளிகள் அப்படத்திற்கு ஒரு புதுமாதிரியான விளம்பர தந்திரத்தைக் கையாண்டார்கள். அப் படத்திலுள்ள சிறந்த மூன்று பாட்டுகளைக் குறிப்பிடும்படி சினிமா ரஸிகர்களுக்கு ஒரு போட்டி நடத்தினர்கள்.

* * *

வாழைப் பழத்தை விரும்பாத குரங்கு இருந்தாலும் இருக்கலாம்; பழுனே விரும்பாத குழந்தை இருக்கவே முடியாது. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயந்தான். ஆனல் ஏவி. மெய்யப்பனளவு இதை யாரும் தெரிந்து கொண்டிருக்க முடியாது. வாழ்க்கை படத்தின் வெற்றிக்கொடி பறப்பதுபோல் அப் படத்தின் விளம்பரம் அச்சிடப்பட்ட லக்ஷக் கணக்கான பலூன்களை மெய்யப்பன் சமீ

பத்தில் (இலவசமாக வழங்கி) பறக்க விட்டிருக்கிறார்! வாழ்க்கை விளம்பரத்திற்கு பலூனைத் தேர்ந்தெடுத்தது நூதனம் மட்டுமல்ல; மிகப் பொருத்தமும்கூட. ஏனெனில், இரண்டின் ஆயுளும் சொற்பகால ஜ்வலிப்பிற்குப் பிறகு, திடீரென்று ஜீவனிழந்து தீண்டுவாரற்றுப் போய்விடுகிறதல்லவா?

• • •

சமீபத்தில் நான் ஒரு நடிகையின் வீட்டிற்குப் போயிருந்தேன். அவர் தம் வீட்டு வேலைக்காரனிடம் ஒரு வாசனை ஸோப்பின் பெயரைக் குறிப்பிட்டு, அதை வாங்கி வரும்படி கடைக்கு அனுப்பினார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நடிகை வேறொரு வாசனை ஸோப்பை உபயோகிப்பதாக, அந்த ஸோப் கம்பெனியார் (நடிகையின் படத்துடன்) விளம்பரம் செய்து வந்தார்கள். ஆனால் நடிகையோ அந்த சோப்பிற்குப் பதில் வேறொரு ஸோப்பை வாங்கி வரும்படி ஆளை அனுப்பியதுதான் ஆச்சரியமாயிருந்தது. இதுபற்றி அவரிடம் கேட்டேன். "நான் அவர்கள் ஸோப்பையே உபயோகிப்பதாகவா அந்தக் கம்பெனிக் காரர்கள் விளம்பரம் செய்கிறார்கள்? என்னவோ, என் போட்டோவும், என் கையெழுத்தும் வேண்டுமென்று கேட்டு வாங்கிப் போனார்கள். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்"—என்று உண்மையைக் கூறினார் நடிகை!

• • •

ஆபாசமான கதைகளை அதைவிட ஆபாசமான புகைப்படங்களுடன் வெளியிடும் ஒரு பத்திரிகைக்காக போட்டோ எடுத்துக் கொடுத்துவரும் ஒரு நாட்டிய நடிகையிடம், "இந்த ஆபாசமான கைங்கரியத்திற்கு உதவி, பெயரை ஏன் கெடுத்துக் கொள்ளுகிறீர்கள்?" என்று ஒரு நண்பர் கேட்டார். அந்த நடிகை என்ன பதில் சொன்னார் தெரியுமா? 'மற்ற பத்திரிகைகள்தாம் என் படத்தைப் பிரசுரிப்பதில்லை. இந்தப் பத்திரிகையாவது பிரசுரிக்கிறதே'' என்று சொல்லிக் கொண்டாராம். நடிகை மீது எனக்கு உண்மையில் பச்சாத்தாபம் உண்டாகியது.

* * *

பல வருஷங்களுக்கு முன்பு வெளி வந்த அதிருஷ்டம் படத்தைப்பற்றிய விளம்பரம், அப்பொழுது பிரபலமாக இருந்த ஒரு சினிமாப் பத்திரிகையில் தலைகீழாக அச்சாகியிருந்தது. இதைக் குறித்து பத்திரிகையின் ஆசிரியருக்கு அநேக கடிதங்கள் வந்து குவிந்தன. "இது தவறுதலாக ஏற்பட்டதல்ல. எல்லோரது கவனத்தையும் சட்டெனக் கவர வேண்டும் என்பதற்காகவேதான் இப்படி தலைகீழாய் வெளியிடப்பட்டது" என்று ஆசிரியர் மறு இதழில் விளக்கம் எழுத வேண்டியதாயிற்று!

• •

அஞ்சலி, பாலசரஸ்வதி, நாகேஸ்வர ராவ், சிவ ராவ் ஆகியோர் நடிக்கும் பிரதிபாவின் "ஸ்ரீ லக்ஷ்மம்மா கதா" என்ற தெலுங்குப் படத்தில் இது ஒரு காட்சி.

இப்பொழுது பிரபலமாக உள்ள ஒரு நட்டுவனார்

மீது அவருடைய சிஷ்யைகளில் ரொம்பப் பேருக்கு மிகுந்த கோபம். சிஷ்யைகளின் பெற்றோர்களுக்கும், பாதுகாப்பாளர்களுக்கும் நட்டுவனார் மீதுள்ள மதிப்பு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. காரணம், அவர் தமது பழைய சிஷ்யைகளின் விஷயத்தில் வரவர அசிரத்தை காட்டி வருவதுதானாம். முன்பெல்லாம் தமது சிஷ்யைகளின் கச்சேரி என்றால் ஆரம்பம் முதல் கடைசிவரை அவரே இருப்பார். இப்பொழுதெல்லாமோ அப்படியில்லை. ஒன்று கச்சேரியை ஆரம்பித்துக் கொடுத்துவிட்டுப் போய்விடுகிறார். அல்லது கச்சேரி பாதி நடந்துகொண்டிருக்கும்போது வந்து தலையைக் காட்டுகிறார்.

அவரைக் குற்றம் சொல்வதிலும் பயனில்லை. தினத்திற்கு ஒரு புதிய சிஷ்யை அவருக்குக் கிடைத்து வருவதால், ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட சிஷ்யைகளின் கச்சேரிகள் நடந்தால், அவர்தான் என்ன செய்வார்? "ஊருக்கு ஒரு நட்டுவனார்; யாருக்கு என்று தட்டுவார்?" என்ற புதுமொழி சரியாயிருக்கிறதல்லவா?

* * *

"அளவுக்கு மீறி அன்னியோன்யமாகப் பழகுவது வெறுப்பை வளர்ப்பதாகும்" என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அதையேதான் "பழகப் பழக பாலும் புளிக்கும்" என்று சொல்லுவார்கள். இதை நிரூபிப்பது போலத்தான் முடிந்துவிட்டது ஒரு பிரபல நடிகர்—நடிகை காதல் நாடகமும்.

பிரபலமாயுள்ள இந்த நடிகர் சொந்தத்தில் ஒரு படத்தைப் பிடிக்க முனைந்தார். தம்முடன் சில படங்களில் கதாநாயகியாக நடித்த ஒரு பிரபல நடிகையையே தம் சொந்தப் படத்திலும் கதாநாயகியாக நடிக்க ஏற்பாடு செய்தார். நடிகைக்கோ, நடிகர்மீது கண்ணை மறைக்கும்காதல். அது வளர்ந்து, கொழுந்துவிட்டது. நடிகரை சில மணி நேரம் பார்க்கா விட்டாலும் கூட நடிகைக்கு பொழுது போகாதாம்.

* * *

அவர்களுக்குள் இருந்த நேசத்தையும் பாசத்தையும் கண்டு சினிமா வட்டாரத்திலுள்ளவர்கள் வியந்தனர். "நடிகரின் சொந்தப் படத்தில் நடிக்க நடிகை பணம் வாங்கப் போவதுகூட இல்லையாமே?" "நடிகர் தயாரிக்கும் படத்திற்கு இந்த நடிகைதான் பண உதவி செய்கிறாளாமே?" இப்படியெல்லாம் ரஸமாகச் செய்திகள் அடிபட்டன.

* * *

ஆனால் முடிவு என்ன? நடிகரின் சொந்தப் படத்தில் அந்த நடிகைக்கு பதில் இப்பொழுது வேறொரு நடிகை கதாநாயகியாக நடித்துக்கொண்டிருக்கிறார். விஷயம் முற்றி 'கோர்ட்'டுக்கு வந்துவிடுமோ என்று ரஸிகர்கள் கவலைப்படுகிறார்கள்.

குறைந்த விலை! நல்ல ரகம்!
எல்லாவித பட்டு, மில் ஜவுளிகளும் எம்மிடம் கிடைக்கும்

ஜெயின் சில்க் ஸ்டோர்
62-C, அடையாறு பிரிட்ஜ் ரோடு,
அடையாறு :: சென்னை-20.

நக்ஷத்திரக் காதல்

"கோகுலன்"

ஊரெல்லாம் அடிபட்ட அந்த வதந்தி சிவராமய்யரின் காதுகளுக்கு எட்டாமலிருக்க முடியுமா? 'பிரபல சினிமா நக்ஷத்திரம் மிஸ். மோஹினியை ரகுநாதன் மணந்து கொள்ளப் போகிருன்' என்ற அந்த வதந்தி — தவறு — செய்தி, சிவராமய்யரை திடுக்கிடவைத்ததில் ஆச்சரியமில்லை. முதலில் அவர் அதை நம்பவேயில்லை. தம்முடைய மகன் ரகுநாதன் அப்படிப்பட்ட காரியத்தில் இறங்குவான் என்று அவர் சொப்பனம்கூடக் கண்டதில்லை. ஆனல், ரகுநாதனே அவரிடம் வந்து, தனது தீர்மானத்தைத் தெரிவித்த பிறகு, நம்பாமல் என்ன செய்வது!

சிவராமய்யர் செல்வவந்தர். பரம்பரையாக கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய ஒரே அருமை மகன்தான் ரகுநாதன். ரகுநாதனுக்கு சிறு பிராய முதலே சங்கீதம், நாட்டியம் இவைகளில் அலாதிப் பற்றுதல் உண்டு. கட்டிளங் காளைப் பருவத்தை அடைந்த அவன், கலை உலகம் புகழும் திரை அழகி மிஸ். மோஹினியிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்திருந்தான். அவளுடன் அவன் நெருங்கிப் பழகுவதைக் கண்டுதான் ஊரில் அந்த வதந்தி பரவி வந்தது. ரகுநாதன் துணிந்து தன் அபிலாஷையை தந்தையிடம் வெளியிட்டு விட்டான்.

தந்தை கோபத்தில் கொதித்தார்; குதித்தார். அவனைத் தன் மகனில்லை என்று நிராகரித்து விடுவதாக பயமுறுத்தினுர். ரகுநாதன் அதனுல் கலங்கி விடவில்லை. அதற்கு மாருக அவன் தன் காதலுக்காக எதையும் தியாகம் செய்யத் தயார் என்று கூறிவிட்டான். சாம, பேத, தான, தண்டம் என்ற சகல பிரயோகங்களும் மகனிடம் பலிக்காது போனது கண்டு மனம் இடிந்து போனுர், சிவராமய்யர்.

அந்த சமயத்தில், சிக்கலைத் தீர்த்து வைக்கவே வந்தவன்போல, அவருடைய மைத்துனன் ராமசாமி வந்து சேர்ந்தான். சிவராமய்யர் அழமாட்டாத குறையாக விஷயத்தை அவனிடம் விளக்கிக் கூறினுர். ராமசாமி தன் அத்திம்பேருக்கு ஆறுதல்கூறி, ரகுநாதனைத் திருத்தி வழிக்குக் கொண்டுவரும் பொறுப்பைத் தன்னிடம் விட்டு விடும்படி சொன்னுன்.

ஒரு நாள் மருமகனை அழைத்துக் கொண்டு பீச்சுக்குக் கிளம்பினுன் ராமசாமி. பல விஷயங்களைப்பற்றிப் பேசுவது போலப் பேசி, ரகுநாதனின் காதல் விஷயத்தை எடுத்தான். "ரகுநாதன் சொல்லுகிறேன் கேள். இந்த சினிமாக்காரியை மணக்கும் ஆசையைமட்டும் விட்டுவிடு. நான் ராஜாத்தி மாதிரி ஒரு பெண்ணைப் பார்த்து உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்."

"மாமா! அந்தப் பேச்சே வேண்டாம். எங்கள் காதல் எப்படிப்பட்டது என்பது உங்களுக்குத் தெரிந்தால், நீங்கள் இப்படிப் பேசமாட்டீர்கள்."

"என்னடா பிரமாத சகுந்தலா-துஷ்யந்தன் காதல்! உன்னைப் போல இன்னும் எவ்வளவு காதலர்களோ அவளுக்கு?"

"மாமா! எல்லா நக்ஷத்திரங்களையும் போன்றவள் இல்லை என் மோஹினி. அவளுக்கு என்மீது அளவில்லாக் காதல் உண்டு."

"பணத்துக்கு அடிமையாகாத நக்ஷத்திரமே கிடையாது! நாளைக்கே நான் போய், 'பத்தாயிரம் ரூபாய் தருகிறேன். ரகுநாதனை மணக்க முடியாது என்று மறுத்துவிடு' என்று கூறினுல் அவள் சம்மதித்து விடுவாள் தெரியுமா?"

"மோஹினி அப்படிப்பட்டவள் அல்ல. பணத்தை அவள் துச்சமாகக் கருதுகிறவள்."

"சரி! ஒரு பரீக்ஷை நடத்திப் பார்த்து விடுவோமா? உன் காதலைப் பெரிதென மதிக்கிருளா, பணத்தை மதிக்கிருளா, என்பது தெரிந்துவிடும்."

அந்தப் பரீக்ஷைக்கு ரகுநாதன் சம்மதித்தான். அவனுக்கு மிஸ். மோஹினியின் காதல் மிகத் தூய்மையானது என்ற அவ்வளவு திடநம்பிக்கை.

பிறகு இருவரும் நடத்த வேண்டிய பரீக்ஷையைப் பற்றிப் பேசிவிட்டு வீட்டிற்குத் திரும்பினுர்கள்.

மறு நாள் காலை. ராமசாமியையும், ரகுநாதனையும் சுமந்துகொண்டு அவர்களது மோட்டார் மிஸ். மோஹினியின் பங்களாவுக்கு சென்றது. கூர்க்கா அவர்கள் இருவரையும் 'ஹாலி'ல் உட்கார வைத்தான். ராமசாமி தம் பெயர் எழுதிய ஒரு சீட்டை உள்ளே அனுப்பினுன். கூர்க்கா அதை எடுத்துக் கொண்டு உள்ளே போனதும், ராமசாமி, "ரகு, நீ அதோ அந்த பீரோவுக்குப் பின்னல் மறைந்து நின்று கொண்டு நடப்பவைகளைப் பொறுமையாக கடைசி வரையில்

கவனி'' என்றான். ரகுநாதன் மாமா கூறியபடியே ஒளிந்து கொண்டான்.

டாம்பீகமாக உடை உடுத்துக் கொண்டு, ஹாலுக்குள் வந்த மிஸ். மோஹினி ராமசாமிக்கு வந்தனம் கூறி விட்டு, அவன் வந்த விஷயம் என்ன வென்று விசாரித்தாள்.

"என் மருமகன் தங்கலைத்தான் கல்யாணம் செய்து கொள்வேன் என்று ஒரே பிடிவாதமாக இருக்கிறான். எங்கள் குடும்பம் மிகவும் கௌரவமானது ....."

"சரி, அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்" என்று இடை மறித்தாள் நக்ஷத்திரம்.

"உங்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து விடுகிறேன். அவனை 'மணந்து கொள்ள முடியாது' என்று நீங்கள் மறுத்துவிட வேண்டும்" என்றான் தட்டுத் தடுமாறிக்கொண்டு.

"ஏன், ஐயா! சினிமாக்காரி என்றால் அவளுக்கு உள்ளமே கிடையாது என்பது உங்கள் எண்ணமா? நான் கேவலம் பத்தாயிரம் ரூபாய்களுக்காக இதற்கு ஒப்பவே மாட்டேன். நீங்கள் போகலாம்!" என்று கூறிவிட்டு அங்கிருந்து உள்ளே போனாள்.

ரகுநாதன் தன் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டு வந்தான். "மாமா! பார்த்தீர்களா! இப்பொழுது என்ன கூறுகிறீர்கள்? பணம் என்றதும் மயங்கி விட்டாளா?" என்றான். ராமசாமிக்கு என்ன கூறுவது என்று புரியவில்லை. இந்த சமயத்தில், மிஸ். மோஹினி திரும்ப அங்கே வருகிறாள் என்பதற்கு அடையாளமாக, அவள் முழங்கை வரையில் அடுக்கிக் கொண்டிருந்த வளையல்களின் சப்தம் எழுந்தது.

ராமசாமி அவசரப் படுத்தவே, ரகுநாதன் மீண்டும் தன் 'ஷெல்டரு'க்குப் போய் மறைந்து கொண்டான்.

"நான் உள்ளே போய் யோசித்துப் பார்த்தேன். நீங்கள் கூறுவதும் நியாயம் என்றே எனக்குத் தோன்றுகிறது. தொகையைக் கொஞ்சம் அதிகப்படுத்தினால் நீங்கள் கூறுகிறபடி செய்ய எனக்கு ஆக்ஷேபனை யில்லை" என்று கூறிக் கொண்டே திரும்பி வந்தாள் நக்ஷத்திரம்.

ராமசாமிக்குப் போன உயிர் திரும்பி வந்தது மாதிரி இருந்தது. "சரி ரூபாய் இருபதினாயிரம் தருகிறேன். சம்மதமா?" என்றான்.

"சம்மதம்" என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினாள் நக்ஷத்திரம்.

ராமசாமி, "சரி......இன்று சாயங்காலமே நான் பணத்துடன் வருகிறேன்." என்று கூறியதும், நக்ஷத்திரம் உள்ளே போகக் கிளம்பியவள், சட்டென்று நின்று, "அடடா உங்கள் மருமகன் பெயர் என்ன? அதைக் கேட்க மறந்து விட்டேனே" என்றாள்.

"ரகுநாதன்" என்றான் ராமசாமி.

"ரகுநாதனா? எந்த ரகுநாதன்? சட்டென்று ஞாபகத்துக்கு வரவில்லையே! இருங்கள் இதோ ஒரு நிமிஷத்தில் வருகிறேன்" என்று கூறி உள்ளே போய் விட்டு, அடுத்த நிமிஷமே திரும்பி வந்தாள். அவள் கையில் ஒரு 'ஆல்பம்' இருந்தது.

ராமசாமியின் முன்னால் தான் கொண்டு வந்த அந்தப்பெரிய 'ஆல்ப'த்தைவைத்து "இதோ இந்த 'ஆல்பத்'திலுள்ள வாலிபர்களின் போட்டோக்களில் எது உங்களுடைய மருமகனது போட்டோ? அதை மட்டும் எடுத்துத் தனியே வையுங்கள். நான் பத்து நிமிஷத்தில் திரும்ப வருகிறேன்" என்று கூறி, உள்ளே போய் விட்டாள் மிஸ். மோஹினி.

ரகுநாதனுக்கு அவமானத்தால் மனம் குன்றி விட்டது. தன் மாமாவின் முகத்தில் விழிக்கவே அவனுக்கு வெட்கமாக இருந்தது. தன் மறைவிடத்திலிருந்து வெளிப்பட்ட அவன் அடுத்த நிமிஷமே அவரை அழைத்துக் கொண்டு அந்த பங்களாவைவிட்டு வெளியேறினான்.

பத்துநிமிஷங்களுக்குப்பிறகு 'ஹாலு'க்குத் திரும்பி வந்த நக்ஷத்திரம் வெறும் 'ஹாலை'ப் பார்த்து ஏமாந்தாள்.

இப்பொழுது விலைகள்
குறைக்கப் பட்டுள்ளன

Coffee
Ours for Quality

GANESH & Co
(MADRAS) LTD.

உயர்தரமான, மணம்
மிகுந்த காப்பிப் பொடி
பவுண்டு—ரூ. 2-4-0

நடனம் ஆடினர்

நாட்டியம் உயர்ந்த குடும்பங்களில் பரவ வேண்டும் என்பதற்காக, கலைஞர்கள் ஒரு காலத்தில் படாத பாடுபட்டார்கள். அப்போதுதான் கலை முன்னேற்றமடையும் என்று பிரசாரம் செய்து, அதற்கான புராதன மேற்கோள்களையும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இப்போது அநேகமாக நடுத்தர குடும்பங்களில்தான் கலையைக் கலையாக பாவிக்கிறார்கள். உயர்ந்த குடும்பத்தினர் கலையை ஆடம்பரத்தின் ஒரு அம்சமாகவோ, பொழுது போக்காகவோ கருதுகிறார்களோ என்னவோ என்று சந்தேகிக்கும்படி இருந்தது, கடந்த மாதம் 26ம் தேதியன்று திருவல்லிக்கேணி நேஷனல் பெண்பாட்சாலையில் நடந்த குமாரி உஷாவின் நடனக் கச்சேரி.

"பச்சைமா மலைபோல்" என்ற பாட்டின் நடுவில் வந்த "சொல்கட்டுகள்" சொல்லப் படுவதற்குச், சற்று முன்னதாகவே, ஜதிகள் ஆடுவதற்காகத் தயார் செய்துகொள்வது போன்றவைகள், போதிய அநுபவமில்லை என்பதை எடுத்துக்காட்டின. கச்சேரியின் முற் பாதியில் விறுவிறுப்பேயில்லை. "கண்ணனை" என்ற பதம் ஆரம்பிப்பதற்கு முன்னால்தான் நடன உபாத்தியாயர் ராமய்யா பிள்ளை மேடைக்கு வந்தார். அதற்குப்பின் பதாபிநயம் சற்று சுமாராயிருந்தது. "சின்னஞ் சிறுகிளியே" என்ற பாரதியாரின் பாட்டுக்கு அபிநயம், காணப்பட்டது. அன்று அந்தக் காற்றோட்டமான திறந்த வெளிப் பந்தலில் நின்றுகொண்டு பார்ப்பது ஒரு பொழுதுபோக்காகவே இருந்தது. ஆங்கிக (அபிநய)த்தை பிழையின்றி செய்தும், தாளப் பிழைகள் இல்லாமலிருந்தும், அசைவுகளில் லாவகமும், ரஸபாவமும் கொஞ்சம் குறைந்திருந்ததால் கச்சேரி பிரமாதமாக சோபிக்காமலிருந்தது. இயற்கையில் நாட்டியத்திற்கு வேண்டிய நல்ல உடல் அமைப்பைப் பெற்றிருக்கும் இவர், தொடர்ந்து பயிற்சி பெற்றால் இந்த சில குறைபாடுகளையும் போக்கிக் கொள்ளலாம்.

• • •

கோகலே ஹாலில் அதே தேதியில், ஹேமா,—விஜயாவின் நடனக் கச்சேரி நடந்தது. இவர்கள் சேர்ந்து ஆடியதைவிட, தனித்தனியே ஆடியது நன்றாக இருந்தது. சேர்ந்து ஆடும்போது, இருவரும் ஆங்கிகப் பிழைகளின்றி ஆடியும், அசைவுகளில் ஒற்றுமையில்லாமலிருந்ததால் சோபிக்கவில்லை.

தனிக் கச்சேரியைவிட இருவர் சேர்ந்து ஆடும் கச்சேரிக்கு ஒத்திகை அதிகமாக இருக்க வேண்டும். நடன ஆசிரியருக்கும் கச்சேரி நடத்துவதில் இருக்கும் அக்கறையைவிட, ஒத்திகை நடத்துவதில் அதிக அக்கறை இருக்க வேண்டும். நட்டுவனார்களுக்கு பெயரும், புகழும், பணமும் கிடைப்பது சிஷ்ய கோஷ்டிகளால் தான். எப்படிப்பட்ட திறமைசாலிகளாயிருந்தாலும் நட்டுவனாரே வந்தா மேடை மீது ஆடப்போகிறார்! சிஷ்யைகள் மூலமாகத்தானே தமது வித்தையை வெளிப்படுத்த வேண்டும். சிஷ்யைகளும் ஆசிரியர் கற்றுக்கொடுத்ததை அடிக்கடி அப்பியசித்து பழக்கிக் கொள்ள வேண்டும். கற்றது கொஞ்சமாயிருப்பினும் பிழைகள்

இன்றி ஆடத் தெரிந்தால், திரும்பத் திரும்ப அதையே பார்த்துக் கொண்டிருந்தால்கூட ரஸிகர்களுக்கு சலிப் பேற்படாது. இனி நடத்தும் கச்சேரிகளிலாவது இப் பிழைகளுக்கு இடமில்லாமல் போதிய ஒத்திகையுடன மேடைக்கு வருவார்கள் என்று நம்புகிறோம்.

ஆடையலங்காரத்திற்கு விசேஷ கவனம் செலுத்தியிருந்தது குறிப்பிடத் தக்கது.

சாருபாலாவுக்கு பரிசளிக்கப் பட்ட நடராஜ விக்ரஹம்

ழுடன், ரஸிகர்களிடையே ஒரு விறுவிறுப்பையும் உண்டாக்கி விட்டதாம். நட்டுவனார் டி. எஸ். ஷண்முகசுந்தரம் பிள்ளையின் சிஷ்யையான குழந்தை சாருபாலா வருங்காலத்தில் கலைப் பணியில் அதிக பங்கு கொள்ளுவார் என்றே நம்புகிறோம்.

• •

கும்பகோணம் பொருட்காட்சி முத்தமிழ் மாளிகையிலேயே 11-ம் தேதியன்று இவ்விருவருள் விஜயாவின் அபிநயம் அழகாக இருந்தது. இருவரும் வழுவூர் ராமய்யாப் பிள்ளையிடம் சிக்ஷை பயின்றவர்கள்.

• • •

குழந்தை விஜயலக்ஷ்மியின் நடனக் கச்சேரியும் நடைபெற்றது. இவரும் நட்டுவனார் ஷண்முகசுந்தரம் பிள்ளையிடம் சிக்ஷை பயின்று சமீபத்தில் அரங்கேற்றல் நடத்தியவர்.

• • •

சமீபத்தில் அரகேற்றல் நடத்திய குழந்தை சாருபாலாவின் கச்சேரி கும்பகோணம் சுதேசி பொருட்காட்சியின் முத்தமிழ் மாளிகையில் பிப்ரவரி 28ம் தேதியன்று நடந்தது. பொருட் காட்சியினர் குழந்தையின் ஆட்டத்தை மெச்சி, "நாட்டியச் செல்வி" என்ற பட்டத்தையும், ஒரு நடராஜ விக்ரஹத்தை பரிசாகவும் அளித்தனர். "நாட்டியக் கலையை தலைகீழாகவும் பாடம் செய்தவர்" என்று பொருள்படும் பட்டங்களை அநேகர் வழங்குகிறார்களே; அப்படியின்றி குழந்தை சாருபாலாவிடம் காணப்படும் கலையை நன்குணர்ந்து, அடக்கத்தையும் சிறப்பையும் குறிக்கும் "நாட்டியச் செல்வி" என்னும் பட்டத்தை பொருட் காட்சியினர் வழங்கியிருக்கிறார்கள் என நம்பப்படுகிறது. குழந்தையின் தகப்பனார் டாக்டர் வி. ஆர். மூர்த்தி தொகுத்த "நம்மவர் நம்மையே ஏமாற்றினால்" என்ற (வாழ்க்கை படத்தின் "டடடா" மெட்டுப்).பாட்டுக்கு அபிநயம் மிக அழகாகவும் கச்சிதமாகவும் இருந்த

நடனத்தையே தொழிலாகக் கொண்டு, கலை வளர்ச்சியையே வாழ்க்கையின் லக்ஷியமாகக் கருதி வந்தவர்களின் கலை எப்படியிருந்திருக்கும் என்பதை நேரில் காட்டுவது போலிருந்தது, 12-ம் தேதியன்று ரஸிக ரஞ்சனி சபா ஹாலில் நடந்த பாலசரஸ்வதியின் நடனக் கச்சேரி. கணுக்காலளவு கால் சட்டையும், அதற்கு மேல் ஒரு புடவையும், முழங்கையளவு ரவிக்கையும், பழைய பாணியை ஞாபகமூட்டின.

வேகமான ஜதிகளுக்கு உடலமைப்பு இடங்கொடாமலிருந்தும், தாளப் பிழை கொஞ்சமுமில்லாமல் வேகம் குறையாது ஆடியது மிக விசேஷம். பதாபிநயத்தின் விறுவிறுப்பில் நேரம் போனதே தெரியவில்லை. பதாபிநயங்களுக்கு ஆங்கிகத்தை விட முக பாவம் எவ்வளவு அவசியம் என்பது அன்றைய கச்சேரியில் வெகு தெளிவாக புலனாயிற்று.

[தொடர்ச்சி 67-ம் பக்கத்தில்]



கலியுக பீமன் கேசவன்

வெ. நாராயணன்

கதைகளில் அரிய வீரச் செயல்கள் பலவற்றைப்பற்றிக் கேட்டிருக்கிறோம். அனுமார் மலையையே தூக்கிச் சென்றார். கடலைத் தாண்டினார். பீமன் பல யானை பலமுடையவன். எள்ளைக் கசக்கி எண்ணை பிழிந்து தேய்த்துக் கொள்வான். சில வீரர்கள் யானைகளைப் பந்தாடினார்கள், என்றெல்லாம் படித்திருக்கிறோம். அன்றைய பலச் செயல்கள் செயற்கரியது என்று கருதியது போல, கற்பனையென்றும் புனைப் புரட்டு என்றும் தோன்றியதுண்டு. புராணங்களில் பராக்கிரமசாலிகளின் வலுவை 'இத்தனை யானை பலம் பொருந்தியவர்' என்று தான் கணக்கிட்டனர்.

சாதாரண மனித பலத்திற்குச் சிறிது கூடிய வலிமையை ஒருவர் காட்டும் போதே நமக்கு பெரும் வியப்பு உண்டாகி விடுகிறது. இந்த வியப்பிற்குக் காரணம் நாம் இன்றிருக்கும் பலஹீன நிலைமை தான். இத்தகைய நலிந்த நிலையிலும் நமக்கிடையே சில வீரர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அது நமது பாக்கியமே. இன்னும் சொல்லப் போனால் நம்மிடையே ஒரு "கலியுக பீமனே வாழ்ந்து வருகிறார்" என்றால் அது ஆச்சரியமாகவே இருக்கும். அவரது வீரத்தனத்தைத் தெரிந்து கொண்டவர்கள் சிலர். அவரைப் புரிந்து கொண்டவர்களோ நாலைந்துபேர்களே. கலியுகபீமன் வி. கே. ஆச்சாரி என்னும் கேசவன் சாண்டோவைக். கவிமணி தேசிகவிநாயகப்பிள்ளை, "எனது தோழர்" என்று பெருமிதத்துடன் அழைத்து, தமது கழுத்தில் கிடந்த ஜரிகை மாலையை எடுத்து கேசவனுக்குச் சூட்டி. கீழுள்ள பாமாலையையும் புனைந்து போற்றியிருக்கிறார்.

"ஈடும் எடுப்புமில்லா ஏக பலசாலி
என்னும்
நாடுபுகழ் கேசவ நண்பனே
—பீடுபெற
ஆம் உனக்கின்று அணிகின்றேன்,
நீ, என்முன்
பாரமெடுத்த திறம்பார்த்து."

கவிமணி தம்போடு இணைத்து கேசவனை நண்பனாக்கிக் கொண்டது மட்டுமல்ல. 'நீ இந்திய நாட்டிற் பிறந்த துரதிருஷ்டத்தால், அடைய வேண்டிய பெருமைகளைப் பெற முடியவில்லையே என்று வருந்துகிறேன். ஆனால் இன்று நம் வாழ்நாளிலேயே நம் நாடு சுதந்திரம் பெற்று விட்டதால், உனது வலிமையின் சக்தி, நாட்டின் சக்தியாக உலகம் போற்றும் விதம் நீ திகழ முடியுமென நம்புகிறேன்—நினைத்து மகிழுகிறேன்" என்றார். இந்தக் கேசவன் அவ்வளவு பராக்கிரமம் படைத்தவரா என்பதை சற்றுக் கவனிப்போம்.

இரண்டு வருஷங்களுக்கு முன், இராமநாதபுரம் சென்ற கேசவன், பல வருஷங்களாக பலசாலிகளை எள்ளி நகையாடுவதுபோல் அங்கு கிடந்த உருண்டை வடிவமான பெரிய பாராங்கல்லை பலர் முன்னால் அலக்காகத் தூக்கித் தோளில்தாங்கி முதுகுப் பக்கமாகத் தள்ளினார். அன்றையக் கூட்டத்திலிருந்த ஒரு படுகிழவர், "எனக்கிப்போது எண்பதாவது வயது நடந்து கொண்டிருக்கிறது. என் வாழ்நாளில் இந்த உருண்டைக் கல்லைத் தூக்கியவர் கேசவன் ஒருவர் மட்டும் தான்" என்று புகழ்ந்துரைத்து ஆசீர்வதித்தார்.

கனம் தூக்கும் வலிமை முறையில் (weight lifting) 50 பவுண்ட் முதல்



ஆயிரம் பவுண்டு கனமுள்ள இரும்பை அனுவசியமாய்த் தூக்கிக் காட்டுகிறார் கேசவன்

ஆயிரம் பவுண்டு வரை தூக்கிக் காட்டுகிறார் என்றால், இவ்வளவு பாரம் தூக்குபவர் உலகிலேயே வேறு எவரும் இல்லை என்பதே பொருள். பல பலசாலிகள் மஹாநாடுகளில் கேசவன் முதல் பரிசு பெற்றிருக்கிறார். மஹாநாடுகளில் பலப் போட்டிகளில் கேசவன் கலந்து கொள்ளுகிறார் என்றாலே பலர் பின் வாங்கி விடுவதுண்டு. சென்ற வருஷம் இந்தியாவிலிருந்து லண்டன் ஒலிம்பிக் பந்தயத்தில் கனம் தூக்கும் போட்டியில் கலந்து கொள்ளச் சென்ற நாகர்கோவில் மணி என்பவர் கேசவனின் சீடர்களில் ஒருவரே.

நாகர்கோவிலில் நடைபெற்ற ஒரு வலிமைக் காட்சி விழாவின் போது 300 பவுண்ட் பாரத்தைப் பற்களால் கடித்துத் தூக்கி, உலக 'ரிக்கார்டை' உடைத்தெறிந்தார். சமீப காலமாக பேனுட்டில் ஒருவர் 310 பவுண்டு கடித்துத் தூக்கி விட்டார் என்று செய்தி வந்திருப்பதால், கேசவன் இந்த 'ரிக்கார்டை'யும் உடைக்கப் போவதாகச் சொல்லுகிறார். சற்று கற்பனை செய்து பாருங்கள், சர்க்கஸில் உரலைக் கட்டி பல்லால் தூக்குவதைக் கண்டே, கரகோஷம் செய்துள்ளோம். மூட்டைகளில் மிகவும் கனமானது சக்கரை மூட்டை தான். அதன் கனம் 224 பவுண்டு. இதைத் தலையில் தூக்கவே சாதாரணமாக எல்லாக் கூலிகளாலும் முடியாது. இத்தகைய கனமான 1½ மூட்டையை ஒருவர் பற்களால் கடித்துத் தூக்குகிறார் என்றால், என்னவென்று சொல்ல, அவர் தாடையின் வலுவை? சிந்தித்துப் பாருங்கள்.

சில மாதங்களுக்கு முன் கோவையில் ஜி.டி. நாயுடு அவர்களின் வீட்டின் முன், மாஜி நிதி மந்திரி ஆர். கே. ஷண்முகம் செட்டியார் போன்ற பலர் முன்னிலையில் 12 டயர்கள் போட்ட மிகப் பெரிய மிலிட்டரி லாரியைப் பற்களால் கடித்துக் கரகரவென இழுத்துக் காட்டி சபாஷ் பெற்றார்.

இத்தகைய சர்க்கரை மூட்டைகளில் 16 மூட்டைகளின் கனத்தை, அதாவது 3600 பவுண்டுக்கு மேலுள்ள சதுரமான கருங்கல் மலையைத் தம் மார்பு மீது சில விநாடிகள் தாங்கினது கண்டு, ஆயிரக் கணக்கான மக்கள் அப்படியே கல்லாய்ச் சமைந்து விட்டனர் இந்தச் சதுரக் கல்லை இன்னும் நாகூர் கோவிலில் காணமுடியும். இந்த விஷப் பரீக்ஷையைச் செய்யக் கூடாதென்று, நண்பர்களும், அன்பர்களும் கேசவனைப் பன்முறை கேட்டுக் கொண்டும் சட்டை செய்யாது துணிவுடன் செய்தார். போலீஸ் அதிகாரிகளும், டாக்டர்களும் நிறைந்திருந்தனர் பேடைமீது. தியேட்டரிலிருந்த ஜனக்கடலோ அமைதியின் எல்லையை எட்டி ஓய்ந்து நின்றது. ஒவ்வொருவரின் உள்ளமும் படபடத்துக் கொண்டிருந்தது. எங்கும் அச்சம் நிலவி நின்றது. கேசவன் தலைக்கும், இடுப்புக்கும் மட்டும் இரு தலைகாணிகளுடன் மல்லாந்து படுத்துக் கொண்டார். தக்க பலமுள்ள பலர் அடை கட்டி வைக்கப் பட்டிருந்த கல்லை, மார்பின் மீது அப்படியே சாய்த்து நிமிர்த்தினர். ஆவலின் எல்லை, விளைவை எதிர்பார்த்து, கரை புரண்டு கொண்டிருந்தது. சில விநாடிகள் சென்றன. கேசவன் பெரு மூச்சுடன் 'டக' என்று கல்லை—இல்லை—'மலை'யை இடது பக்கமாக மறித்துத் தள்ளினர். என்னவென்று சொல்ல, கரகோஷத்தையும் ஆரவாரத்தையும். சிறு தலைகாணியைத் தள்ளுவது போல் அநாயாசமாகத் தள்ளியதை எண்ணிப் பார்க்கும் போதுதான், அனுமனும் பீமனும் என் கண் முன்னே வந்து நின்றார்கள்.

இரண்டு மூன்று காகிதங்களுக்கு மேல் அடுக்காக இருந்தாலே நம்மால் அதில்

டி.எஸ்.ஆர்.

கோகுல் ஹேர் ஆயில்

டி.எஸ்.ஆர்.&கோ
கும்பகோணம்.

சென்னை ஏஜண்டு : M/s சுராஜ் ஏஜன்ஸீஸ்
158, லாயிட்ஸ் ரோடு, ராயப்பேட்டை.
கோயமுத்தூர் & பாலக்காடு ஏஜண்டு :
B. பால பட்டாபி, கோயமுத்தூர்.

குண்டூசியைச் செலுத்த முடிவதில்லை. கேசவனோ சுமார் 6 இஞ்சு நீளமுள்ள பலமான உருக்கு ஆணியை கெட்டியான மரத்தின் மீது உள்ளங்கையில் வைத்துக் கொண்டு 'பளார்' என்றடித்து ஏற்றி விடுகிறார். என்ன ஆச்சர்யம்? இவரைக் கண்டு ஆணியும் சுத்தியலும் நடுங்குகின்றன. இரண்டு விரல்களுக்கிடையே ஒரு எலுமிச்சம் பழத்தை வைத்துக் கொண்டு இரண்டாகத் துண்டித்து விடுகிறார்! கத்தியால் வெட்டவே கஷ்டப்படுகிறோம் நாம்!

அரை இஞ்சு, முக்கால் இஞ்சு கனமுள்ள இரும்புக் கம்பிகளை, பட்டைகளை சர்வ சாதாரணமாகத் தோல் பட்டை போல், வாழைத்தண்டைப் போல் வளைத்துச் சுருட்டிக் காட்டுகிறார். இவர் ஒரு மனிதர்தானா என்று வியக்கத் தோன்றும்? இந்த சமயங்களில் பலமான இரும்புச் சங்கிலியை (யானையைக் கட்டிப் போடும் இரும்புச் சங்கிலியை) இடுப்பில் கட்டிக் கொண்டு, காலை நீட்டி ஒரு நிமிர் நிமிர்ந்தாரானால் அது நெருப்புப் பொறி கக்கிக் கொண்டு தூள் தூளாகச் சிதறி ஓடுகிறது. ஒரு சமயம் காட்சியின் போது கைகளுக்கு பலமான விலங்கு மாட்டப்பட்டது. அதை மறுகணமே வளையை உடைப்பது போல் துண்டு துண்டாகத் தெரித்து விழச் செய்தார். இவருக்குத் தண்டனை தருவதானால் போலீஸுக்குச் சிரமம் தான்! இவரை எங்கேதான் வைத்துச் காப்பது? பெரிய பிரச்னைதானே இது!

இவர் தமது தசைக் கட்டுப்பாட்டை (Muscles control) உடலெங்கும் ஓட்டிக் காட்டுவது மிகச் சிறப்பாக, ரஸமாக இருக்கும். தசைகளை புஜங்களுக்கும், கரங்களுக்கும், கால்களுக்கும் மார்பிற்கும், முதுகிற்கும், கொண்டுவருவதன்றி வயிற்றிலும், முகத்திலும்கூட காட்டுகிறார். கண் இமைகளில் துடிப்பைக் காட்டுகிறார். சிரசுக்குக் கொண்டுபோய், தலை மயிர் நிமிர்ந்து எழுவதைக் கூடக் காட்டுகிறார் என்றால் அதைவிட என்ன வேண்டும்? பெரும் உடலை மேலும் பெரிதாக்கிக் காட்டுகிறார்; அதையே மிகமிகக் குறுக்கிக் காட்டுகிறார். அவரிடம் அவரது அவயவங்களும், சக்திகளும் சொன்னபடியெல்லாம் செய்கின்றன.

ஒரு யானையைத் தூக்க வேண்டுமென்ற ஆசை அவருக்கு இப்போது வந்திருக்கிறது. இதற்குத் தக்க வசதிகளை எதிர்பார்க்கிறார். செய்துகாட்டியும் விடுவார். ராமமூர்த்தி சாண்டோவைப் பற்றி, அவரது திறனைக் கண்டவர்களும், காணாதவர்களும் மிகப் புகழக் கேட்கிறோம். கேசவனோ அவ்வரையும் மிஞ்சி நிற்கிறார். ராமமூர்த்தி மோட்டாரைப் பின்னால் இருந்து நிறுத்தினார். கேசவனோ, முன்பாகவே நின்று, முன் சக்கரத்தைப்

பலமாகப் பிடித்துக் கொண்டு, எவ்வளவு குதிரை வேகமுள்ள மோட்டாரையும் முன்னேற முடியாமல் நிறுத்திக் காட்டுகிறார்.

எள்ளைக் கொடுத்தால் கரங்களில் வைத்துக் கசக்கி எண்ணெய் பிழிந்து காட்டுகிறார். சீட்டுக் கட்டை (அப்படியே அடுக்கோடு) இரண்டு, நான்கு, எட்டு பகுதிகளாகக் கிழித்துக் காட்டுகிறார். இது அசாதாரணமானது என்றால் மிகையல்ல. சீட்டுக் கட்டு கிழிப்பதை மேல் நாட்டுச் சாண்டோக்களில் சிலர் மட்டும் தான் செய்து காட்டியிருக்கிறார்கள்.

நாகர்கோவிலைச் சார்ந்த வி. கே.. ஆச்சாரி என்னும் கேசவ பல பீமனின் வலிமைத் திறனை, நாமக்கல் கவிஞர் ஆஸ்தான வித்வான், ராமலிங்கம் பிள்ளை, திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், தமிழ் எழுத்தாளர் மஹாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த மற்றும் பலரும் கண்டு வியந்து போற்றிப் புகழ் மாலை சூட்டியிருக்கின்றனர். "உடலினை உறுதி செய்; வலிமையுடைய நெஞ்சினாய், வா, வா!" என்றார் பாரதியார். கவிஞரின் கற்பனையாளர் கேசவன் சாண்டோ இன்று முன் வந்து, பலமே வடிவாக நிற்கக் காண்கிறோம்.

கேசவன் மாணவராக இருந்தபோதே உடற் பயிற்சி செய்து பலசாலியாகத் தொடங்கி விட்டார். மாணவராக இருந்தபோது பலவிதமான நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஒரு முறை, ஒரு நீள 'டெஸ்கின்' ஒரு கோடியைக் கேசவன் ஒரு கையால் ஊன்றிக் கொண்டார். டெஸ்கின் மறு முனையில், பல மாணவர்கள் கூடி 'டெஸ்கை' பலமாக இழுத்தனர். டெஸ்கோ இம்மியும் நகரவில்லை. மற்றும் பல மாணவர்கள் வந்து இழுத்தனர். டெஸ்கின் இரு கால்களும் முறிந்து, கையோடு வந்து விட்டன. அனைவரும் ஒருவர் மேல் ஒருவராய் விழுந்தனர். கேசவன் பக்கம் ஒரு அங்குலம் நகரவே இல்லை!

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுடைய "அசோகா பிலிம்ஸி"ல் கேசவன் சில காலம் நடிகராக இருந்தார். "அலிபாபா" என்ற படத்தில் நடிக்கவும் செய்தார். ஒருநாள் இரவு பிரயாணம் செய்து கொண்டிருந்த போது, மழை காலமானதால் ஒரு ஆற்றில் சப்பாத்திப் பாதையைக் கடக்க முடியாமல் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. காரை ஓட்டிச் செல்லுவது அபாயமாக இருந்தது. உடன் பிரயாணம் செய்து கொண்டிருந்த கேசவன் தனியாக மார்பளவு தண்ணீரில் காரை இடுப்பில் கட்டிக் கொண்டு இழுத்துச் சென்று மறு கரை

"எட்ராம்"

வீரிய விருத்திக்கும் இழந்த பலத்தை திரும்பப் பெறுவதற்கும் சிறந்த

ஹோமியோபதி

இதை ஆண், பெண் யாவரும், எவ் வயதினரும் உபயோகிக்கலாம்

50 மாத்திரைகள் கொண்ட புட்டி விலை ரூபாய் 4.

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட், கும்பகோணம்.

யில் அபாயமில்லாமல் கொண்டுபோய்ச் சேர்த்தார்.

சமயோசித புத்தியும், அசாதாரண வலுவும்பெற்ற கேசவனின் உள்ளம், உடலைப் போல் உறுதியானதல்ல. கள்ளம் கபடமற்ற குழந்தை உள்ளத்தை அவர் பெற்றிருந்ததால் அவரது வாழ்க்கை வெற்றிக்குச் சிலசமயம் தடையாகக்கூட யிருந்தது. கல்வி கற்றோருக்கு உடன் வளரும் செருக்கைப் போல, பலசாலிகளுக்கு முரட்டுத் தனமும் கூடவே வளருவது தான் இயற்கை. கேசவன் இதற்கு விதி விலக்கு. தவறான வழி செல்வதும் முரட்டுச் செயலும் அவரது வாழ் நாளிலேயே நடந்ததில்லை. அவர் இன்னொருவருக்குத் துன்பம் தந்தார் என்பது இதுவரையும் இல்லை; இனிமேலும் இருக்க முடியாது. காரணம், அவர் இரக்கமும் பக்தியும் நிறைந்தவராய் இருப்பதுதான்.

ஏழையான, பாட்டாளியான வெங்கலப் பாத்திரம் வார்க்கும் வேலையைச் செய்யும் தொழிலாளியான கேசவன் எப்படி இவ்வளவு திறம் பெற்றார்? உடலைப் பேணியது எப்படி? இதற்கு வசதிகள் உண்டா?—என்றால், அதுதான் பரிதாபகரமானது. நண்பர்கள் பலர் அவருக்கு உதவியுள்ளனர். குறிப்பாக, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், டி. கே. எஸ். சகோதரர்கள் செய்த உதவிகளைச் சொல்லாமலிருக்க முடியாது. ஏழ்மை நிலையில், அரசர்களிடமோ, ஸ்தாபனங்களிடமோ, நிலையான ஆதரவு ஏதும் கிடைக்காமலிருந்தும், இந்தக் கடும் உணவுப் பஞ்சம் நிலவும் ரேஷன் காலத்தில் கேசவன் பலத்தைக் காத்து நிற்பது போற்றத்தக்கது; நமது நாட்டுக்கே பெருமைதரக் கூடியதாகும். அவ்வப்போது அவருக்கு கிடைக்கும் உதவிகள் யானைக்கு சோளப் பொறி தருவதுபோல் தானிருந்து வருகின்றன. தக்க ஆதரவுகள் இருக்குமானால் கேசவன் புகழ் நம் நாடெல்லாம் நிறைந்து வெளிநாட்டு மக்களுக்கும் எட்டி, பெருமை பெறமுடியும்!

சிறந்த தங்கம், வெள்ளி நகைகளுக்கு ஏற்ற இடம்

ஜெயின் ஜ்வல்லரி கம்பெனி

1 நாகேஸ்வர ராவ் ரோடு
தியாகராயநகர்,
சென்னை-17

ஆடம்பரத்திற்காக, விருதுகளுக்காக, யானைகளையும் ஒட்டகங்களையும் பொருள் செலவைப்பாராது பேணிவரும் மடாதிபதிகளும், அரசர்களும், பிரபுக்களும் கேசவனை ஆதரிக்க முன்வந்தால், அவர்களுக்கும், மக்களுக்கும், நாட்டுக்கும் நலமுண்டாகுமன்றோ? பண்டைய மன்னர்கள் மல்லர்களை வைத்துப் போற்றியதுபோல அரசாங்கம் கேசவனை ஆதரித்து மக்களுக்கு வலிமையை வழங்கச் செய்ய வேண்டும். நம் மாகாணம் ஆஸ்தான வித்வான்களை நியமித்து சிறப்படைந்ததுபோல சாண்டோ கேசவனை ஆஸ்தான மல்லனாக ஏன் நியமிக்கக் கூடாது? இப்படிச் செய்தால் கேசவன் தம் பலச்செயல்களை மேலும் பெருக்கிக் காட்ட அவருக்கு எவ்வளவு உற்சாகம் அளிப்பதா யிருக்கும்?

இந்திய இராணுவத்திற்கும், மாணவர்களுக்கும், பலப்பாதை நோக்கிச் செல்ல கேசவன் ஒரு வழி காட்டியாகத் திகழுகிறார். அவர் சென்னையில் தங்கி, ஒரு உடற்பயிற்சி நிலையத்தை நிறுவி, வாலிபர்களுக்கு வளர்ச்சி தர திட்டம் கொண்டுள்ளார். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பும், உதவியும் தரத் தவறக்கூடாது.

தணிக்கை போர்டுக்குப் போட்டி

இம்மாதம் 10-ம் தேதி சென்னை அசெம்பிளி கூட்டத்தில், சினிமாப் பட அங்கத்தினர் ஆக எம். எல். ஏக்களிடையே பலத்த போட்டி இருப்பதாக கல்வி மந்திரி அறிவித்தார். தணிக்கை போர்டில் அங்கத்தினர் ஆகவேண்டுமென பல சட்டசபை அங்கத்தினர்கள் தம்மிடம் விண்ணப்பித்துக் கொண்டதாகவும், யாரைத் தேர்ந்தெடுப்பது, யாரை ஒதுக்குவது, என்ற தர்ம சங்கடமான நிலைமை தமக்கு ஏற்பட்டதால் ஒருவரையுமே போடவில்லை என்றும் அவர் கூறினார். போர்டுக்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுப்பதில் சர்க்கார் அனுஷ்டிக்கும் முறையை அவர் எடுத்து விளக்கினார்.

ஜூபிடர் பிக்சர்ஸாரின்
புதுப் படமான "விஜய
குமாரி" இம்மாதம் பல
நகரங்களில் வெளிவந்து
ஓடிக்கொண்டிருக்கிறது
ஜூபிடரின்
விஜயகுமாரி

"விஜயகுமாரி" சரித்திரக் கதை போன்ற ஒரு கற்பனைக் கதை. இதில் மந்திர தந்திர ஜாலங்களும், நீதி போதிக்கும் விஷயங்களும், அரசியல் விஷயங்களும் நிறைய அடங்கியுள்ளனவாம்

"வேலைக்காரி" படத்தை ரஸிகர்களுக்கு அளித்த ஏ. எஸ். ஏ. சாமியால் டைரெக்ட் செய்யப்பட்ட படம் "விஜயகுமாரி". இந்தக் கதையும், வசனமும்கூட அவராலேயே தயாரிக்கப் பட்டவைதான்

நடனத்திற்கு குறைவே இராதாம் "விஜயகுமாரி" படத்தில். லலிதா-பத்மினி, குமாரி கமலா, ராஜகுமாரி லக்ஷ்மீகாந்தம், பாரதி ஆகியோரின் நடனத்தைக் கண்டு களிக்கலாம்

டி. ஆர். ராஜகுமாரி, குமாரி கமலா, பி. கே. சரஸ்வதி, எம். எஸ். பாக்கியம், கே. ஆர். ராமசாமி, பாலய்யா, சாமா, ஆர். பாலசுப்ரமண்யம், நம்பியார், ராம்சிங் முதலிய இன்னும் பல நக்ஷத்திரங்கள் இதில் நடித்துள்ளனர்.

எம். சோம சுந்தரத்தால் தயாரிக்கப்பட்ட இந்தப் படத்தில் காதல், வீரம், ஹாஸ்யம், எல்லாம் நிறைந்திருக்கிறதாம்.

''போய்வருகிறோம்; ஜேய் ஹிந்த் !'' என்கிறார்கள் நம்பியாரும், பாக்யமும். மீண்டும் அவர்களை நாம் தியேட்டரில் சந்திப்போம்

இது செய்தி

வஸுந்தரா தேவியின் வழக்கு

நடிகை வஸுந்தரா தேவி, மைலாப்பூரைச் சேர்ந்த ஏ. வரதப்ப செட்டியார் என்பவர் மீது ஹைகோர்ட்டில் ஒரு வழக்கைத்தொடர்ந்திருக்கிறார். தாம் ஒரு லக்ஷத்து ஆயிரம் ரூபாயை மேற்படி செட்டியாரிடம் 'பத்திரமாக வைத்திருக்கும்படி' கொடுத்து வைத்திருந்ததாகவும் திரும்பக் கேட்ட போது "கொடுத்து விட்டதாக" அவர் கூறியதாகவும் தம் வழக்கில் குறிப்பிட்டிருக்கிறார். மேற்கொண்டு விசாரணை இம்மாதம் 17ம் தேதி நடைபெறும்.

பொன் விழா

திருவல்லிக்கேணியில் நடைபெற்று வரும் ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி சபாவின் பொன் விழா அடுத்த மாதம் சிறப்பான முறையில் நடைபெறுமாம். இது சென்னையிலேயே மிகவும் பழமையான சபாவாகும். அரியக்குடி, எம். எஸ். சுப்புலக்ஷ்மி, டி. என். ராஜரத்னம் முதலியவர்கள் பொன்விழாவில் பங்கெடுத்துக் கொள்ள சம்மதித்திருக்கிறார்களாம்.

ஆங்கிலப் படத்தில் இந்தியப் பெண்

சென்னை தியஸாபிகல் சொஸைட்டியைச் சேர்ந்த ஸ்ரீமதி ராதா, 'நதி' என்ற ஆங்கிலப் படத்தில் இந்தியப் பெண்ணாக நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். இப்படம் ஓரியன்டல் பிலிம் கார்ப்பரேஷன் கம்பெனியின் தயாரிப்பு என்றும், அக்கம்பெனியில் பரோடா மஹாராஜாவுக்கு நிறையப் பங்குகள் இருப்பதாகவும் தெரிகிறது.

தமிழ் நாடகக் கலை

இம்மாதம் 2ம் தேதி அசெம்பிளி கூட்டத்தில், 'தமிழ் நாடகக் கலை அபிவிருத்திக்காக ஒரு கமிட்டியை ஏன் ஏற்படுத்தக்கூடாது?' என்று ஒரு மெம்பர் கேள்வி கேட்டார். அதற்கு மந்திரி கனம் மாதவ மேனன், 'ஆந்திர நாடகக் கலைக்கான கமிட்டியின் அறிக்கை வந்ததும், அதைப் பார்த்துக் கொண்டு சர்க்கார் தமிழ் நாடகக் கலையின் அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை எடுக்கும்' என்று பதில் கூறியிருக்கிறார்.

அஞ்சலி தேவி மீது வழக்கு

சினிமா நடிகை அஞ்சலி தேவிக்கு சொந்தமான, அடையாறிலுள்ள தம் வீடு காலியான விஷயத்தை அவர் வீடு கட்டுப்பாடு அதிகாரிக்குத் தெரிவிக்காததற்காக அவர் மீது ஒரு வழக்கு தொடரப் பட்டுள்ளது. இந்த வழக்கு இம்மாதம் 29ம் தேதி விசாரணைக்கு வருகிறது.

சினிமா சிப்பந்திகள் உண்ணு விரதம்

சர்க்காரால் நியமிக்கப்பட்ட மத்யஸ்தர்களின் தீர்ப்புப்படி, சினிமாக் கொட்டகைக்காரர்கள் தங்கள் சிப்பந்திகளுக்கு அலவன்ஸ் கொடுக்கவில்லை. அதற்காக அவர்கள் மீது சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளாததைக் கண்டிக்கும் முறையில் சினிமா ஊழியர்கள் சங்கத்தின் நான்கு அங்கத்தினர்கள் சென்ற மாதம் 27ம் தேதி, கோட்டை சர்க்கார் காரியாலயத்தின் முன் உண்ணுவிரதம் ஆரம்பித்தனர். சங்கத்தின் தலைவரும், உப தலைவரும் மந்திரிகளைக் கண்டு பேசி தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும்படிச் செய்வதாக உறுதி கூறியதன் மேல் மேற்படி நான்குபேர்களும் 28ம் தேதி உண்ணுவிரதத்தை நிறுத்தினர்கள்.

சந்திரிகா

கிருஷ்ணு புரொடக்ஷன்ஸ் என்ற புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கம்பெனியார் "சந்திரிகா" என்ற படத்தை தமிழ், மலையாளம் ஆகிய பாஷைகளில் தயாரிக்கத் திட்டம் போட்டிருக்கின்றனர். இப்படங்களின் ஆரம்ப விழா இம்மாதம் முதல் தேதி வாஹினி ஸ்டுடியோவில் நடைபெற்றது. படம் வாஹினி, நெப்டியூன், இரு ஸ்டுடியோக்களிலும் தயாராகுமாம். வி. ஸ்ரீனிவாஸ ராகவன் டைரெக்ட் செய்யும் இப்படங்களில், சில பிரபல மலையாள நடிகர்களுடன், டி. எஸ். பாலையா, வி. என். ஜானகி, மாலதி முதலியோரும் நடிப்பார்களாம். லலிதா-பத்மினி சகோதரியாது நடனமும் சேர்க்கப்படுமாம்.

ஜனாதிபதியின் கருத்து

இம்மாதம் 5ம் தேதி ஹரித்வாரம் குருகுல சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழா

வில் கலந்துகொண்ட ஜனாதிபதி பாபு ராஜேந்திர பிரஸாத், 'மாணவர்கள் பரபரப்பை ஊட்டும் சாதாரண சினிமாக்களைப் பார்ப்பதை அனுமதிக்கக் கூடாது' என்று குறிப்பிட்டார். மேலும் அவர், 'ஒழுககத்தை உயர்த்தும் நல்ல நாடகங்களையும், சினிமாக்களையும் கல்வி ஸ்தாபனங்களிலேயே காட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்' என்றும் பேசினார்.

சொர்க்கத்தில் காந்தி

சேலம், பாஸ்கர் பில்ம்ஸார் ரத்னா ஸ்டுடியோவில் "சொர்க்கத்தில் காந்தி" என்ற சமூகப் படத்தைத் தயாரிக்க முனைந்திருக்கிறார்களாம். இப்படத்தின் கதை வசனங்களை எழுதியிருப்பதுடன், டைரெக்ஷன் பொறுப்பையும் வேல்சாமிக் கவி ஏற்றிருக்கிறார். படத்தில் வி. கே. ராமச்சந்திரன், ஸாயிராம் முதலியவர்களும் நடிக்கிறார்களாம்.

ஸத்குரு சங்கீத வித்யாலயா

சென்னை, தியாகராயநகர், ஸத்குரு சங்கீத வித்யாலயத்தின் முதல் வருஷாந்திர விழா மந்திரி கனம் கோபால் ரெட்டி தலைமையில், சென்ற மாதம் 26ம் தேதி நடைபெற்றது. சென்னை மேயர் ஸ்ரீ. பி. வி. செரியனும் விழாவில் பங்கெடுத்துக் கொண்டார். நேர்மையான முறையில் வித்தியாலயத்தை நடத்தும் அதன் பிரின்ஸிபால் ஸ்ரீ. எஸ். வி. சௌந்தரராஜனை, தலைவர் பாராட்டினார். என். கே. ஸ்வாமியின் நாதஸ்வரத்துடன் ஆரம்பித்த விழா, கவக்காடு ராமநாராயண ஐயரின் இன்னிசையுடன் முடிவுற்றது.

ஜெமினியில் தீ விபத்து

சென்ற மாதம் 24ம் தேதி சென்னை ஜெமினி ஸ்டுடியோவில் ஒரு தீ விபத்து நேரிட்டது. பில்ம்களை சேமித்து வைப்பதற்காகப் புதிதாக கட்டப்பட்டிருந்த அறை ஒன்றில் தீப்பிடித்துக் கொண்டது. தீ அணைக்கும் படையினர் வந்து நெருப்பை அணைத்தனர். ஒரு பில்ம் சுருள் வெடித்ததினால் தீ அணைக்கும்படையைச் சேர்ந்த மூவருக்குக் காயம் ஏற்பட்டது. நஷ்டம் சுமார் மூவாயிரம் ரூபாய்கள் இருக்கும் என்று தெரிகிறது.

மாடர்ன் தியேட்டர்ஸில் திரௌபதி

"வாழ்க்கை" மூலம் புகழ்பெற்ற நடிகையான எம். எஸ். திரௌபதி மாடர்ன் தியேட்டர்ஸாரின் இரு படங்களில் நடிக்க ஒப்பந்தம் செயயப்பட்டிருக்கிறாராம்.

டூரிங் சினிமா மஹாநாடு

தென்னிந்திய சினிமா டூரிங் சினிமா சங்கத்தின் ஆதரவில், தென்னாற்காடு ஜில்லா டூரிங் சினிமா விசேஷ மஹாநாடு இம்மாதம் 13-ம் தேதி கடலூர் குமரன் டாக்கீஸில் நடைபெற்றது. மஹாநாட்டிற்கு ஸி. கே. சாச்சி தலைமை வகித்தார். காலையில் நடைபெற்ற விஷயாலோசனைக் கூட்டத்தில் டூரிங் டாக்கீஸ்களின் நலனைக் குறித்துப் பல விஷயங்கள் விவாதிக்கப்பட்டன, மஹாநாட்டில் கலந்துகொண்ட சங்கத்தின் தலைவர் டைரெக்டர் கே. சுப்ரமண்யம், குட்டியம்மாளு அம்மாள் முதலியோர், சர்க்கார் டூரிங் கொட்டகைகள் விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றிப் பேசினார்கள்.

பிரகதியின் புதிய நிர்வாகம்

ஏலத்திற்கு வந்த, சென்னை பிரகதி ஸ்டுடியோவின் நிர்வாக உரிமைகளை ஜூபிடர் பிக்சர்ஸார் பெற்றுவிட்டார்களாம். அவர்கள் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கும் "மனோஹரா" இங்கு தயாராகக்கூடுமாம். இங்கு தயாராகி பாதியில் நின்று போயிருக்கும் "ராஜயோகியும்" மீண்டும் உருவாகக் கூடுமென்றும் தெரிகிறது.

சமுத்ர சுந்தரி

"ப்ளு லாகூன்" என்ற ஆங்கிலப் படம், தமிழ் வசனங்களுடன் "சமுத்ர சுந்தரி" என்ற பெயருடன் தயாராகி முடிந்திருக்கிறது. சீக்கிரமே இப்படம் தமிழ் நாட்டில் திரையிடப்படுமென்று தெரிகிறது. இது 'ஈகிள் லைன் கம்பெனி'யாரின் வெளியீடு.

நாகலோகம்

சிலோன் ஸ்ரீ ஷண்முகா பில்ம் கம்பெனியார் "நாகலோகம்" என்ற கிராமியக் கதையைத் தமிழ்ப் படமாகத் தயாரிக்கப்போகிறார்களாம். எல்.எஸ். ராமச்சந்திரன் டைரெக்ட் செய்யப்போவதாகச் சொல்லும் இப்படம் ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் தயாராகுமாம்.

அவள் விபசாரியா?

எம். கே. வி. நாடக சபையினரின் "அவள் விபசாரியா?" என்ற நாடகம் இம்மாதம் 1?-ம் தேதி சென்னை வி. பி. ஹாலில் நடைபெற்றது. சொக்கியாக நடித்த பி. வி. அபரஞ்சியின் நடிப்பு உணர்ச்சியுடன் இருந்தது. தாயார் போன்ற வயதான பாகங்களில் நடிக்க அவர் மிகவும் பொருத்தமானவர் என்பது நன்றாகத் தெரிந்தது. கதாநாயகி சந்திராவாக நடித்த எம். கே. விருதாம்பாளின் நடிப்பு நன்றாக இருந்தது. ஆனாலும் கொஞ்சம் பயம் தெளிய வேண்டும். விஜயனாக நடித்த பத்மனாபனின் நடிப்புத்தான் நாடகத்திலேயே மிகவும் சோபிதமாக இருந்தது. மிராசுதாராக நடித்த ஸ்ரீனிவாஸனின் நடிப்பு நன்றாக இருந்த தென்றாலும் மிகையாக இருந்தது. மொத்தத்தில் அன்றைய நாடகத்தைப் பார்த்த போது இன்னும் சில நாட்கள் ஒத்திகைக்குப் பின் மேடைக்கு வந்திருக்கலாம் என்றே தோன்றியது. ஸ்ரீ. ஏ. வரதராஜன் தான் இந்த நாடகத்தைத் தயாரித்தவர்.

பி, வி. அபரஞ்சி

விஜயகுமாரி

ஜூபிடரின் "விஜயகுமாரி" இம்மாதம் 18ம் தேதி முதல் தமிழ் நாட்டின் முக்கியமான நகரங்களிலெல்லாம் நடைபெற்றுவருகிறது. இம்மாதம் 25-ம் தேதி சென்னையில் மூன்று தியேட்டர்களில் திரையிடப்படுகின்றது. டி. ஆர். ராஜகுமாரி இப் படத்தில் இரு பாகங்களில் நடித்திருக்கிறார். சிறுகளத்தூர் சாமா நீண்ட நாட்களுக்குப் பிறகு நல்லதொரு பாகத்தில் இப்படத்தில் நடித்திருக்கிறாராம் கே. ஆர். ராமசாமியும், டி. எஸ். பாலய்யாவும் சிறப்பாக நடித்திருப்பதுடன் மயிர்க்கூச்செரியும் வாள் போர் புரிகிறார்களாம். பல படங்களுக்குப் பின் மீண்டும் நம்பியார்-பாக்கியம் இவர்களை இப்படத்தில் ஹாஸ்ய ஜோடிகளாகக் காணலாம் என்று தெரிகிறது. புளிமூட்டை, ஸாயிராம் இவர்களும் ஹாஸ்ய விருந்தளிக்கிறார்கள். பி. கே. சரஸ்வதி, லலிதா-பத்மினி, வைஜயந்தி, குமாரி கமலா இவர்கள் பல்வேறு நடனங்களை ஆடியிருக்கிறார்களாம் "சோமு"வின் தயாரிப்பான(ஏ.எஸ்.ஏ. சாமி டைரெக்ட் செய்துள்ள) இப்படம் ஜூபிடரின் சிறந்த வெற்றியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாடகக் கழகம்

சென்னையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நாடகக் கழகத்தினர் இம்மாதம் 18-ம் தேதி தங்களது நோக்கத்தை எடுத்துக் கூற, பத்திரிகாசிரியர்களை அழைத்து

தியரகராயநகர் வாசிகள், காந்திஜி ஸ்தூபி நிதிக்குக் காணிக்கை அளித்த விழாவில் விகடம் செய்த கிருஷ்ணமூர்த்தியை, 'கல்கி' ஸ்ரீ. ஆர். கிருஷ்ணமூர்த்தி பாராட்டி மாலை சூட்டுகிறார்.

ஒரு கூட்டம் நடத்தினர்கள். கூட்டத்திற்கு பல பத்திரிகாசிரியர்களும், ஸ்ரீ. காமராஜ் நாடார், ஸ்ரீ. பி. சம்பந்த முதலியார், மற்றும் பல கலைஞர்களும் வத்திருந்தார்கள். கழகத்தின் செயலாளரான டைரெக்டர் கே. சுப்ரமண்யம வரவேற்றுப் பேசுகையில், நாடகக்கலை குறைவின்றி வளர அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும், நாடகக்கலை நசித்துப்போகாமல் வளர்ப்பதே கழகத்தின் நோக்கம் என்றும் கூறினர். இக் கழகத் தலைவர் தமது சொற்பொழிவின்போது, நசிந்துவரும் நாடகக் கலைக்கு புத்துயிரூட்டி, ஆக்கம் அளிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என வற்புறுத்தினர்.

கழகத்தின் இந்த வருஷத் திட்டம் அறிவிக்கப்பட்டது. இம் மாதம் 25-ம் தேதி முதல் தேனும்பேட்டை காங்கிரஸ் மைதானத்திலுள்ள நாடக அரங்கில், விடுமுறை நாட்களில், கழகத்திற்கு நிதி திரட்டுவதற்காக நடன, நாடக, இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருப்பதாக டி. கே. ஷண்முகம் அறிவித்தார். நாடக ஆசிரியர்கள் சார்பில் எஸ். டி. சுந்தரமும், ரஸிகர்கள் சார்பில் ஜி. கே. சேஷகிரியும் பேசினர்கள்.

பி. சம்பந்த முதலியார் பேசியபோது, சென்னை கார்ப்பரேஷன் உட்பட ஒவ்வொரு நகரசபையும் அந்தந்த நகரத்தில் நாடகத்திற்கென கொட்டகை கட்ட வேண்டுமென்றும், நாடகம் சம்பந்தப்பட்டவரை தமாஷா வரியை சர்க்கார் குறைத்தல் அவசியம் என்றும், பத்திரிகைகள் நாடகக் கலைப் பிரசாரத்தில் அதிக அக்கரை கொள்ளவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பதி பக்தி

சிதம்பரத்தில் நாடகங்களை நடத்தி வரும் தேவி நாடக சபையின் ஆதரவில் "பதி பக்தி" நாடகம் இம் மாதம் 13-ம் தேதி நடைபெற்றதாம். "பதி பக்தி" புகழ் கே. பி கேசவனுடன் கூட பி. விஜயலக்ஷ்மி கதாநாயகியாக நடித்தாராம். சோக ரஸமான கட்டங்களில் கேசவனுடைய நடிப்பு பிரமாதமாய் இருந்ததாம்.

பாரகன் டாக்கீஸ் வழக்கு

டைரெக்டர் பி. எஸ். வி. அய்யர், சென்னை பாரகன் டாக்கீஸின் சொந்தக்காரரான வி.எல். நரசு மீது ஒரு வழக்குத் தொடர்ந்திருந்தார். "ருக்மாங்கதா" என்ற தம்முடைய படம் ஒப்பந்தப்படி ஓட இயலாததற்குக் காரணம், தியேட்டர் சொந்தக்காரரின் அதிரத்தையால் சுவர் இடிந்து விழுந்ததுதான் என்றும், ஆகவே தமக்கு நஷ்ட ஈடு கோரி, அவர் வழக்குத் தொடுத்தார். வழக்கை விசாரித்த நீதிபதி மாக், ஸ்ரீ. வி. எல். நரசு ரூ. 25,000 நஷ்டஈடு தரவேண்டுமென தீர்ப்பளித்தார்.

டிரைவர் விடுதலை

அஜாக்கிரதையாக மோட்டாரை ஓட்டியதால் நடன டைரெக்டர் போலோநாத்துக்கு மரண விபத்து நேரிட்டதாகக் கூறி நடிகை பி. எஸ். சரோஜாவின் டிரைவருக்கு சேலம் அடிஷனல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் 18 மாத கடுங்காவல் தண்டனை விதித்திருந்தார். டிரைவர் அதை ஆக்ஷேபித்து, காரைத் தாம் ஓட்டவில்லையென்றும், போலாநாததே ஓட்டியதாகவும் அப்பீல் செய்து கொண்டார். சேலம் அடிஷனல் ஜில்லா செஷன்ஸ் நீதிபதி டிரைவர் மீது குற்றமில்லையென அவரை விடுதலை செய்துவிட்டார்.

மணிக்கொடி

ஆசிரியர் :

பி. எஸ். ராமையா

தமிழ்நாட்டு முன்னணி எழுத்தாளர்கள் எழுதும் வாழ்க்கைச் சித்திர வர்ணக் கதைகளுடன் பிரதி மாதம் 7-ம் தேதி வெளி வரும் சிறந்த மாதப் பத்திரிகை.

ஒவ்வொரு கதையும் ஒரு உயிர் நாடகம் • விலை 8 அணு.

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர் : "மணிக்கொடி" சென்னை-1.

ஒரு வரம் கோருக!

இனி நீங்கள் சிறிதும் ஏமாற்றமடைய வேண்டியதில்லை. பெரு முயற்சியால் தயாரிக்கப்பட்ட "வசிகரன் கைக்குட்டை" மூலம் நீங்கள் விரும்பிய பெண் கிடைக்கக்கூடும். சிரிப்பு தவழும் குழந்தைகள் உங்கள் மடியில் கொஞ்சலாம். கடின சித்தம் படைத்தவர்கள்கூட உங்கள் காலடியில் விழுவர். உங்களுடைய சக்திவாய்ந்த ஆதிக்கத்திற்கு கட்டுப்பட்டு நிற்பர். வேலை கிடைப்பது இனி கனவாக இருக்காது. மலடியாக இருக்கும் மனைவிக்குக்கூட குழந்தைகள் பிறக்கும். இறந்தவர்களின் ஆத்மாவுடன் தொடர்பு ஏற்படும். உங்களுடைய மூதாதையர்களின் புதையல்கள் எங்கிருக்கின்றனவென்பது உங்களுக்கு கனவில் அறிவிக்கப்படும். கோர்ட் தாவாக்களில் வெற்றி, லாட்டரியிலும், பேரம், ஹேஷ்யங்களிலும் வெற்றிமேல் வெற்றி. பரீட்சையில சுலபமாக தேர்ச்சி பெறுவீர்கள். தொழிலில் லாபம் கிட்டும். உங்களுடைய துரதிஷ்டங்கள் நீங்கிவிடும். அதிர்ஷ்டம் உங்களுக்கு பாதசேவை செய்யும். சுருங்கக்கூறுமிடத்து உங்களுடைய விருப்பங்கள் அனைத்தும் பூர்த்தியாகிவிடும். உத்திரவாதம்: உங்கள் மனம் விருப்பியதை நீங்கள் அடையாவிடில் கைக்குட்டையை 6 மாதங்களுக்குள் திருப்பிக் கொடுத்துவிடலாம். வசிகரன் கைக்குட்டை நெ. 1, ரூ. 1-15-0. விசேஷ சக்தி வாய்ந்த கைக்குட்டை ரூ. 3-15-0. 24-மணி நேரத்திற்குள் இதன் மகிமையைக் காணலாம். நமது "வசிகரன்" கைக்குட்டையால் இக்கலியுகத்தில் இந்த ஸ்வாமி உண்மையை ஸ்தாபிக்கிருர். இதன் உதவியால் கணக்கற்றவர்கள் தங்களுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்து கொண்டுள்ளனர். இந்த அரிய தருணத்தை தயவுசெய்து இழக்காதீர்கள்.

Frof : BENGAL MESMERISM HCUSE (G. M.) Hoshiarpur. Pb.

வருந்துகிறோம்

சேலம் [illegible] பெருமக்களுள் ஒருவரான ஸ்ரீமான் எஸ். எஸ். வேலாயுதம் சென்ற மாத இறுதியில் தமது 48-வது வயதில் காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம், இவர், சேலம் ஓரியன்டல் டாக்கீஸ், நியூ ஓரியன்டல் டாக்கீஸ், மங்கள விலாஸ் தியேட்டர், இவைகளின் முதலாளியாகவும், ஏஞ்சல் பில்ம்ஸ், சேலம் பில்ம் கம்பெனி இவைகளின் பாகஸ்தராகவும் இருந்தார். அவரது குடும்பத்தினருக்கு நமது அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.

பிரம்மலோகம்

ஓர் இரவு

ஏவி. எம். ஸ்டுடியோவில் அவர்களது "ஓர் இரவு" வெகு ஜரூராகத் தயாராகி வருகிறது. சமீபத்தில் எஸ். வரலக்ஷ்மி சம்பந்தப்பட்ட காட்சிகள் ப. நீலகண்டனின் டைரெக்ஷனில் படமாகி வருகின்றன. கிண்டியில் நடக்கும் குதிரைப் பந்தயத்திற்கு போய், கேமிராமென் இப்படத்திற்கென சில காட்சிகளைப் பிடித்து வந்திருக்கிருர். கே. ஆர், ராமசாமி, டி. எஸ். பாலய்யா, எஸ். வரலக்ஷ்மி, பி. எஸ். சரோஜா ஆகியோர் பிரதம பாகங்களில் நடிக்கும் படம் இது.

ஜீவனம்

ஏவி.எம்.புரொடக்ஷன்ஸார் தங்கள் "வாழ்க்கை" படத்தை "ஜீவனம்" என்ற பெயரில் தெலுங்குப் படமாகத் தயாரித்துவருகிருர்கள். 'மேனு'வின் மேற்பார்வையில் நடந்து வருகிறது இந்த வேலை. இந்த மாதக் கடைசியில் படம் ஆந்திராவில் திரையிடப் படலாமெனத் தெரிகிறது.

ராஜா விக்கிரமா

கெம்ப்ராஜ் டைரெக்ட் செய்து, பிரதம பாகத்தில் நடிக்கும் "ராஜா விக்கிரமா" முடிவடையும் தருவாயில் இருக்கிறதாம். சமீபத்தில் இப்படத்திற்கென தெருக்கூத்துக் காட்சி யொன்று படமாகியது. கெம்ப்ராஜ், எம். வி. ராஜம்மா, ஜெயம்மா பிரதம பாகங்களில் நடிக்கின்றனர்.

உண்மையின் வெற்றி

டெஸ்பி பிலிம்ஸாரின் "உண்மையின் வெற்றி" படப் பிடிப்பு அநேகமாக முடிவடைந்துவிட்டதாம். ஹரிபாய் ஆர். தேசாய் பல தந்திரக் காட்சிகளுடன் சிறந்த முறையில் படத்தைத் தயாரித்து வருகிருராம். மேனகா, டி. ஏ. ஜெயலக்ஷ்மி, வி. டி. கண்ணபிரான் ஆகியோர் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர்.

பாரிஜாதம்

இன்னும் இரண்டொரு காட்சிகளே இருக்கின்றனவாம். அது முடிந்து விட்டால் லவாண்யாவின் "பாரிஜாதம்" திரையிடப்படுமாம். ருக்மணி, கண்ணன் பிறந்த நன்னாளைக் கொண்டாடுகிருள். அந்தக் கோலாகல வைபவத்தை பாமா பார்த்து பொருமைப்படுகிருள். இக் காட்சிகள் சமீபத்தில் படமாக்கப்பட்டன. டி. ஆர். மஹாலிங்கம், பி. எஸ். சரோஜா, எம். வி. ராஜம்மா பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தை (ஜெமினியில் நல்ல அனுபவம் பெற்ற) எஸ். நரசிம்மன் உதவி புரிய, டைரெக்ட் செய்து வருகிருர் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்.

சௌதாமினி

ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் "சௌதாமினி" படப்பிடிப்பு ஜெமினி ஸ்டுடியோவில் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. ஹாஸ்ய நடிகர் டி. ஆர். ராமச்சந்திரன் இப்படத்தில் நடனம் ஆடப் போகிருராம்! அதற்கான ஒத்திகைகள் நடைபெற்று வருகின்றனவாம். எம். கே. ராதா, பி. கண்ணும்பா, எஸ். வரலக்ஷ்மி, டி. ஆர். ராமச்சந்திரன் முதலியோர் நடிக்கும் இந்தப் படத்தை கே. நாகபூஷணம் தமிழ், தெலுங்கு ஆகிய இரு பாஷைகளில் தயாரித்து வருகிருர்.

ஔவையார்

ஜெமினியின் "ஔவையார்" தமிழ் வருஷப் பிறப்பு வெளியீடாக இருக்காதென்ருலும், படப் பிடிப்பு ஜரூராகவே நடைபெற்று வருகிறது. கொத்தமங்கலம் சுப்பு டைரெக்ட் செய்யும் இப் படத்தில் கே. பி. சுந்தராம்பாள், எல். நாராயண ராவ், சுப்பு, சுந்தரிபாய் ஆகியோர் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர்.

ஏழை படும் பாடு

பக்ஷிராஜாவின் "ஏழை படும் பாடு" தமிழ் வருஷப் பிறப்பன்று திரையிடப்படுமாம். ராம்னுத் டைரெக்ஷனில் உருவாகியுள்ள இப் படத்தில் நாகய்யா, எஸ். ஆர். ஜானகி, குமாரி வனஜா, சிறுகளத்தூர் சாமா, என். சீதாராமன் முதலியோர் நடிக்கின்றனர். இப் படத்தில்சேர்க்கப்போகும் ஒரு நாட்டியத்தில் ஆடுவதற்கென்று பாரிஸிலிருந்தே சில அழகிகள் வரப் போவதாகத் தெரிகிறது.

வனசுந்தரி

நக்ஷத்திர நடிகர் பலர் தோன்றும் கிருஷ்ணு பிக்சர்ஸின் "வனசுந்தரி" நியூடோன் ஸ்டுடியோவில் படமாகி வருகிறது. லலிதா—பத்மினி சகோதரியரது புதுமாதிரியான குறத்தி நடனம் சமீபத்தில் தயாரிக்கப்பட்டதாம். எஸ். வரலக்ஷ்மி பாடுவதற்கான சில நல்ல அருமையான மெட்டுகளைப் போட்டிருக்கிருராம்—சங்கீத டைரெக்டர் எஸ். வி. வெங்கட்ராமன். அவைகளுக்கு ஏற்றபடி கருத்து மிக்க சம்பாஷணைகளை அமைத்துக் கொடுத்திருக்கிருராம் 'கம்பதாஸன்'.

பி. கே. சரஸ்வதி

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

கல்பனா படத்தில் கேல்கார்ஜி என்றொருவர் மிருதங்கம் வாசித்து வந்தார். அவர் திருமழிசை ஆழ்வார் படத்தின் டைரெக்டர்-கேமிராமேனான கோட்னிஸின் நண்பர். கோட்னிஸ் திருமழிசை படத்திற்கு ஒரு நடன நக்ஷத்திரம் தேவையாயிருந்ததை தம் நண்பர் கேல்கார்ஜியிடம் தெரிவித்தார். கேல்கார்ஜி சரஸ்வதியைச் சிபார்சு செய்து வைத்தார். கல்பனா படம் முடிந்தவுடன் சரஸ்வதி திருமழிசை ஆழ்வாரில் நடிக்க ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டார். சரஸ்வதி இப்படத்தில் களகாங்கியின் பாத்திரத்தில் தோன்றி நடித்திருக்கிறார்.

இப்படத்தில் சரஸ்வதியின் 'ஸ்டில்'கள் பத்திரிகைகளில் வெளிவந்தவுடனேயே ரஸிகர்கள் அவரை நன்கு கவனிக்கத் தொடங்கிவிட்டனர். சரஸ்வதி இப்படத்தில் மோசமில்லாமல் நடித்திருந்தார். எனினும், இப்படம் மிகக் காலந் தாழ்ந்து வெளியாகி, தோல்வியுற்றதனால் சரஸ்வதியைப்பற்றி ரஸிகர்கள் அதிகம் தெரிந்து கொள்ளுவதற்கு இது உதவவில்லை.

ஆனால் ரஸிகர்களைப் போலவே பட முதலாளிகளும் இவரைப்பற்றி அதிகம் தெரிந்து கொள்ளாமல் இருந்து விடவில்லை. திருமழிசை ஆழ்வார் முடிந்தவுடனேயே சரஸ்வதி சேலத்தில் தயாரான மாரியம்மன் படத்திற்கு அமர்த்திக் கொள்ளப்பட்டார். அவர் இப்படத்தில் நடனம் மட்டும் ஆடியிருக்கிறார்.

டைரெக்டர் டி. ஆர். சுந்தரம் புதுப்

கற்பூர பில்லைகளில்
சிறந்தவை
ஜோதி
ஷண்முகம்
புத்தர்
திருவள்ளுவர்
மார்க்
கற்பூர பில்லைகளே

ஜோதி கற்பூரத் தொழிற்சாலை
போன் ..-4707 167 அண்ணாப்பிள்ளை தெரு, சென்னை 1

நறுமணம் கமழ்பவை!
இன்றைய ஊதுவத்திகளில் சிறந்தவை!

ஜோதி பூஜாவத்தி,
ஜோதி ஜவ்வாது,
ஜோதி கஸ்தூரி,
ஜோதி மட்டிப்பால்.

மற்றும்
இதர ரகங்களும்.

பூரண விற்பனை உரிமையாளர்:
ஆ. பொன்னுசாமி,
167, அண்ணாப்பிள்ளை தெரு,
சென்னை - 1.

புது முகங்களுக்குத் தயங்காமல் சந்தர்ப்பம் அளிப்பவரல்லவா? **மாரியம்மனில்** நடிக்க வந்த சரஸ்வதியைத் தாம் தயாரித்து வந்த **ஆயிரம் தலை வாங்கி அபூர்வ சிந்தாமணியில்** ஆடவும் நடிக்கவும் செய்தார். இப்படத்தில் செல்வநாயகம் என்ற பாத்திரத்தை ஏற்று நடித்திருக்கிறார் சரஸ்வதி. இப்படத்தில் அவருக்கு வேஷம் நன்கு பொருந்தியிருந்தது. ஆட்டமும் ரஸிகர்களால் பாராட்டப் பட்டது.

அபூர்வ சிந்தாமணி தயாராகி வந்த போது தான் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் டி. எஸ். துரைராஜ் தம் **பிழைக்கும் வழியைத்** தயாரித்து வந்தார். சரஸ்வதிக்கு இப்படத்தில் நடனம் ஆட மட்டும் சந்தர்ப்பத்தை அளித்தார் அவர். அந்த நடனம் கவர்ச்சிகரமாகவே இருந்தது.

பிறகு சரஸ்வதி மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவிலேயே **போஜன்** படத்தில் லீலாவதியாக நடித்தார். இந்தப் பாத்திரத்தை அவர் நன்கு நடித்திருந்தது குறிப்பிடத் தக்கது.

சேலத்திலிருந்து வெளி வந்த மேற் சொன்ன படங்களில் தொடர்ந்து அபிவிருத்தியுடன் ஆடிவந்ததையும், நடித்ததையும் பார்த்த ஜூபிடர் பிக்சர்ஸார் சரஸ்வதியை **வேலைக்காரி** படத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டனர். இப் படத்தில் சுந்தர் கோஷாக நடித்திருப்பவர் சரஸ்வதிதான். அவரது நடிப்பு இப்படத்தில் கச்சிதமாக அமைந்திருந்தது.

இதன்பின் சரஸ்வதி நடித்த படம் **ஆதித்தன் கனவு** ஆகும். இதில் அவர் ரத்னமாலையாக நடித்திருக்கிறார். பின்னர் அவர் **இன்பவல்லி** படத்தில் தாஸி பத்மாவாக நடித்திருக்கிறார். அவரைப் பொருத்தவரையில் நடனமும் நடிப்பும் பாராட்டக்கூடியபடி அமைந்திருக்கின்றன.

சரஸ்வதி கடைசியாக நடித்து முடித்துள்ள படம் **விஜயகுமாரி**. இப்படத்தில் அவருக்கு நடிப்பதற்கும், ஆடுவதற்கும் நிறைய சந்தர்ப்பம் அளிக்கப் பட்டிருக்கிறதாம். அவரது பாகம் நன்றாய் அமைந்திருப்பதாகக் கேள்வி. இனி, ராஜா சந்திரசேகர் தயாரிக்கும் **விதி** என்ற தமிழ்ப் படத்தில் ஒரு முக்கிய பாகத்தில் அவர் நடிக்கப் போகிறார். மற்றும் ஜூபிடரின் அடுத்த படம் ஒன்றிலும், ஸியாமளா பிக்சர்ஸாரின் படமொன்றிலும் சரஸ்வதி நடிப்பார் போலிருக்கிறது.

சரஸ்வதி நடித்துள்ள படங்களைப் பார்த்தால் ஒன்றன்பின் ஒன்றாய்—படிப்படியாய்—அவரது நடிப்பும் ஆட்டமும் சோபிதம் பெற்று வருகின்றன. எனவே, வரும் காலத்தில் அவருக்கு சினிமாவுலகில் மிகுந்த புகழ் ஏற்பட்டுவிடும் என்று நம்பப்படுகிறது.

சரஸ்வதியின் தாய்பாஷை மலையாளம். அவர் பம்பாயிலிருந்து சென்னைக்கு வந்தபோது அவருக்குக் கொஞ்சம்கூடத் தமிழ் தெரியாது. ஆனால் ஐந்தாறு மாதங்களுக்குள்ளாகவே அவர் தமிழைப் பேசக் கற்றுக்கொண்டுவிட்டார். இவை தவிர அவருக்குக் கொஞ்சம் ஆங்கிலமும், ஹிந்தியும் தெரியுமாம். கேரளத்தைச் சேர்ந்தவரா யிருந்தும் அவருக்கு நீந்தத் தெரியாது என்பதை அறிந்ததும் ஆச்சரியம் அடைந்தேன்.

சரஸ்வதியின் பெயரில் உள்ள "பி" என்ற எழுத்து "பரவேலி" என்ற பதத்தைக் குறிப்பதாகும். இது அவருடைய குடும்பப் பெயராம். தமக்கை கமலாவும் சில படங்களில் நடனம் ஆடியிருக்கிறார். இவர்களின் மூத்த சகோதரி குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறார். ஆனால் சரஸ்வதிக்கும் கமலாவுக்கும் இன்னும் கலியாணமாகவில்லை. தம்பிகள் இருவரும் சென்னையில் ஹைஸ்கூல் வகுப்புகளில் படித்து வருகின்றனர்.

சரஸ்வதிக்கு நாடக அநுபவமும் உண்டு. அவர் சென்னையில் நடத்தப்படும் சில மலையாள நாடகங்களில் அவ்வப்போது பங்கெடுத்துக் கொள்ளுகிறார்.

சுமார் ஐந்தேகால் அடி உயரமும், கவர்ச்சிகரமான தேகக் கட்டும், அழகிய உருண்டை முகமும், புறுபுறுப்

நடனம் ஆடினர்

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

தாளத்தின் அளவுகள் நன்றாக மனதில் பதிந்துவிட்டால் கச்சேரிகளில் தாளப் பிழைகளுக்கு இடமேயிருக்காது. இடைவிடாத பயிற்சியினாலும், அநுபவத்தாலுமே இதை எல்லோரும் அறிந்துகொள்ள முடியும். ஆனால் சிலர் நடனம் பயில ஆரம்பிக்கு முன்னரே இவைகளைக் கேட்டுக் கேட்டு பயிற்சியின்போதும், முதன் முதலாக ஆடும்போதும் அநுபவஸ்தர்களைப் போல் சோபிக்கிறார்கள். இதற்கு உதாரணமாக இம்மாதம் 18-ம் தேதியன்று தமிழ் இசைச்சங்க ஆதரவில், கோகலே மண்டபத்தில் அரங்கேறிய (நட்டுவனார் வீரவாகு ஓதுவாரின் புத்திரி) குமாரி வஸந்தாவின் கச்சேரி கச்சிதமான தாளக்கட்டுடன் அமைந்திருந்ததைக் கூறலாம்.

கல்யாணி ராக ஜதிஸ்வரம், நல்ல ஜதிக் கோப்புடன் அமைக்கப்பட்டு, அழகாகவும் ஆடப்பட்டது. வர்ணம், பதாபிநயங்கள், முதலியவைகளில், அங்க அசைவுகள் லாகவமாகத் தோன்றவில்லை. ரஸாபிநயம் நன்றாக பரிமளித்தது. "வெடுக் வெடுக்" என்று தலையை அசைப்பது போன்றவைகள் திருத்திக்கொள்ளப்படவேண்டிய அம்சங்கள். இயற்கையிலேயே நடனத்திற்கேற்ற நல்ல முக பாவத்தைப் பெற்றிருக்கும் வஸந்தாவுக்கு அன்று "மேக்கப்"பும் கவனத்துடன் செய்யப்பட்டிருந்தது. திருச்செந்தூர் மீனாக்ஷிசுந்தர நட்டுவனாரிடம் சிக்ஷை பயின்றவர் குமாரி வஸந்தா.

• • •

குமாரி இந்திராவின் நடனக் கச்சேரி கோகலே மண்டபத்திலேயே 19-ம் தேதியன்று, இந்திய நுண்கலைக் கழக சார்பில் நடந்தது, இந்தக் கச்சேரியிலும், தாளக்கட்டு நன்றாக அமைந்திருந்தது. "காலைத் தூக்கி" என்ற பாட்டுக்கும், அதற்கு முன் விருத்தத்திற்கும், ஜதிக் கோப்புகள் அழகாக அமைக்கப்பட்டிருந்தன. தில்லானாவும் கவர்ச்சியுடன் விளங்கியது.

வட இந்திய "தில்லானா", தென்னிந்திய நடனக் கச்சேரியில் புகுந்து, நிகழ்ச்சிகளின் முடிவில் ஒரு நிரந்தரமான இடத்தைப் பிடித்துக்கொண்டதுபோல், இப்போது சில புது அம்சங்களும், பாட்டுகளும் நிகழ்ச்சியில் நிரந்தர இடம்பெற முயலுகின்றன. இவற்றுள் ஒன்றான பாம்பாட்டி நடனம் கடைசி இடத்தை விரும்புகிறது போலிருக்கிறது. அநேக கச்சேரிகள் பாம்பாட்டி நடனத்துடனேயே முடிவடைகின்றன. இந்தப் பகுதியை குமாரி இந்திரா, நல்ல ரஸ பாவங்களுடன் வெகு அழகாக ஆடிக்காட்டினார். வைத்தீஸ்வரன் கோயில் மஹாதேவப் பிள்ளையின் நட்டுவாங்கமும், ஸ்ரீமதி பத்மாஸினி, காமேஸ்வரன், இவர்களின் வாய்ப் பாட்டும், நல்ல பக்க வாத்தியமும், கச்சேரியை மேலும் சோபிக்கச் செய்தன. பத்மாஸனியும், காமேஸ்வரனும் தனித்தனியாகப் பாடும்போதும் நன்றாக இருந்தது.

பான கண்களும் உடைய சரஸ்வதி சிவந்தமேனியைப் பெற்றவர். அவருக்கு இப்பொழுது வயது பதினெட்டு முடிந்து பத்தொன்பது நடந்து வருகிறது. அவர் 1932ம் வருஷம் ஜனவரி மாதம் 27ந் தேதியன்று பிறந்தவர்.

"பரணியில் பிறந்தோர் தரணி ஆள்வர்" என்று சொல்லுவர். இது உண்மையானால், பரணியில் பிறந்த சரஸ்வதிக்கு பூவுலகத்தை ஆளும் பாக்கியம் கிடைக்காமற் போனாலும், சினிமா உலகத்தில் 'ராணி'யாக விளங்குவதற்கான யோக்கியதாம்சங்கள் இருக்கின்றன. அவர் கொண்டுள்ள ஊக்கம் தளராமல் உழைத்தாரானால் இதென்ன ஆக முடியாத பெரிய விஷயமா?

குண்டூசி டைரி

பிப்ரவரி, 1950

தேதி

2. ரேவதி புரொடக்ஷன்ஸின் ''கேரள கேஸரி'' (மலையாளம்), ''பாஞ்சாலி சபதம்'' (தமிழ்) ஆகிய இரு படங்களின் ஆரம்ப பூஜை விழா ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் நடைபெற்றது.

4. லலிதா-பத்மினி சகோதரியர் தங்களது புதிய பங்களாவின் கிரஹப் பிரவேச விழாவைக் கொண்டாடினார்கள்.

7. தென்னிந்திய சினிமா ஊழியர் சங்கக் கூட்டம் நடைபெற்றது.

10. ''ரத்னகுமார்'' சென்னையில் இரு தியேட்டர்களில் திரையிடப்பட்டது.

16. அம்பாள் பிக்சர்ஸின் ''காஞ்சனமாலா'' படத்தின் ஆரம்ப பூஜா விழா மைசூர் நவஜோதி ஸ்டுடியோவில் நடைபெற்றது.

19. கும்பகோணத்தில் பேபி விஜயலக்ஷ்மியின் அரங்கேற்றல் நடைபெற்றது.

சினி டெக்னிஷியன்கள் சங்கத்தின் சார்பில் டைரெக்டர் ஏ. எஸ். ஏ. சாமி ''நானும் ரஸிகர்களும்'' என்பது பற்றிப் பேசினர்.

22. இந்திய சர்க்கார் செய்திப்பட இலாகாவின் ''காஷ்மீர் பள்ளத்தாக்கு'' என்ற செய்திப் படமும், வேறு சில செய்திப் படங்களும் வெல்லிங்டன் டாக்கீஸில் பத்திரிகைக்காரர்களுக்குக் காட்டப்பட்டது.

24. ஜெமினி ஸ்டுடியோவில் ஒரு தீ விபத்து ஏற்பட்டது.

25. பாலாஜியின் ''லைலா மஜ்னு'' தமிழ்ப் படத்தின் பத்திரிகைக் காட்சி நியூ டோன் ஸ்டுடியோவில் நடைபெற்றது.

26. சத்குரு சங்கீத வித்யாலயத்தின் முதலாவது ஆண்டு விழா நடைபெற்றது.

சினி டெக்னிஷியன்கள் சங்கத்தின் ஆதரவில் ''நானும் டெக்னிஷியன்களும்'' எ[illegible]பது பற்றி பி. எஸ். ராமையா பேசினர்.

27. சி[illegible]மா சிப்பந்தி[illegible] நால்வர் [illegible]ண்ணாவிரதம் தொடங்கினர்.

28. [illegible]மா சிப்ப[illegible]ள் உண்ணாவிரதத்தை நிறுத்தினர்கள்.

[illegible] by P. Arunachalam at Commercial Printing & Publishing House, [illegible] Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. [illegible]OPAL (Gundoosi), at 25, Godown Street, Madras-1. Telephone: 431[illegible]

வெளி வந்துவிட்டன!

நக்ஷத்திர மாலை - 1

(திருத்திய புதிய நான்காம் பதிப்பு)

முந்திய பதிப்புகளைவிட இதில் அதிக விஷயங்கள் உள்ளன

கண்ணும்பா, ராஜகுமாரி, புஷ்பவல்லி, ஜீவரத்தினம்,
சுந்தரி பாய், நாகய்யா, சின்னப்பா, சிறுகளத்தூர் சாமா
முதலிய 21 பிரபல நக்ஷத்திரங்களின்
வாழ்க்கை வர்ணனை கொண்ட புஸ்தகம்

விலை ரூ. 2—0—0. தபாலில் பெற ரூ. 2—6—0.

முன் பணம் அனுப்பவும்

நக்ஷத்திர மாலை - 2

(திருத்திய புதிய மூன்றாம் பதிப்பு)

முந்திய பதிப்புகளைவிட இதில் அதிக விஷயங்கள் உள்ளன

பாகவதர், கிருஷ்ணன் - மதுரம், கே. சாரங்கபாணி,
எம். கே. ராதா, ராஜம்மா, ருக்மணி, வஸந்தகோகிலம்
போன்ற 21 பிரபல நக்ஷத்திரங்களின்
வாழ்க்கை வர்ணனை கொண்ட புஸ்தகம்

விலை ரூ. 2—0—0. தபாலில் பெற ரூ. 2—6—0.

முன் பணம் அனுப்பவும்

வேண்டுவோர் எழுதுக :

குண்டூசி காரியாலயம்

25, கிடங்குத் தெரு :: சென்னை-1.

GUNDOOSI March 1950 Regd. No. M. 4924



THAT *Fulfils* YOUR NEEDS IN PRINTING

முயற்சி வீணாவதைத் தடுக்கலாம்

அழகாக அச்சடிப்பது ஒரு தனிக் கலை. அதற்கு நீண்ட நாள் அனுபவம் அவசியம். நானாவித அச்சு வேலைகளிலும், சிறந்த பிளாக்குகள் தயாரிப்பதிலும் எங்களுக்குள்ள பரந்த அனுபவத்தை உபயோகித்துக்கொண்டு, உங்கள் முயற்சி வீணாவதைத் தடுக்கலாம்.

PHONE 4037

COMMERCIAL PRINTING & PUBLISHING HOUSE..
(PRINTERS & BLOCKMAKERS)
46, ARMENIAN ST... MADRAS

murli